# கல்கி

KALKI 2.6.96 ரூ. 3.00



ஸ்ரீ


# திரு.வி.க.நகர் பெனிஃபிட் ஃபண்டு லிமிடெட்


தலைமை அலுவலகம் : 10, 2வது தெரு, ஆண்டாள் அவின்யு, (திரு.வி.க. நகர் பஸ் நிலையம் அருகில்), சென்னை - 600 082. போன் : 5378690

பாரீஸ் கிளை : 8/2, ஸ்ட்ரிங்கர்ஸ் தெரு, சென்னை - 600 108. போன் : 565760

தி. நகர் கிளை : 20, ரங்கநாதன் தெரு, சென்னை - 600 017. போன் : 4344324

அண்ணா நகர் கிளை : AC-38, 4வது தெரு, KHM ஆஸ்பத்திரி பின்புறம், அண்ணா நகர், சென்னை-40.

**பாதுகாப்பான முறையில் சேமித்து வளருங்கள்**

## திருமூர்த்தி பாண்டு

| முதலீடு | காலம் | முதிர்வு தொகை |
|---|---|---|
| ரூ. 20,000 | 5 ஆண்டு | ரூ. 60,000 |

## வசந்தம் பாண்டு

| முதலீடு | காலம் | முதிர்வு தொகை |
|---|---|---|
| ரூ. 7,000 | 40 மாதம் | ரூ. 14,000 |

## பென்ஷனர் வைப்பு நிதி

| முதலீடு | காலம் | வட்டி |
|---|---|---|
| ரூ. 10,000 | 1 ஆண்டு<br>2 ஆண்டு<br>3 ஆண்டு | 21% |

★ பென்ஷனர், ஓய்வு பெற்றோர், முதியோர் (50 வயதிற்கு மேல்), விதவைகள், ஊனமுற்றோர் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

★ பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும்.

## பென்ஷனர் மறுமுதலீட்டு திட்டம்

| முதலீடு | காலம் | முதிர்வு தொகை |
|---|---|---|
| ரூ. 5,000 | 1 ஆண்டு<br>2 ஆண்டு<br>3 ஆண்டு<br>40 மாதம் | 6,157<br>7,582<br>9,337<br>10,000 |

## எக்செல் பாண்டு - A திட்டம்

| முதலீடு | காலம் | வட்டி |
|---|---|---|
| ரூ. 9,000 | 2 ஆண்டு | 21% |
| பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும் | | |

## எக்செல் பாண்டு - B திட்டம்

| முதலீடு | காலம் | முதிர்வு தொகை |
|---|---|---|
| ரூ. 9,000 | 2 ஆண்டு | ரூ. 13,648 |

**சிறப்பு ஊக்கத்தொகை**

**1%**

**ரூ.5000 அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு அதற்கு மேலும்**

★ சேமிப்பு திட்டம் 12% வட்டி நாள் கணக்கில் வட்டி கணக்கிடப்படும்.

★ தங்க நகைகள் பேரில் ஒரு சவரனுக்கு ரூ. 2400 வரை கடன் வழங்கப்படும்.

★ சென்னை மாநகர வீடு/ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும். குறைந்த வட்டி. கடன் மிக விரைவாக வழங்கப்படும்.

★ பங்குதாரர்களுக்கு மட்டும்

★ ரூ.10 செலுத்தி பங்குதாரர் ஆவீர்.

## வேலை நேரம்

தலைமை அலுவலகம் : 9 முதல் 5, ஞாயிறு 9 முதல் 1

கிளைகள் : 10 முதல் 5, ஞாயிறு 10 முதல் 1

உணவு இடைவேளை இல்லை. செவ்வாய் விடுமுறை.

# “அழகுன்னா அது கஜோல்தான்!”


சுப்ரியா:



ஒரு ஹிந்திப் படம் சென்னையில் முப்பது வாரங்களைக் கடந்து, இன்னும் ஹவுஸ் ஃபுல்லாக ஓடிக்கொண்டிருக்கிறது! தில்வாலே துல்ஹனியா லே ஜாயேங்கே. (நேரடியாகத் தமிழாக்கினால் ‘மனசுக்குப் பிடிச்சவன் கொள்ளை கொண்டு போயிட்டான்’ என்று அர்த்தமாகும்!)



ராஷ்மி:



நிறைய பிளஸ் பாயின்ட்டுகள் உள்ளன என்றாலும் – ஒருமுறை அல்ல, இருமுறை அல்ல... நேர்ந்து கொண்டாற்போல இந்தப் படத்தை ஏழு தடவை, எட்டு தடவை என்று, பார்த்தவர்களே மறுபடி மறுபடி படம் பார்க்க வருகிறார்கள். அப்படித் திரும்பத்திரும்பப் பார்க்கச் செய்கிற விஷயம் எது என்று மெலடி தியேட்டரில் படம் பார்க்க வந்த சிலரிடம் கேட்டோம்.

எம்.அருள்:





பி. பிரபாகர்:



ஜி.மணி:

பி. பிரபாகர்:

ஆறாவது தடவையா இந்தப் படம் பார்க்கறேன். காரணம் – படத்தோட கிளைமாக்ஸ். சாதாரணமா லவ் ஸ்டோரின்னா, அப்பா-அம்மாவை எதிர்த்துட்டுப் போய் கல்யாணம் பண்ணிப்பாங்க. இந்தப்படத்துல முதல்லேருந்தே பேரன்ட்ஸ் பர்மிஷனோடத்தான் கல்யாணம் நடக்கணும்னு ஹீரோ உறுதியா இருந்து, அதனால வர்ற பிரச்னைகளை சந்திச்சி,




• குறையாத கூட்டம்...

வெற்றி அடையறது வித்தியாசமானது. அப்படியே மனகல நிக்கற படம்.

**எம்.அருண்:**

**த**னியா சொல்ல என்ன இருக்கு? படத்துல எல்லாமே நல்லா இருக்கு. எல்லாமே பிடிச்சிருக்கு. செக்ஸ் கிடையாது. வயலன்ஸ் கிடையாது. அருமையான பாடல்கள். ஏன்னே தெரியலை... இப்ப அஞ்சாவது முறையா பார்த்துட்டு வரேன்.

**ஜி.மணி:**

**சி**ன்னச் சின்ன விஷயங்களையெல்லாம் பளிச்சுனு மனகல நிக்கற மாதிரி செஞ்சிருக்காங்க. அதான் இந்தப் படத்தோட பெரிய பிளஸ் பாயின்ட். குறிப்பா அந்த புறாவுக்குத் தீனிபோடற சீன்... ரொம்ப மைல்டான காமெடி! அதேபோல காஜோலைத் தேடிட்டு ஷாருக்கான் வரும்போது அவங்க வீட்டுல யாரும் இருக்க மாட்டாங்க. ஊருக்குப் போயிருப்பாங்க. வாசல்ல, ஷாருக் வாங்கிக் கொடுத்த மணி மட்டும் தொங்கும். அதப் பார்த்துட்டு அவர் காட்டற அந்த சந்தோஷ எக்ஸ்பிரஷன்... நாலு தடவை பார்த்தேன். இதுக்காகவே.

**பி. சிவா:**

**ஹ்**யூமர் தான் படத்துல பெரிய விஷயம். ஷாருக்கான் பெயிலாயிட்டு வருவார். அப்ப அவங்கப்பா, அவங்க முன்னோர் போட்டோக்களையெல்லாம் காட்டி, யார் யார் எத்தனாங்கிளாஸ்ல பெயிலானாங்கன்னு சொல்லி, "நீ காலேஜ் வரைக்கும் வந்ததே பெருமை"ன்னுவார் பாருங்க... தூள்!

**என். மகேஷ்:**

**ரொ**ம்ப நாளா நினைச்சுட்டே இருந்தேன். இப்பத்தான் டயம் கிடைச்சது. பாடல்களைக் கேட்டுக்கேட்டு, ரொம்பப் பிடிச்சுப்போயி, எப்படி எடுத்திருப்பாங்கன்னு பார்க்கறதுக்காகத்தான் வந்தேன்.



என். மகேஷ்:

**எஸ். சாரதா:**


**நா**லாவது தடவையா பார்க்கறேன். முதல்ல அப்பா, அம்மாவோடு. அப்புறம் சில உறவினர்களோடு. பிறகு நண்பர்களோடு. யாரோடு வேணுமானாலும் கூச்சமில்லாமல் பார்க்கலாம், அப்படீங்கறது தான் இந்தப்படத்தோட ஸ்பெஷாலிட்டி.



எஸ். சாரதா:

**சுமங்களா :**

**நா**ன் ஷாருக்கானோட தீவிர ரசிகை. அவர் படம், ஒண்ணு விடமாட்டேன்! அதேபோல அழகுன்னா அது காஜோல்தான். பயங்கர க்யூட்! பார்த்துட்டே இருக்கலாம்!



சுமங்களா

**சுப்ரியா:**

**டா**ச்சிங்கான காட்சிகள். நல்ல லொக்கேஷன்ஸ். மெல்லிய ஹ்யூமர். இதான் படத்தோட சிறப்பு. செகன்ட் டைம் பார்க்கறேன்.



பி. சிவா:

**ராஷ்மி:**

ரொம்ப நீட் பிக்சர்! காஜோல் 'கண்'ணுக்காகவே எத்தனை தரம் வேணா படம் பார்க்கலாம்.

தொகுப்பு : **துளசி**

படங்கள்: **ஸ்ரீஹரி.**


ஆடமொக்கிரசி!
இங்கு கூடியிருக்கும் வேட்பாளப் பெருமக்களே! என் ஆட்டை உங்களில் யாருக்குப் போடுவது என்பதைக் குலுக்கல் முறையில் தீர்மானிக்கவே இந்தப் பொதுக்கூட்டம் ஏற்பாடாகியுள்ளது...
என்னாங்க இது! தேர்தல் அதிகாரி ஊருக்குள்ள நுழைஞ்சி 'ஆடு டிக்கெட் குறையுதே' ன்னு பஸ் கண்டக்டர் மாதிரி தேடிக்கிட்டிருக்காரு!
இந்த ஊர்ல அவர் இருக்கிறதான் வாக்காளராம்.. மத்தவங்கெல்லாம் வேட்பாளருங்க!
... அதுக்கவே, அனுதாபத்தை அவர்களுக்கும் வோட்டை எனக்கும் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்!
லெக்ஷன் பூத் நம் 18
சார்! இவரைப் பாருங்க! ஓட்டுப் புத்தகத்தை விரிச்சி எடுத்துப் போய் படிச்சிபுட்டுதான் ஓட்டுப் போடுவேனாம்..
..அடம் பிடிக்கிறாரு!
வாக்காள அன்பர்களே! ஏமாந்துவிடாதீர்கள். நம் சின்னம் 'நாய்' தான்..
..நன்றிகெட்ட நாராயணன்தான் 'நாய் வால்' சின்னத்தில் நிற்கிறான். ஆகவே நாய் மேல் மட்டுமே முத்திரை குத்தி என்னை வெற்றி பெறுமாறு செய்ய வேண்டுகிறேன்!





• பால்ராஜ்



• சாயி



• பூர்ணிமா



• காசி

சமீபகால சினிமாக்களில் ஆடைகள், நடிக-நடிகையரை விடவும் அதிகம் கவர்வனவாக இருக்கின்றன. (அரைகுறை வகையறாக்களைச் சொல்லவில்லை) பம்பாயில் மனீஷா போட்டு வந்த அந்த வெள்ளிநிறப் பாவாடை-சட்டையும் முத்துவில் ரஜினி சட்சட்டென்று மாற்றிய இல்லானா பைஜாமாவும் நேற்று வந்த இந்தியனில் கமலோடே சேர்த்துப் பேசப்படுகிற அந்த 'மாய(ா)' ஆடைகளும்... இன்னும் நிறைய சொல்லலாம்.

இளவட்டங்களின் ஆடை நாகரிகத்தை நிர்ணயிப்பது சினிமா ஃபேஷன்கள்தாம் என்னும் போது அந்த சினிமா ஆடைகளைக் கலைக்கண்ணோடு உருவாக்குகிற பிரும்மாக்களைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? சில முன்னணி காஸ்ட்யூமர்களைத் தேடிப் பிடித்துப் பேசினோம்.

• பம்பாய் : காட்சிக்குப் பொருத்தமாக....

**சாயி :**

**ர**ஜினி தொடங்கி குஷ்பு, மீனா, ரோஜா, நக்மா, விஜயசாந்தி, ரம்பா, சௌந்தர்யா என்று ஏராள நட்சத்திரப் பட்டாளங்களின் தையற்கலைஞர் இவர்.

"ஒரு படத்தில், ஹீரோவுக்கு உடை தைக்க வேண்டுமென்றால், படத்தில் அவர் கேரக்டர் என்ன என்பதிலிருந்து என்னென்ன விதமான காட்சிகள், பின்னணிகள் என்பது வரை காஸ்ட்யூமருக்குத் தெரிவிக்க வேண்டும். ஒரு நீள டிஸ்கஷனே அவசியம். ஆனால் பெரும்பாலும் கால அவகாசம் மிகக் குறைவான நிலையிலேயே எங்களிடம் வருவார்கள். முத்துவில் 'தில்லானா' பாடலுக்கு ஆடைகள் தைக்க, ஷூட்டிங்குக்கு முதல்நாள் மாலைதான் வந்து கேட்டார்கள். ஒரே இரவில் தைத்தாலும் சிறப்பாகவே அமைந்து விட்டது அது.



• சரிகா கமல்

"இதில் முக்கிய விஷயம் ஆடை சிறப்பாக இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல... நடிகர்களுக்குப் பிடித்த விதமாகவும் இருக்க வேண்டும்! ரஜினிக்கு மிக சிம்பிளாக இருந்தால்தான் பிடிக்கும். கமலோ, 'சிம்பிளாகவும் அதே சமயம் அதி நவீனமாகவும் இருக்க வேண்டும்' என்பார்!" என்கிறார் சாயி.

**பூர்ணிமா பாக்யராஜ் :**

**பா**க்யராஜின் திருமதி, தம் கணவருக்கான காஸ்ட்யூம்களைத் தாமே டிஸைன் செய்கிறார். (மிஸஸ் கமல் போலவே).

"பம்பாயில் உருவாகிற ஒரு நவீன ஃபாஷன், தில்லிக்குப் போய் அங்கிருந்து சென்னைக்கு வருவதற்குள், பம்பாயில் வேறு ஃபாஷன் கோலோச்ச வந்து விடுகிறது!" என்று வியந்தாலும் வேறு விஷயத் துக்காக லேசாக வருத்தப்படுகிறார்.

பாக்யராஜின் அடுத்தப் படமான 'ஞானப்பழ'த்தில் காஸ்ட்யூமர் பூர்ணிமாவுக்கு இன்னும் வேலையே வரவில்லையாம்!

படம் முழுக்கக் கதர் வேட்டி, ஜிப்பா!

"எந்தக் காட்சிக்கு எப்படிப்பட்ட ஆடை அணிய வேண்டும் என்பது பற்றிய பிரக்ஞையே இன்று புதிதாக வருபவர்களிடம் இல்லை. இஷ்டப்படி அணிந்து ஆடுகிறார்கள்! அதனால்தான் எதுவும் மனத்தில் நிற்பதில்லை. 'பம்பாய்' படத்தின் ஆடைகள் இன்னும் நம் மனத்தில் நிழலாடக் காரணம் - கதைக்குத் தகுந்தவாறு யோசித்து



# "ஒரு சட்டை மூவாயிரம் ரூபாய்!"

ஐதராபாத் நகரில் பல கோயில்களில், உடைக் கப்படும் தேங்காயின் நீரை அப்படியே பத்திரமாக எடுத்து அதையே கோயில் தீர்த்தமாக விநியோகம் செய்கிறார்கள்!

— ரமணிரங்கநாதன்

தேர்ந்தெடுத்திருப்பதுதான்!" என்கிறார் இவர்.

**பொன்னுச்சாமி பால்ராஜ் :**

பிரபு, சத்யராஜ் போன்றவர்களின் காஸ்ட்யூமரான இவர், காஸ்ட்யூமர்களின் நுட்பமான பணி பற்றிச் சொன்னார்.

"ஒரு சட்டைக்கு ஜிகினா வைக்கலாமா, எம்பிராய்டரி போடலாமா, அது அந்தந்த நடிகர்களுக்குப் பொருந்துமா, காட்சியோடு ஒட்டி வருமா என்றெல்லாம் யோசித்துச் செய்ய வேண்டிய பணி எங்களுடையது. படத்தின் பட்ஜெட் ஒரு முக்கிய விஷயம். ஆடைகள் 'ரிச்'சாகத் தெரிய வேண்டுமென்றால் அதற்காக மெனக்கெட வேண்டும். ஒரு சாதாரண புடைவைக்கு சரிகை சேர்ப்பதன் மூலம் பட்டுப்புடைவை மாதிரி காட்ட முடியும்தான். ஆனால் நிஜ 'ரிச்னஸ்' வேணுமென்றால் செலவு பார்க்கக் கூடாது" என்றார்.

பிரபுவுக்கு மூவாயிரம் ரூபாயில் ஒரு சட்டை தைத்திருப்பதாகச் சொன்ன பால்ராஜ், 'மஸ்தானா மஸ்தானா' பாடல், அதில் இடம் பெற்ற ஐந்து வித காஸ்ட்யூம்களாலேயே சூப்பர்ஹிட் முகாபுலா நிகழ்ச்சியில் தொடர்ந்து முதலிடம் பிடித்தது என்கிறார்!

**பி. காசி :**

"காட்டனை விட ஷிபான் புடைவைகள் தாம் நடிகைகளுக்கு அழகைக் கூட்டும். நிறங்களில் கூட, தரத்துக்கேற்ற மாறுதல் உண்டு. உதாரணமாக காட்டனில் கிளிப்பச்சை, பஞ்சு மிட்டாய் கலர் புடைவைகள் ஒவ்வொன்றை எடுத்துக் கொள்வோம். அதே நிறங்களில் ஷிபான் புடைவைகள் எடுத்தால் இரண்டுக்கும் நிச்சயம் வித்தியாசம் இருக்கும். அவை காட்டன் போலக் கண்ணைப் பறிக்காமல் இயல்பாகக் கண்களை உரசிப் போகும்" என்று டெக்னிகலாகப் பேசும் காசி, "இயக்குநர், கேரக்டரை விளக்கிச் சொன்னதும் அதைச் சரியாகப் புரிந்து கொண்டு, சிறந்த ஆடைகளைத் தயாரித்துத் தர மூளைக்கு நிறைய வேலை!" என்கிறார்.

'இந்தியன்'னில் 'கப்பலேறிப் போயாச்சு' பாடலுக்காக 2500 பேர்களுக்கு ஒரே விதமான ஆடைகள் தயாரித்திருக்கிறார் இவர்!

**சரிகா கமலஹாசன் :**

"பம்பாயில் நடிகையாக இருந்த காலத்தில் ஒரு படப்பிடிப்புக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். கணவனை இழந்த பெண்ணாக ஒரு சோகப் பாத்திரம் எனக்கு. ஆனால் காஸ்ட்யூமரோ சரிகை வைத்த புடைவையைக் கொண்டு வந்து கொடுத்து, கட்டிக் கொள்ளச் சொன்னார். நான் மறுத்து, 'இந்த கேரக்டருக்கு சரிகைப் புடைவை எப்படிப் பொருந்தும்? வேறு கொடுங்கள்' என்று கேட்டேன்.

"அவர்களுக்கு அது கௌரவப் பிரச்னையாயிற்று. 'இதுதான் உடுத்த வேண்டும். விருப்பமில்லையென்றால் நீங்கள் போய் வேறு செலக்ட் பண்ணிக் கொள்ளுங்கள்' என்றார்கள்.

"அவ்வளவுதான். நேரே கிளம்பி 'குரோபார்ட்' மார்க்கெட்டுக்குப் போய் செலக்ட் பண்ணத் தொடங்கியவள், அந்த வினாடியிலிருந்து முழுமையான காஸ்ட்யூம் டிசைனராகி விட்டேன்!" என்று தம் ஃப்ளாஷ் பேக்கைச் சொன்னார் சரிகா கமல்.

ஹீரோயின்களை விட, ஹீரோக்களுக்கு ஆடை தேர்ந்தெடுப்பது ரொம்பக் கஷ்டம் என்பது சரிகாவின் அபிப்பிராயம்.

"பெண்களுக்கு பாவாடை, தாவணி, மிடி, சுடிதார், சல்வார் கம்மீஸ் என்று எத்தனையோ வித உடைகள் உண்டு. ஆண்களுக்கு பேண்ட் - சட்டை மட்டும்தான். அதையே விதவிதமாக, புதுமையாகக் காட்டுவது என்பது சவாலான காரியம். 'இந்தியனி'ல் கமலுக்கு 'டாடா' பாடலுக்கு மட்டும் பதினைந்து வித உடைகள் கொடுத்திருந்தேன்!" என்றார்.

சினிமாவில், கதைக்கு ஸ்கிரிப்ட் எழுதுவார்கள். காஸ்ட்யூமுக்கு ஸ்கிரிப்ட் எழுதுபவர் சரிகாதான்.

ஒவ்வொரு படத்துக்கும் எந்த நாள், எந்த இடம், என்ன வேளை, யார் நடிகர் - நடிகை, என்ன சீன், எத்தனை பேர், யாருக்கு என்ன உடை, எத்தனை செட், டிரெஸ் நம்பர்... இப்படி விவரமாகக் குறிப்பிட்டு இருந்த ஸ்கிரிப்ட் ஷீட்டைக் காட்டினார் சரிகா.

"இந்தத் தொழிலில் என் ஆர்வம் அப்படி. மகாநதியில் கமலுக்கு ஒரு மிடில் கிளாஸ் லுக் தரவும் தேவர் மகனில் கௌதமியை நவநாகரிகப் பெண்ணாகக் காட்டவும் 'மகளிர் மட்டும்' படத்தில் ரோகிணிக்கு ஒரு அசல் வேலைக்காரி கெட் அப் தரவும் ("புதுப் புடைவைகள் வாங்கி தேயிலை கலந்த நீரில் ஊற வைத்து, நிறம் மங்கியதும் ஆங்காங்கே கிழித்து ஒட்டுப் போட்டு உடுத்தக் கொடுத்தேன்") மிகவும் மெனக்கெட்டிருக்கிறேன்!" என்றார் சரிகா.

— **கே.எஸ். இளமதி**

# முத்துவேல் இண்டஸ்ட்ரீஸ்

(முத்துவேல் குரூப் நிறுவனங்கள்)

பொது மக்களின் வேண்டுகோளை ஏற்று பிக்சட் டெபாசிட் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது.

## ஆண்டுக்கு

உங்கள் பிக்சட் டெபாசிட்டுக்கு கணக்கிடப்படும் வட்டி விகிதம் **24%**

குறைந்தபட்ச முதலீட்டுத் தொகை ரூ. 10,000/-

உங்கள் குமுலேட்டிவ் டெபாசிட்டுகளுக்கு முதிர்வு தொகை அட்டவணைப்படி அளிக்கப்படும்

| மாதங்கள் | ரூ. 10,000-க்கு முதிர்வு தொகை |
|---|---|
| 12 | 12,600 |
| 24 | 15,876 |
| 36 | 20,004 |
| 48 | 25,205 |
| 60 | 31,756 |

குறைந்தபட்ச டெபாசிட் ரூ. 10,000/-

- முதல் டெபாசிட்டிற்குதான் குறைந்தபட்ச தொகை. அதே பெயரில் மீண்டும் டெபாசிட் செய்தால் ரூ. 1000/- அதற்கு மேலும் அனுப்பலாம்.
- மக்கள் சேவையில் 49 ஆண்டுகள்.
- 75% வரை கடன் பெறும் வசதி.
- முதிர்வு தேதிக்கு முன்பே முழுத்தொகை தேவையானாலும் பெற்றுக்கொள்ளலாம்.
- முதிர்வு தேதிக்கு 10 தினங்கள் முன்னதாக நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்படும்.
- நம்பிக்கையும் துரித சேவையும் எமது தாரக மந்திரங்கள்.

வியாபார வளர்ச்சிக்கு கைராசியான சேவல் மார்க் பைல்களையே எப்போதும் உபயோகியுங்கள்.

**TAG FILE, CLIP FILE, LEVER FILE**
**COMPUTER FILE, FIBRE BOARD FILE, WRITING PAD.**

COCK BRAND FILE
TRADE MARK
MUTHUVEL

## MUTHUVEL INDUSTRIES

**Mfrs. of COCK BRAND OFFICE FILES**

**Angappa Chettiar Industrial Complex,**
20-A, Round Road, Post Box No. 32,
DINDIGUL - 624 001. TAMILNADU.
Ph: Off: (0451) 26850 & 27637.
Res : 26858 & 27011 Grams: COCKFILE

**உங்கள் முன்னேற்றமே எங்கள் வளர்ச்சி**

"ரிசர்வ் வங்கி சட்டம் அத்தியாயம் IIIC பிரிவு 45S-ன் கீழ் விதிக்கப்பட்டுள்ள வரம்புக்குட்பட்டு டெபாசிட்களைப் பெறுகிறோம்".

ADWAVE/MU/5247



# டெக்னாலஜி

**மா**சி வருகிறான்...

'சாயக்கலவை இல்லாமல், வெறும் சூரிய ஒளியைக் கொண்டே துணிகளுக்கு வண்ணம் ஏற்ற முடியும்' என்று தான் கண்டுபிடித்த வித்தையை ஜப்பானியத் தலைநகரில், சர்வதேச விஞ்ஞானிகள் முன்னிலையில் நிரூபணம் செய்து இந்தியப் பெருமையை இமயத்தில் ஏற்றி வைத்த விஞ்ஞானி – என் இனிய மாசி – அதோ அந்த ரயிலில் வருகிறான்....

விடிந்தும் விடியாத பனிபோர்த்திய காலைப் பொழுதில் கம்பன் எக்ஸ்பிரஸ் வந்து நிற்கவும், துண்டும் மாலையும் கைகளில் ஏந்திக் காத்திருந்த ஊரும் உறவும் சூழ்ந்து கொள்ள –

வண்டியை விட்டு இறங்க முடியாமல் திணறிப்போனவன், கூட்டத்தில் என்னைக் கண்டுபிடித்து தோளில் கை ஊன்றி 'தொப்' பென்று குதித்தான்.

நிமிர்ந்த முகத்தில், கண்கள் தளும்பி கண்ணீர் முத்துக்கள்...

"ஏன் மாசி" என்றேன், பதறிப் போய்.

"மண் இந்திய மண்... இருபது வருஷப் கழிச்சு வந்தவனை தீண்ட அனுமதிக்கிற என் தாய் பூமி" என்று அந்த 'நாற்பத்திரண்டு வயசுக் குழந்தை' தேம்பிய தேம்பலில், வரவேற்க வந்திருந்தவர்கள் சிலிர்த்துப் போனார்கள்.

வந்திருந்தவர்கள் பைசக்கமையைப் பகிர்ந்து கொள்ள, ஒரு தொங்கு பையை தோளில் மாட்டிக் கொண்டு புறப்பட்ட மாசியைப் பார்க்கப் பெருமை பெருமையாய் இருந்தது.

**ர**யில்வே ஸ்டேஷனை விட்டு வெளியேறும் சமயம் –

எக்ஸ்பிரஸிலிருந்து இறக்கிப் போடப்பட்ட செய்தித்தாள் கட்டுகளை சூழ்ந்து கொண்டு பேப்பர் வாங்க முண்டியடித்த கூட்டத்தைப் பார்த்த மாசி, மகிழ்ச்சி கொப்புளிக்கச் சொன்னான் :

"தேவலயே...! நியூஸ் வாசிக்கிற ஆர்வத்தில் பேப்பர் வாங்க ரயில்வே ஸ்டேஷனுக்கே வருகிறார்கள் என்றால் இந்த இருபது வருசத்தில் இந்தியா ரொம்பத்தான் முன்னேறி இருக்கிறது..."

'களுக்'கென்று சிரித்து விட்டேன்.

"ஏன் நந்து?" என்றான்.

"இவர்களின் ஆர்வம் செய்தி அல்ல..."

"பின்னே?"

"லாட்டரி ரிசல்ட்!"

"வாட்?"

"விடியுமுன் ரிசல்ட் பார்க்கலேன்னா மண்டை வெடிச்சுடும்..."

"ஈஸ் இட்?" – மாசி ஒடிந்து போனான்.

அவன் வந்ததும் வராததுமாய், நான் 'கடை' விரித்திருக்கக் கூடாது.

**அ**ம்மா, அப்பா, வீடு – எல்லாம் பிறந்த மண்ணில் எப்போதோ மாசியை விட்டுப் போய் விட்ட விஷயங்கள்.

பள்ளி நாள் தொட்டு, அவனுக்கு பந்து மித்ரன் எல்லாம் நான்தான்.

**லைஃபான்**

மாசியின் வருகையில் அம்மா ரொம்பத் தான் பூரித்துப் போனாள்...

கை தொட்டு, கன்னம் ஒற்றி சந்தோச மிகுதியில், "ஒரு வருசம் தங்கிட்டுப் போவியா மாசி?" என்று கேட்டாள்.

"அவ்வளவு நாளெல்லாம் முடியாது பெரியம்மா! மிஞ்சிப் போனால் இந்திய வாசம் ஒரு வாரம்" என்றான்.

"ம்... என்னமோப்பா! ஆராய்ச்சி ஆராய்ச்சின்னு கல்யாண வயசைத் தொலைச்சிட்டே!" – அம்மா பெருமூச்சு விட்டாள்.

மாசி அசரவில்லை. "நானூத்தம்பது கோடில நான் ஒருத்தன் கல்யாணம் பண்ணிக்காதது பூமிக்கு ஒண்ணும் குறை இல்லே பெரியம்மா" என்றவன்,

"இப்பவெல்லாம் வெள்ளிக் கிழமை வாரச் சந்தை கூடுதா நந்து?" என்று என்னைக் கேட்டான்.

"அதுக்கென்ன! இன்னும் நூறு வருசமானாலும் கூடும் மாசி" என்றேன்.

சந்தை அத்தனை கலகலப்பான விஷயம். என்னதான் கடைத் தெரு மலிந்து விட்டாலும் கடுகு முதல் கருவாடு வரை சந்தையில் வாங்கினால்தான் திருப்தி, ஜனங்களுக்கு.

குளித்து, சாப்பிட்டு புறப்பட்டோம்.

"நாட்டுக் கோளி முட்டை.... நாட்டுக் கோளி முட்டை...."

– சந்தைக்குள் அடி வைத்ததும் எங்களை வரவேற்ற முதல் கூப்பாடு.

"அதென்ன நாட்டுக் கோழி முட்டை?" மாசி அதிசயமாய்க் கேட்டான்.

"சாதாரண கோழி முட்டைதான் மாசி. இப்பவெல்லாம் பண்ணை முறையில் வெள்ளைக் கோழி முட்டை அதிகமாய் வருவதால் கிராமத்துக் கோழி முட்டைக்கு கொஞ்சம் மவுசு. இருபது பைசாவோ முப்பது பைசாவோ முட்டை ஒண்ணுக்கு கூடுதல் விலை. ருசியும் சத்தும் அதிகம் என்று ஒரு அபிப்ராயம்" என்று தற்கால நிலையை மாசிக்கு விளக்கினேன்.

மாசி, முட்டை விற்றுக் கொண்டிருந்த முண்டாசுக்காரனை உற்றுப் பார்த்தான். எனக்கும் அவனை எங்கோ பார்த்த ஞாபகம்...

சந்தையை விட்டு வெளியே வந்ததும், "நம்ம ஜமால் எங்க இருக்கான், நந்து?" என்றான்.

"இங்கதான் மாசி. கடைத் தெருவில் அங்காடி வச்சிருக்கான்..." என்று அழைத்துக் கொண்டு போனேன்.

இருபது வருஷம் கழித்துச் சந்திக்கிற உற்சாகம்... கட்டிப் பிடிக்கிறேன் என்று மாசியைக் கசக்கிப் பிழிந்து விட்டான், ஜமால்.

"டெக்ஸ்டைல் டெக்னாலஜியே உன்னோட கண்டுபிடிப்புக்கு நன்றி சொல்லுது! மூலப்பொருள் செலவே இல்லாம – கழிவுப் பொருள் கஷ்டத்திலேர்ந்து விடுதலைன்னு படிச்சதும் அழுதுட்டேன் மாசி" என்று உணர்ச்சிவசப்பட்டான்.

அதற்குள், ஒரு வயதான அம்மா வந்து கேட்கவே, ஒரு பிளாஸ்டிக் குடத்தை விற்று முப்பது ரூபாயை வாங்கி 'கல்லா'வில் போட்டான்.

குடம் வாங்கிய மூதாட்டி நகர்வதாய் இல்லை.

"வேறென்ன வேணும் பாட்டி" என்று ஜமால் கேட்கவும் "பில்லு கொடு" என்று பதில் வந்தது.

ஒரு தாளில் முப்பது ரூபாய் என்று குறித்துக் கொடுத்து 'கிழவி'யை அனுப்பி வைத்தான்.

"அதான் பில் புக் வச்சிருக்கியே ஜமால்?" – 'விவரம்' புரியாமல் மாசி கேட்டான்.

"பில் புக்கெல்லாம் நிறைய இருக்கு மாசி. வாங்கின பணத்துக்கு கண்ணைப் பொத்துக்கிட்டு பில்லைக் கிழிக்கத்தான் வழி இல்லே..."

"ஏன்?"

"வித்த பொருள் அத்தனைக்கும் பில் போடுவதில் ஏகப்பட்ட பிரச்னை மாசி..." என்று ஜமால் விவரிக்க ஆரம்பித்த நேரத்தில் வாடிக்கையாளர்கள் வந்து விடவே, "விற்பனையைக் கவனி" என்றான் மாசி.

வந்தவருக்கு என்ன அவசரமோ... "சீக்கிரம் ஒரு பிளாஸ்க் கொடுங்க" என்று பரபரத்தார்.

சட்டென்று எழுந்து, ஷோகேஸில் ஓரமாய் இருந்த பிளாஸ்க்கை எடுத்துக் கொடுத்து, நொடியும் தயக்கமின்றி ஒரு பில்லைப் போட்டுக் கையில் திணித்து "நூத்தி இருபது ரூபாய்" என்றான் ஜமால்.

மறுபேச்சின்றி பணத்தைக் கொடுத்து விட்டு பிளாஸ்க்கை வாங்கினவர் விரைந்து சென்றதும், கோடாய் இருந்த மாசியின் புருவம் வில்லாய் வடிவம் கொண்டது...

'முப்பது ரூபாய்க்குப் போட முடியாத பில்லை நூற்றி இருபதுக்கு எப்படிப் போட முடிந்தது?' என்ற கேள்வியைத் தேக்கிக் கொண்டுதான் மாசி புருவம் உயர்த்துகிறான் என்பதைப் புரிந்து கொண்டு ஜமால் சொன்

● மதுரை அரசரடி உபமின் நிலைய அலுவலகத்தின் வாயிலில் உள்ள ஐ.என்.டி.யு.சி. சங்க அறிவிப்புப் பலகையில் சமீபத்தில் நான் படித்து ரசித்த வாசகங்கள் இதோ :

**"லஞ்சம் கொடுப்பதும் தவறு. பெறுவதும் தவறு. இந்த அலுவலகத்தில் எந்த ஊழியராவது புதிய மின் இணைப்புக்காக லஞ்சம் கேட்டால் எங்கள் யூனியன் செயலரை அணுகவும்!"**

எல்லா அரசு அலுவலகங்களிலும் இப்படி ஒரு யூனியன் இருந்தால் எப்படி இருக்கும்! ஆஹா!"

**தகவல் : வி. சிவா**

னான் :

"அது ரொம்ப நாளாய் விற்காமல் கிடந்த பிளாஸ்க் மாசி! கலர் சரியில்லை என்று போய்ப் போய் திரும்பி வந்த அயிட்டம்... இந்த மாதிரி அவசரமா வர்ற ஆஸ்பத்திரி கஸ்டமர் கிட்ட தள்ளினாத்தான் உண்டு... மறுபடியும் திரும்பி வராம இருக்கத்தான் வேலி அடைச்ச மாதிரி... பில்லைக் கிழிச்சுக் கொடுத்தேன்..."

– ஜமால் சொன்ன தொழில் தத்துவத்தில் மாசி விமர்சனமற்றுப் போனான்!

**வீ**ட்டுக்குத் திரும்பும் வழியில் மீண்டும் சந்தை குறுக்கிட்டது.

வரும்போது பார்த்த அந்த முண்டாசுக் காரன் முட்டை மொத்தத்தையும் விற்று கூடையைக் கவிழ்த்து வைத்துவிட்டு முண்டாசை அவிழ்த்துக் கொண்டிருந்த போது மாசியும் நானும் அவனை நெருங்கி விட்டிருந்தோம்.

"பக்கிரிதானே நீ?" – 'பளிச்'சென்று தன் ஞாபக சக்தியை மாசி பிரகடனப்படுத்த, 'முண்டாசு' பயந்து போனான்.

"நீங்க... நீங்க" ஏனோ உதறல் அவனிடம்.

"பயப்படாதே. நான் மாசிலாமணி" என்று சொல்லி மாசி முதுகில் கை வைத்த பிறகுதான் பள்ளி நாட்கள் நினைவு வந்து 'முட்டை'யின் மூச்சு சீரானது.

"நீங்க நந்தகுமார்தானே?" என்றான் பயம் தெளிந்து என்னைப் பார்த்து.

ஆமோதித்தேன்.

"கிராமத்து முட்டையை வாங்கி டவுனில் கொண்டு வந்து விற்பதுதான் தொழிலா?" மாசி சிநேக பாவத்துடன் கேட்கவே, வந்த பதில் 'சுத்தமாக' இருந்தது.

"போயி வாங்கியாறதும் உண்டு! இங்கேயே..." கொஞ்சம் தயங்கினான், பக்கிரி.

"சும்மா சொல்லு பக்கிரி"

"...இங்கே உள்ள வெள்ளை முட்டையை மத்தூன் குப்பையில் மூடி வச்சா கூட ஒரு நாள்லே பழுப்புக் கலரா... நாட்டுக் கோழி முட்டையாட்டம் இருக்கும்... என்னமோ பொழுது ஓடுது" என்று முற்றுப்புள்ளி வைத்தவனிடம் மாசி மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை.

"வர்றேன்" – பக்கிரி விடைபெற்றுப் போய் வெகுநேரம் வரை மாசி எதுவும் பேசவில்லை.


**ப**ழைய பள்ளித் தோழர்கள் ஒவ்வொருவராய் நினைவில் கொண்டு வந்து விசாரித்துக் கொண்டே வந்த மாசி, "நம்ம ஜார்ஜ் எப்படி இருக்கான்?" என்றான்.

"அவன்தான் இப்ப ஊர்ல பிஸ்தா!"

"பிஸ்தாவா?" – மாசிக்கு இந்தப் புதிய வார்த்தைப் பிரயோகம் புரியவில்லை.

"வம்படியன் மாசி! அடிதடி... மிரட்டல்..."

"தொழில்?"



"ஏன் தலைவர் படு கடுப்பா, கோவமா இருக்கார்?"

"பழக்கதோஷத்துல 'தோல்வி கண்ட தெய்வமே வருக... வருக'ன்னு பேனர் வெச்சிட்டாங்களாம்!"

– காவேரிப்பட்டணம் சோமசேகர்

"அதுவேதான்!"

"வம்பு எப்படி சோறு போடும், நந்து?"

"போடுதே! இப்பல்லாம் கொடுத்த கடனைத் திருப்பி வாங்கவே பிஸ்தாக்கள் தயவு இருந்தாத்தான் சாத்தியம்... இன்னதுன்னு இல்லே! வீடு பிடிக்க, கொடுத்த வீட்டைக் காலி பண்ண! வேண்டாத பெண்டாட்டியை மிரட்ட, பிடிக்காத புருசனை அடிக்க எல்லாம் பிஸ்தாக்கள் கருணைதான்... அப்புறம் வம்பு சோறு போடக் கேட்கணுமா?"

சொல்லி விட்டு மாசியைப் பார்த்தேன்.

வியர்த்திருந்தான்.

'ரொம்பத்தான் கசப்பை ஊட்டி விட்டோமோ' என்றிருந்தது.

நீண்ட பெருமூச்சை வெளிப்படுத்தி விட்டு, "காலைல போன எக்ஸ்பிரஸ் எத்தனை மணிக்கு, ரிடர்ன்?" என்று கேட்டான்.

"ஒன்பது மணிக்கு மாசி" என்றவன் ரயில் என்றதும் ஞாபகம் வரவே, "நாளை இரவு கணேஷ் கான்பூர்லேருந்து வரான் மாசி" என்றேன்.

கணேஷ் என் மூத்த பையன். இதுவரை மாசி அவனைப் பார்த்ததில்லை. நிறைய வாழ்த்தும், பரிசும் அனுப்பி இருக்கிறான்.

"ஈஸ் இட்" என்ற மாசி, "அவன் எங்க படிக்கிறான்?" என்று கேட்டான், தெரியாத மாதிரி.

"இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி"

"ஜனி... இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி" என்று ஒருமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டு, "இந்த பக்கிரி, ஜமால், ஜார்ஜெல்லாம் எந்த இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியில் படிச்சவங்க நந்து?" பட்டென்று கேட்டான் மாசி.

பதில் சொல்லத்தான் தெரியவில்லை, எனக்கு!

8

கட்சிப் பேரவை நடந்து கொண்டிருந்தது. கட்சி அலுவலகத்தில் ஒரு சின்ன அறை. சற்று அகலமான 'ஹால்த்தன'மான அறை. அதன் மூலையில் சேரில் உட்கார்ந்து ரிப்போர்ட் செய்கிற மாநிலச் செயற்குழுத் தோழர். முழுக்கை வெள்ளைச் சட்டை, உருண்டை முகம். பின்னோக்கி வாரப்பட்ட தலை. கண்ணாடி அணிவதும், கழற்றுவதும் ஓர் அனிச்சை செயல் போலத் தோன்றியது. உதடுகளின் கூரையாக அமைந்த கனத்த கட்டி மீசை, முகத்திற்கு ஒரு லட்சணத்தையும் மரியாதைத் தோற்றத்தையும் ஏற்படுத்தியது.

ஆற்றொழுக்காக நிகழ்கிற பேச்சில், மெட்ராஸ் பாஷையின் வாடை. 'வந்துக்கினு... போய்க்கினு...' உறுத்தலான அந்த பாஷையை உணரவிடாமல், தோழமையான புன்சிரிப்பு. மனசுகளைத் தொட்டு, ஸ்பரிசித்து, வசீகரிக்கிற அன்பு.

பால்சாமி தனது குறிப்பேட்டில், பேசப் பேச, குறிப்பெடுத்துக் கொண்டிருந்தான். மத்திய, மாநில அரசின் செயல்பாடுகள்... புதிய பொருளாதாரக் கொள்கையின் தறிகெட்ட போக்கு... காவல் துறையின் மூர்க்கச் செயல்பாடுகள்... லாக்கப்பில் பாலியல்

# ஆணாயச் சிறகுகள்

வன்முறைகள்... நடக்கிற சாதிக் கலவரங்கள்... சிலை உடைப்புகள்... சமூக அமைதி கெடுதல்... அரசின் செயலின்மை...

மளமளவென்று குறிப்பெடுக்கிற பால்சாமி. ஒரே ஒரு காற்றாடி. அதன் முதுமையைக் கூச்சல் போட்டு அடையாளம் காட்டுகிற 'லொட, லொட' சப்தம். காற்றின் பற்றாக்குறையால் வந்த புழுக்கம். நெருக்கியடித்து உட்கார்ந்திருக்கும் தோழர்கள்.

பால்சாமிக்கு எதையும் கவனிக்கும் மன நிலையில்லை. மனம் பூராவும் 'ரிப்போர்ட்'டில் குவிந்திருந்தது. நாடியில் – புருவ ரோமங்களில் துளிர்க்கும் வியர்வைத் துளிகளைப் பெருவிரலால் வழித்துச் சுண்டுவான்.

ரிப்போர்ட் முடிந்தவுடன் "சந்தேகம் இருந்தா... கேளுங்க. வேற கேள்விகளும் கேக்கலாம்!"

பால்சாமிதான் ரெண்டொரு கேள்வி கேட்டான். அதற்குப் பதில் சொல்லும்விதமாக மேலும் அரை மணி நேரம்.

அப்புறம் மாதர்சங்க மாவட்டச் செயலாளர் தங்கம்மா. ஒல்லியான – கட்டையான தோற்றம். ஐம்பதுக்கு மேல் வயது. முதுமையின் தளர்ச்சியைக் கவனிக்க விடாத மன உற்சாகம். செயல் துறுதுறுப்பு.

இளைப்பு வந்த குரல். தொண்டைக்குள் கிசுகிசுத்து குரலின் சுணீரை பிசிறடிக்க வைக்கிறது. 'கேஸ் பூஸ்'ஸென்று இளைக்கிற சுவாசம். உணர்ச்சி பொங்கப் பேசுகிறார்.

நாடு முழுக்க நடக்கிற பாலியல் பலாத்காரங்கள். சிதம்பரம் பத்மினி, வாச்சாத்தி, சின்னையம்பதி, ராமேஸ்வரம் என்று தொடர் தொடரான பாலியல் வன்முறைகள். கற்பழிப்பு நிலையங்களாக மாறிப் போன காவல் நிலையங்கள். காமப் பிண்டமாக மட்டும் பார்க்கப்படுகிற பெண்கள். மனுசியாக மதிக்கப் படாத கொடுமை.

இதை எதிர்த்துப் போராட வேண்டிய பெண்கள். போராட விரும்புகிற பெண்கள். ஆயினும், வீதிக்கு வந்து போராடுகிற உணர்வை ஊனப்படுத்தி முடக்குகிற சமூக மதிப்பீடுகள்... ஆணாதிக்கம் உருவாக்கிய கிழட்டு மரபுகள்.

"ஆகவே... முதலில், நம்ம தோழர்கள் தங்கள் மனைவியர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும். நம்ம குடும்பப் பெண்கள் போராட்டத்துலே ஈடுபடுறதைப் பாத்தா... மற்ற பெண்கள் அதை முன்மாதிரியா எடுத்துக்கிட்டு பின்தொடர்ற துணிச்சல் வரும். வர்ற சனிக்கிழமை... நாட்டுலே நடக்குற பாலியல் வன்முறை கொடுமைகளைக் கண்டிச்சு மாநில அளவுலே மாதர் சங்க உண்ணாவிரதப் போராட்டம். மாநிலம் பூராவும் நடைபெறுகிற இப்போராட்டம் நம்ம ஊர்லேயும் நடக்கணும். அதனாலே... இங்கே உள்ள காம்ரேட்ஸ் இப்பச் சொல்லணும். உங்க மனைவியை அனுப்பணும். யார் யார் அனுப்பப் போறீக...? ம். சொல்லுங்க."

ஹால் முழுக்க கனத்த மௌனம். அறைகூவலை எதிர்கொள்ளத் தயங்குகிற இறுக்கம். இறுக்கம் உடைந்து, பரஸ்பரம் கிசுகிசுத்துக் கொள்கிற சப்த சலனம். தயக்கத்தையும் மறுப்பையும் பரிமாறிக் கொள்கிற கம்மிய குரல்கள்.

நாற்காலியில் உட்கார்ந்து விட்ட தங்கம்மா.



மேலாண்மை பொன்னுச்சாமி

எல்லாத் தோழர்களின் முகங்களையும் ஆவலோடு பார்க்கிற பார்வை. மூச்சிரைப்பின் திணறலில் முகம்.

யாரும் முன்வரவில்லையே என்கிற ஆயாசம். 'அம்மா' முகத்தில், கண்களில் ஏமாற்ற நிழல்.

பால்ச்சாமிக்கு இதையெல்லாம் பார்க்க மனசு கிடந்து சங்கடப்பட்டது. அம்மாவைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

'ஏனிப்படி பயப்படுறாங்க? ஒரு பகல் உக்கார்றதுக்கு இம்புட்டுப் பயமா...? உண்ணாவிரதம்னா... மலையைப் புரட்டுற விஷயமா? ச்சே!'

அவனுள் வெறுப்பின் வெக்கை.

"தோழர் குப்புசாமி... நீங்க என்ன சொல்றீக? உங்க சம்சாரத்தை வரச் சொல்ல முடியுமா?"

தயக்கத்தை மென்மையாக வெல்லுகிற அன்பான முயற்சியாக அம்மாவின் அணுகுமுறை.

"முடியாதும்மா..."

மன்னிப்பு கோருகிற இறைஞ்சும் குரல்.

"ஏன் காம்ரேட்?"

"கைக் கொழந்தை. கவனிக்க வேற ஆள் கெடையாது."

"ஏன்... ராக்கப்பன், நீங்க?"

"சாத்தியமில்லேம்மா..."

தங்கம்மாவின் சுருக்கங்கள் விழுந்த உதடுகளில் மெல்லிய சோகமும் ஏளனமும் கலந்த புன்னகை, மின்னி மறைந்தது.

"ஏந்தோழர்...?"

"கட்சி ஆபீஸுக்கே நா வர்றது... வீட்லே கலகம் பண்ணிட்டுத்தான். போவக் கூடாதுன்னு ஒரே தகராறு. இதுலே... அவளையும்

கூப்புட்டா... ஏங்கதை, கந்தல்தான்!"

பால்ச்சாமி அவர்களையெல்லாம் எரிச்சலாகப் பார்த்தான். ஏன் இப்படி கோழைத்தனமாக இருக்கிறார்கள்? ஒரு தோழர், தன் குடும்பத்தையும் கட்சிக் குடும்பமாக்கியிருக்க வேண்டாமா? அப்படியொரு உணர்வும், யத்தனிப்பும் இருக்க வேண்டாமா?

அவனுள் எண்ணச் சிறல்கள். தீவிரப் போக்குள்ள அவனது சுபாவ வெளிப்பாடு.

அம்மா பொறுமையிழந்துவிடவில்லை. தளர்ந்து விடவில்லை. வைராக்கிய நம்பிக்கையோடு ஒவ்வொரு தோழராக அழைத்துக் கேட்டார்.

பலர் மறுத்துவிட்டனர். சிலர் மட்டுமே சம்மதித்தனர். அதுவும் அரைகுறை மனசோடு.

விருட்டென்று எழுந்தான், பால்ச்சாமி.

'ஏதோ கேள்வி கேட்டு குறுக்கீடு செய்யப் போகிறானோ' என்கிற குழப்பமான கேள்விக் குறி, அம்மா கண்ணில்.

"என்ன... பாலு?"

"உண்ணாவிரதப் போராட்டத்துலே என்னோட மனைவி கலந்துக்குவா..."

"வெரிகுட். எல்லாத் தோழர்களுக்கும் பால்ச்சாமிகிட்டேயிருக்கிற துணிச்சலும் ஈடுபாடும் வரணும்."

அந்தப் பாராட்டு, அவனுக்குள் ஆயிரமாயிரம் பூமாலைகளாக... வைரக் கிரீடமாக...

எல்லோரும் அவனை ஒரு புதிய ஒளியோடு பார்க்கிற பார்வைகள். கண்களில் தெரிகிற பிரமிப்பும் வாழ்த்தும்...

பால்ச்சாமி மகிழ்ச்சியில் பூரித்துப் பொங்கித் ததும்பினான்.

"ஏம்... பாலு, உங்களுக்கு இப்பத்தானே மேரேஜ் ஆச்சு?"

"ஆமா... ம்மா..."

"நாலு மாசம் இருக்குமா?"

"ம்!"

"அதுக்குள்ளே அந்தப் பொண்ணை உங்களாலே கன்வின்ஸ் பண்ண முடியுமா?"

"என்னாலே முடியும்!"

"சந்தோஷம். ஆனா... உங்க மனைவியை வற்புறுத்தாதீக. அன்பாச் சொல்லுங்க. இவ்வளவு சீக்கிரத்துலே உங்க மனைவியை எப்படி கன்வின்ஸ் பண்ணியிருக்க முடியும்?"

சந்தேகமும் நம்பிக்கையின்மையுமாக அம்மாவின் கேள்வி அவனுள் முள்ளாகக் குத்தி, அவனைச் சீண்டி விடுகிற கேள்வி. அவனது தீவிரத்தையும் அவசரத்தையும் பூதமாக்கித் தூண்டி விடுகிற உசுப்பலான கேள்வி.

"இல்லேம்மா. என்னாலே முடியும். உண்ணாவிரதப் போராட்டத்துலே என்னோட மனைவி நிச்சயமா பங்கெடுப்பா. இது உறுதி!"

"ஓகே... அப்ப அது ரொம்பப் பாராட்டத்தக்க விஷயம்."

கூட்டம் முடிந்து வெளியே வருகிறபோது... மதியம் ரெண்டாகி விட்டது. பால்ச்சாமியை எல்லோரும் பாராட்ட... பாராட்டையே சிலர் கேலியும் கிண்டலுமாய் வெளிப்படுத்த...

அவனுக்குள் பூரிப்பும் பரவசமும்...

சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியேறினான். தெருவில் உருண்ட சைக்கிள். ப்ரீவீலின் இனிய இரைச்சல். அதிலும் ஃபுல் கவருக்குள் செயின் சுற்றுகிற போது வருகிற சந்தோஷமான இரைச்சல்.

பிரேமாவை நினைத்தான். மனசுக்குள் புழு ஊர்ந்தது. மனசின் நம்பிக்கைத் தளிர்களை அரித்துத் தின்கிற புழுக்கள். அரும்பிக் கனிந்த இளம்பிஞ்சுகளையும் துளைத்து உதிர வைத்து விடுகிற புழுக்கள்.

'பிரேமா... சம்மதிப்பாளா? மறுத்து விடுவாளோ...'

அதிர்வின் பரவலாக மனசுக்குள் சூழ்ந்த வெறுமை. பகீர் உணர்வு.

பிரேமா... மறுத்து விட்டால்...? 'முடியவே முடியாது' என்று முரண்டு பண்ணி விட்டால்...?

இன்று கிடைத்த பாராட்டுகளெல்லாம், பரிகாசமாகி விடாதா? கேலிக்கூத்தாகி விடாதா?

கட்சித் தோழர்கள் எல்லோருமே கைகொட்டிப் பேசிச் சிரிக்கிற கேலிப் பொருளாகி... அவமானப்படவா?

"என்ன தோழர் பாலு, அன்னிக்குப் பேரவையிலே பெரிய ஆம்பளைச் சிங்கம் போல 'நிமிர்ந்து' பேசுனீகளே... என்னாச்சு? இம்புட்டுத்தானா... உங்க வீரம்?"

"சாதிக்க முடிஞ்சவன் சவடால் பண்ணணும். ஏலாதவன் வாயைப் பொத்திக்கிட்டு கெடக்கணும்!"

"ஆமா... வாய் வீரம் பேசிட்டு தலை குனிஞ்சு நிக்குறதா... கெட்டிக்காரத்தனம்?"

அவசரப்பட்டுட்டோமோ...? பதற்றத்தில் சீண்டப்பட்டு, நிறைந்த சபையில் வாயைத் திறந்துட்டோமோ...? இன்னும் கொஞ்சம் நிதானமா இருந்துருக்கலாமோ...?

அவனுக்குள் சுயவிமர்சனமாக நீண்டு வளைகிற கேள்விகள். கேவலப்பட்டு நிற்க வேண்டியதாகி விடுமோ என்கிற பயம். மனக்கிலேசம்...

முதல் ஷோ சினிமாவுக்குக் கூட... வெளிச்சத்தில் வெளிவர மறுத்த பிரேமா...

நாலு பேர் தலைகள் தெரிந்தாலே... உள்ளுக் குள் தலையை இழுத்துக் கொள்கிற அவளது கூச்ச சுபாவம்....

யாருமில்லாத தனிமையில் – நாலு சுவர் மறைப்பில் கட்டியணைத்ததற்கே கண்ணீர் சிந்திய பிரேமா...

விடிவிளக்கு வெளிச்சத்தைக் கூட அனுமதிக்காத அவளது லஜ்ஜை...

மூன்று ரோடுகளும் சந்திக்கிற முக்கு ரோட்டில் – பல நூறு ஆண்கள் பார்வையில் உண்ணாவிரதத்தில் உட்காரச் சம்மதிப்பாளா?

**வே**ப்ப மரத்தடியில் சைக்கிளை நிறுத்திவிட்டு... ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் வந்தான், பால்ச்சாமி. களையிழந்து வறண்டு போன முகம். ஒளி யிழந்து திசை தொலைத்த கண்கள்.

வெக்கரித்த வெயிலில் கண்விழித்து வந்த பால்ச்சாமிக்குள் வீட்டு நிழல் குப்பென்று மோதியது. கண்ணே இருண்டு போன மாதிரி சூழ்ந்து கவிந்த இருட்டு. இமைகளை மூடி மூடித் திறந்த பிறகு... நிதானத்துக்கு வருகிற சூழல். மெள்ள மெள்ளப் புலப்பட்ட நிழல். நிழ லாக மாறிய கண்ணிருட்டு.

"ஏங்க... இம்புட்டு நேரம்?"

"பேரவைக் கூட்டம். கொஞ்சம் டயமா யிருச்சு."

டெக்ஸ்சரைஸ்ட் ஸாரி. கண்ணுக்குக் குளிர்ச்சியான மஞ்சள் நிறம். பீர்க்கைப் பூப் போன்ற பனிச்சென்ற மஞ்சள். அதில் நிறைய ரோஜாப் பூக்களும் நட்சத்திரம் போன்ற நெரிஞ்சுப் பூக்களும் பூத்திருந்தன. பிரேமா பார்க்க ரொம்ப லட்சணமாக இருந்தாள்.

கனிந்த கறுப்பு. கவ்வத் தூண்டுகிற கன்னக் கதுப்பு. தீண்டும்படி சீண்டுகிற குவிந்தமைந்த உதட்டு ஈரக் குழைவு. கட்டுடல் கச்சிதம்... திரட்சிமிக்க இளமைக் கொந்தளிப்பு.

அவனுக்குள் திமிறெடுத்து எழுகிற மோகத் தினவு. 'இப்பவே, இப்பவே...' என்று துடிக்க வைத்து, அவனை விளிம்பு நிலையில் தள்ளுகிற காமாக்னி.

அந்த உணர்ச்சிகளையெல்லாம் கொன்று பொய்யாக்குகிற நினைவு. 'பிரேமா சம்மதிப் பாளா.... மானம் காப்பாற்றப்படுமா?' இயல் பைக் கொல்லும் நச்சரிப்பு.

ஆர்வப் படபடப்பாய் அவனைப் பார்த்து விட்டு பின்வாங்கிக் குனிகிற அவனது கண்கள். திகைப்பிலும் குழப்பத்திலும் மிரள மிரள விழிக்கிற அவன்.

"என்னங்க... இப்புடிப் பாக்கீக?"

"ஒண்ணுமில்லே... சும்மாதான்."

''அவர் லஞ்சம் வாங்கறதை அடியோட நிறுத்திட்டாராமே?''
''ரிடையர் ஆறதை சிம்பாலிக்கா சொல்றாருப்பா!''
— சின்ன சதுபதி



"சாப்புடுதீகளா...? சோறுவைக் கட்டா?"

"ம். ஏதாச்சும் தபால் வந்துச்சா...?"

"ஒரு கார்டு வந்துச்சு. ரேடியோ ஸ்டாண்டுலே இருக்கு."

அதுவும் இதுவுமாய் முரண்படுகிற யோசனைகள். பெருமூச்சோடு கார்டை எடுத்தான். அசிரத்தையாகப் பார்த்தான். மாவட்டக் குழுக் கூட்டத்திற்கான அழைப்பு.

சட்டையைக் கழற்றினான்.

பின்பக்கம் போனான். அலுமினிய வாளியில் குளிர்ந்த நீரும், கப்பும் இருந்தது. முகம், கால், கை, கழுத்தடி, நெஞ்சு எல்லாம் நீரையள்ளித் தெளித்து, கழுவித் துடைத்தான்.

உடம்புக்கு மேல் பரவிய புத்துணர்ச்சி. மிருதுவை ஸ்பரிசிக்கிற உணர்வு, உடம்பெங்கும். புடைத்தெடுத்த தானியம் போல சுத்தத் துல்லியமாய்...

மனப்பாரம் அப்படியேயிருக்கிறது. நினைக்க நினைக்க மனசு கிடந்து அலைபாய்கிறது. அங்குட்டும் இங்கிட்டும் போக இயலாமல் - போகாமலிருக்கவும் முடியாமல் தத்தளிக்கிற நினைவுகள்.

"என்னாச்சு...? இன்னுமா உடம்பைக் கழுவுதீக?"

அடுப்பங்கரையிலிருந்து அருபமாய் பிரேமாவின் சத்தம்.

"இந்தா... 'வந்துட்டேன்."

"வாங்க சிக்கிரம். வைச்ச சோத்துலே ஈ வந்து உக்காரும்லே?"

"ம்... என்ன கொழம்பு?"

"உங்களுக்குப் பிடிச்ச ஐட்டம்!"

"என்னது?"

"வாளைக் கருவாட்டுத் துண்டு வதக்கி வைச்சிருக்கேன்!"

"நெஜமாவா...?"

அவன் முகமெல்லாம் மலர்ச்சியின் பனிச்சிடல். குப்பென்று மனசுக்குள் குதித் தெழுந்த குதூகல உணர்வுகள். முகமெல்லாம் குழந்தைச் சிரிப்பின் பிரகாசிப்பு.

வட்டிலின் முன்பு உட்கார்ந்தான். குனிந்து பார்த்தான்.

"அட... ஆமாம்... நெசந்தா..." வார்த்தைப்படுத்த முடியாத மகிழ்ச்சிக் கொந்தளிப்பில், அவன். அவளை நிமிர்ந்து பார்த்தான். இவனது மழலைத்தனமான குதூகலிப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தவளைப் போல... ஒரு தாய்மைக் கனிவோடு குறுநகை செய்தாள்.

வாளைக் கருவாடு... நெய்மீன் துண்டு என்றால் போதும், பாலச்சாமி குடியிருந்து தின்பான். "சோறு கொண்டா, கொண்டா..." என்பான். ரொம்ப ரசித்துச் சாப்பிடுவான்.

கருவாட்டுத் துண்டு கறுப்பாக எண்ணெய் மினுமினுப்பில் கிடந்தது. தொட்டுப் பார்த்தான். ஒரு இணுக்கை பிய்த்து வாயில் போட்டான். சகலத்தையும் மறந்து விட்ட கும்மாளத்தில்... அவன்.

"அய்ய! ரொம்ப டேஸ்ட்டாயிருக்கு. ஏய், இங்க வா!"

"என்ன..."

"ஒங்கையைக் கொண்டா."

"எதுக்கு?"

"அட, கொடேன்..."

அவனது மகிழ்ச்சியான கெஞ்சல். துள்ளலான கொஞ்சல். கல்மிஷமில்லாத கெஞ்சல்.

"என்ன..." என்ற செல்லச் சிணுங்கலோடு வலது கையை நீட்டினாள். இடது கையால் அவளது பூப்போன்ற கையைப் பற்றினான். மெல்ல இழுத்து... வாயில் வைத்து...

'இச்ச்' என்று முத்தமிட்டான்.

**வ**யிறும் மனசும் நிறையச் சாப்பிட்டான். சாப்பிட்டுக் கழுவிய போது.. அவனது திருப்தியில் மகிழ்ந்து கனிந்த சிரிப்போடு துண்டை எடுத்து நீட்டினாள், பிரேமா.

அதை வாங்குகிற போது.. தன் ருசியறிந்து, மனசறிந்து ஆக்கி அவித்துப் போட்டு மகிழ்கிற அவளது கரங்களைப் பற்றி, மெல்ல இழுத்து மார்போடு அணைத்தான். ஒளிவிடும் முகத்தைப் பார்த்தான். கனிந்த மனசின் வடிவமாய். தனது உயிரின் நிறைவில், உயிர் துள்ளுகிற ஆத்மாவின் அழகாய் பிரகாசிக்கிற அவள் முகம்.

அவனுள் நறுக்கிடுகிற குற்றஉணர்ச்சி.

''உண்ணாவிரதத்துல போய் உக்காரு'' என்றால் இந்தப் பூமுகம் என்னாகும்? எப்படிக் கதறியழும்? 'ஐயோ... எனக்கா இந்தத் தண்டனை' என்று எவ்வாறு புலம்பியழும்?

'அடக் கொடுமையே... இந்தப் பூச்செண்டை அடிக்கவா செய்றது? அதுவா நியாயம்?'


ஆனால்... ஆனால்..

'உங்களாலே முடியுமா' என்று தங்கம்மா சந்தேகித்த போது, 'என்னாலே முடியும்' என்று சவடால் அடித்த வீரம். வந்த பாராட்டுக்களை, நிறைந்த சபையில் வாங்கிக் கொண்ட வேகம்.

அதுவே... ஒரு தார்மீக நிர்ப்பந்தமாய் இவனை நெருக்குகிற நிஜம்.

இவன் முகமாற்றத்தைக் கவனிக்காமல், எச்சில் தட்டை எடுத்துச் சென்றாள், பிரேமா.

(தொடரும்)






1996 ஜூன் 2
தாது வைகாசி 20
மலர் : 54
இதழ் : 44

**கல்கி**

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




# ஆடிப் போயிருக்கிறார் வாஜ்பாய்!

இந்தத் தலையங்கத்தை வாசகர்கள் படிக்கின்ற நேரத்தில், பி.ஜே.பி. அரசின் தலைவிதி தெரிந்து போயிருக்கும். நம்பிக்கை வாக்கெடுப்பின் முடிவு அக்கட்சிக்கு எதிராகப் போனால் ஆச்சரியமேயில்லை. தலையங்கம் எழுதப்படுகின்ற நேரத்தில், அவையின் நம்பிக்கையைப் பெற்றுத் தரக்கூடிய எந்த நடவடிக்கையும் பி.ஜே.பி. தரப்பில் தென்படவில்லை.

மாறாக, நடந்துள்ள நிகழ்ச்சிகள் யாவும் பி.ஜே.பிக்கும் சரி, பிரதமர் வாஜ்பாய்க்கும் சரி, பெருமை சேர்ப்பனவாக இல்லை.

மக்களவைத் தலைவர் தேர்வில் காங்கிரஸுக்கும் ஐக்கிய முன்னணிக்கும் ஒத்து ஊத வேண்டிய நிலையில் இருக்கிறது பி.ஜே.பி. இதுவே கட்சியினுடைய பலவீனமான நிலைமையின் முதல் அறிகுறி.

ஊரகப் பணிகள் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சராக நியமனமான சிகந்தர் பக்த், தமக்குப் பெரிய பொறுப்பு தரப்படவில்லை என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ள, அவசர அவசரமாக வெளியுறவுத் துறை பொறுப்பைக் கூடுதலாக அவருக்கு





அளித்திருக்கிறார் பிரதமர் வாஜ்பாய். ஒரு சிறிய அமைச்சரவையையே கட்டுக்குள் வைத்துக்கொள்ள இயலாத அளவுக்கு பலவீனமாக இருக்கிறார் பிரதமர். பரந்து விரிந்த இந்த பாரத நாட்டின் நிர்வாகப் பொறுப்பை அவர் எப்படித் தாங்குவார் ?

பிரதமரைச் சுயமாகச் சிந்தித்துச் செயல்பட கட்சி மேலிடம் அனுமதிக்கவில்லை என்பது தெளிவு. அமைச்சரவை நிறுவுவது குறித்து அத்வானியைக் கலந்தாலோசித்தே வாஜ்பாய் செயல்பட்டிருக்கிறார். ஆலோசனைக் கூட்டத்தின் போது, கட்சித் தலைவர் அத்வானி எழுந்து வெளியேறியிருக்கிறார். வாஜ்பாய் அவசரமாக அவரைத் திரும்ப அழைத்துச் சமாதானப்படுத்த வேண்டியிருந்திருக்கிறது!

இந்தச் சம்பவங்களைப் பார்க்க, பிரதமர், பி.ஜே.பி. கட்சித் தலைமையின் கைப் பாவையாகவே செயல்பட வேண்டிவரும் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியுள்ளது. இந்த நிலைமை அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கே விரோதமானது.

பி.ஜே.பியின் நடவடிக்கைகளும் அதன் அடிமட்டத் தொண்டர்களுடைய நடத்தையும் கட்சிக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை. குஜராத்தில் உட்கட்சிப் பூசல் முற்றிப் போய், ஆத்மராம் படேல் என்ற முதிய அமைச்சரை மானபங்கப்படுத்தியிருக்கிறார்கள் தொண்டர்கள். அமைச்சர்களின் கார்கள் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. அதிருப்தியாளரின் தலைவர் வகேலாவின் ஆட்களும் சரி; அவருக்கு எதிரணியினரான கேசுபாய் படேலின் தொண் டர்களும் சரி, மிகவும் அநாகரிகமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுள் பலர் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர்கள் என்பதை அவர்கள் அணிந்த பாட்ஜுகளே உணர்த்தி




யுள்ளன.

மத்தியில் பி.ஜே.பி. அரசு அமைந்த ஐந்தாம் நாளே இந்தக் கேவலம் நடந்திருக்கிறது. அதுவும் பிரதமர் வந்து பொதுக் கூட்டத்தில் பேசிச் சென்ற கையோடு நிகழ்ந்திருக்கிறது!

வாஜ்பாய் ஆடிப் போயிருக்கிறார் என்று செய்திகள் வந்துள்ளன. அவர் மிதவாதியாக இருந்தாலும் அவர் கட்சியின் பிற தலைவர்களும் தொண்டர்களும் ஹிந்துத்வ வெறியர்களாகயிருக்கிறார்கள். கட்சிக்கு வேறு பல பண்பட்ட உயர் கொள்கைகள் இருந்தாலும் அவை கண்மூடித்தனமான மதவெறியினாலும் குறுகிய நோக்கினாலும் அடிபட்டுப் போகின்றன.

இதுவே எதிர்க்கட்சிகளுக்கு மிகவும் சாதகமாகவும் அமைந்து போய் விட்டது. கொள்கை ஒற்றுமையில்லாத கட்சிகள் கூட, ஒன்றுசேர்ந்து மதவாதக் கட்சி என்று காரணம் காட்டி பி.ஜே.பியை எதிர்க்கின்றன.

ஜாதி, மதம் போன்ற குறுக்குவழிப் பாதைகளைப் பயன்படுத்தி அரசியலில் முன்னேறி நிலைக்க முயற்சி செய்வது, மக்களுக்கு இழைக்கும் மாபெரும் தீங்கு என்பது ஒருபுறமிருக்க, அந்தத் தவறான பாதைகள், சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கே கூட அழிவைத்தான் தேடித் தரும் என்பதையே இன்று இந்தியாவில் நாம் பார்க்கிறோம்.

வெளிப்படையாக இல்லாவிட்டாலும், மறைமுகமாகவும் இலைமறைகாயாகவும் இதர கட்சிகளும் ஜாதி-மதவாதத்தை வளர்த்து வருகின்றன. அந்தக் கட்சிகளும் கூட, பி.ஜே.பியின் அனுபவங்களை எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும்.

கவர் ஸ்டோரி

# மாறிவரும் அப்பாக்கள்!

'இதெல்லாம் பொம்பளைங்க சமாசாரம்' என்ற பிரசித்தி பெற்ற நல்லெண்ணெய் விளம்பரத்துக்குக் கொஞ்சநாள் முன்பு சில பெண்ணுரிமை இயக்கங்கள் எதிர்ப்பு கிளப்பின. ஆண்களுக்கும் வீட்டு வேலைக்கும் சம்பந்தமில்லை என்பது போல் தொனிக்கும் இத்தகைய தொலக்காட்சி விளம்பரங்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என்று உரக்கக் குரல் எழுப்பினார்கள்.


பார்த்தார்கள், எண்ணெய்க்காரர்கள்... விளம்பரத்தை அப்படியே உல்டா பண்ணி விட்டார்கள்! மனைவி, அலுவலகப் பணிகளில் சிக்கித் தவித்து, ஓய்ந்து, வீடு திரும்புவதாகவும், அவளுக்கு முன்பே வீடு திரும்பி விடும் கணவன், பேன்ட்-ஷர்ட்-ஷூ கூடக் கழற்றாமல் சமையல் வேலைகளையெல்லாம் அவசர அவசரமாகச் செய்து முடித்து, மனைவி வந்ததும் ஆசையாகப் பரிமாறுவது போலவும் மாற்றிவிட்டார்கள்!

விளம்பரத்தில் நடப்பது வீட்டில் நடக்குமா...? டை, ஷர்ட் சகிதம் இல்லாவிட்டாலும் லுங்கியை மடக்கிக் கட்டிக் கொண்டாவது ஆண்கள் வீட்டு வேலைகளில் உதவுவார்களா? விசாரித்துப் பார்த்தோம்.

முதல் ஜோடி, ராஷ்மி - பாலாஜி. மிகப்புதிய திருமணர்கள். புது உறவு. புதிய குடித்தனம். கூடு கட்டத் தொடங்கும் புறா ஜோடிகள் போல வேலைகளைப் பகிர்ந்து கொண்டிருந்தார்கள்.

"கணவன் - மனைவிக்கென்று தனித்தனி வேலைகள் யார் வகுத்தது? இருவரும் வேலைக்குப் போகிறோம். பணிகளைப் பகிர்ந்து கொள்வது சுமை குறைக்கும் முயற்சி தானே? விடிந்ததும் ஒருவர் காப்பி போட்டால், ஒருவர் படுக்கை மடித்து வைத்து, அறை சுத்தம் செய்வது; ஒருவர் உணவு சமைத்தால் மற்றவர் உதவி செய்வது, என்று பணிகளைப் பகிர்ந்து கொள்வது 'உதவி' என்பதல்ல; கடமை கூட" என்கிறார்கள்.

• பிம்லா பாட்லா



• பாலாஜி.



"என் மகளுக்கு வடஇந்திய உணவு வகைகள் மட்டும்தான் சமைக்கத் தெரியும். மாப்பிள்ளையோ, தமிழர். அதனால் இட்லி, தோசை வகையறாக்களை அவரே தயார் பண்ணி விடுவார். தயக்கம், பிரஸ்டீஜெல்லாம் பார்ப்பதில்லை. அவர் சமையலும் ருசியாக இருக்கும்" என்றார் ராஷ்மியின் அம்மா!




ஒருவேளை திருமணம் ஆன ஜோரில் இதெல்லாம் செய்வதன் மூலம் மனைவியைக் கவர முயற்சியா என்ற கேள்வி எழும் முன் அதைத் தவிடு பொடி ஆக்கிவிட்டார் நாம் அடுத்து சந்தித்த வைஷ்ணவா கல்லூரி

• கார்த்திகேயன்

மாணவர் (திருமண மாகாதது) கார்த்தி கேயன்.

"குடும்பத்தோடு பெண் பார்க்கப் போய் டிபன் சாப் பிடுவது, கல்யாணச் செலவுகளையெல் லாம் பெண் வீட்டார் தலையில் கட்டுவது, கல் யாணத்துக்குப் பிறகு வீட்டு வேலை, குழந்தை வளர்ப்பு இரண்டையும் மனைவிதான் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது இதெல்லாம் தூக்கி யெறியப்பட வேண் டிய கற்கால வழக்கங்கள். இன்றைய தலை முறை அப்படிச் சிந்திப்பதே இல்லை என்று அடித்துச் சொல்வேன். நான் கண்டிப்பாகச் சமையல் கற்றுக் கொள்வேன். அது அவசியம் என்றும் நினைக்கிறேன்" என்றார்.




பேச்சில் மட்டுமல்ல... செயலிலும் ஆண்கள் சாதித்துக் காட்டத் தொடங்கி விட்டார்கள் என்பது நாம் வெங்கடே சனைச் சந்திக்கச் சென்ற போது பளிச் சென்று தெரிந்து போனது.

தம் ஆறுமாதக் குழந்தையை மடியில் போட்டுக் கொண்டு ஃபீடிங் பாட்டிலில் அழகாகப் பாலூட்டிக் கொண்டிருந்தார்.

"குழந்தை வளர்ப்பு என்பது மிகவும் மகிழ்ச்சியும் பெருமிதமும் தரக்கூடிய விஷயம். ஆண் இதைச் செய்ய மறுத்தால் அது அவனுக்கு ஓர் இழப்புதான்! தவிர, குக்கர் வைப்பதோ, காய்கறி நறுக்குவதோ, குழந்தையைக் குளிப்பாட்டுவதோ கேவல மான வேலை என்று ஆண்கள் கருதத் தேவையே இல்லை."

"ஆனால் அப்படி நினைக்கும் சிலரும் இருக்கத்தானே செய்கிறார்கள்?"

"உண்மைதான். நான் ஆஸ்திரேலியாவில் இருந்தபோது ஒரு பார்ட்டிக்குச் சென்றிருந் தேன். அங்கே வந்திருந்த ஒருவரின் குழந்தை, விலையுயர்ந்த கார்ப்பெட்டை 'நனைத்து' விட, அவர் பார்த்துக் கொண்டே சும்மா இருந்தார்! கடைசியில் அவர் மனைவி வந்து குழந்தையைத் தூக்கி, சுத்தம் செய்தார்." இப்படி ஆங்காங்கே சிலர் இருந்தாலும் பெரும்பாலானோர் ஆரோக்கியமான சிந் தனை உள்ளவர்களாகத்தான் இருக்கி

றார்கள்.

நடுத்தர வயதினரான பால இரமணி யைச் சந்தித்த போது, "கல்லூரி நாட்களி லிருந்து தில்லி வானொலியில் பணியாற்றி யது வரையிலான பிரம்மச்சாரி வாழ்க்கை யில் பொறுப்பே தெரியாமல்தான் இருந் தேன்" என்று ஒப்புக் கொண்டார்.

"ஆனால் திருமணமான பின் என் வாழ்க்கை முறையே மாறிவிட்டது. ஐந்தரைக் கெல்லாம் ஆவில் பால், ஆறரைக்கு கறி காய்க் கடை, குழந்தைகளைப் பள்ளியில் விட்டு, அழைத்து வருகிற சோலி, ரஜினி ஸ்டைலில் தலைவிரித்து நிற்கும் பையனை யும் பெண்ணையும் பிடித்து எண்ணெய் தடவி, தலை சீவி விடுதல்... எல்லாம்தான் செய்கிறேன். சந்தோஷமாகச் செய்கிறேன்" என்றார்.

"இன்றைய இளைஞர்கள் மனைவிக்கு உதவுவதில் என்ன ஆச்சர்யம்? முப்பத் தைந்து வருடங்களுக்கு முன்பே என் கணவர், அவர் பணிகளையும் பார்த்துக் கொண்டு எனக்கும் எத்தனை உதவிகள் செய்வார் தெரியுமா?" என்று கேட்டார் பிம்லா பாட்லா.

"திருமணத்துக்கு முன்பே என் அம்மா வுக்கு உதவியாக கறிகாய் வாங்கி வருவது, சமையலில் சிறுசிறு உதவிகள் செய்வது, மளிகை சாமான் பிரித்து வைப்பது என்று செய்து கொண்டிருந்தேன். திருமணத்துக்குப் பின்னும் அதுவே தொடர்கிறது" என்றார் பாட்லா.

## கல்கி வாசகர்கள் கவனத்திற்கு...

கல்கி இன்டர்லிங்க் பிரைவேட் லிமிடெட் என்கிற நிறுவனம் பயணக் கையேடுகள், வர்த்தக டைரக்டரிகள் போன்றவற்றைப் பதிப்பித்து வெளியிடுவதாக நாளிதழ்களில் விளம்பரங்கள் வெளிவருகின்றன.

இது குறித்து தொலைபேசி மூலமும் கடிதங்கள் மூலமும் சிலர் எமது கல்கி பத்திரிகை அலுவலகத்துக்குத் தொடர்பு கொண்டு விசாரித்து வருகிறார்கள்.

மேற்படி கல்கி இன்டர்லிங்க் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்கும் கல்கி பத்திரிகை நிறுவனத்துக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது என்பதைத் தெளிவாக்க விரும்புகிறோம்.

எங்கள் பத்திரிகையின் பெயரை அந் நிறுவனம் பயன்படுத்துவதை எதிர்த்து சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

நிர்வாகி
**கல்கி**
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
சென்னை - 600 097.

"இது மட்டுமா?" என்று தொடர்ந்தார் பிம்லா.

"எனக்கு இரவில் சிறு சப்தம் கேட்டால் கூட விழிப்பு வந்து விடும். ஆனால் எழுந்து விட்டால் தூக்கம் பிறகு வரவே வராது. அதனால் இவர் என்னை எழவே விட மாட்டார். அந்தக் காலத்தில் (திருமணமான புதிதில்) குழந்தை அழுதால் கூட என்னை எழ விடாமல் இவரே எழுந்து ஃபீடிங் பாட்டிலில் பால் கொடுப்பார். குழந்தை, துணியை நனைத்திருந்தால் தானே பொறுமையாக மாற்றி விடுவார்" என்று மகிழ்ச்சியும் நாணமுமாகச் சொன்னார்.

முதுகைக் கட்டிக் கொண்டு கொஞ்சும் குழந்தை ரீத்துவுடன் அட்டையில் தக்காளி நறுக்கும் சிவகுமார், "சமையலறைப் பணிகளில் எனக்கு இயல்பாகவே ஆர்வம் உண்டு. மனைவிக்கு உதவி என்பது மட்டுமல்ல... எனக்கே அது பிடித்திருப்பதால் விரும்பிச் செய்கிறேன்" என்கிறார்.

சிவகுமாரின் மனைவி கார்கி, "அவருக்கு மெக்ஸிகன், சைனீஸ் உணவு வகைகளையெல்லாம் நன்றாக சமைக்கத் தெரியும். உள்ளே புகுந்து ரகளை பண்ணிவிடுவார். எல்லாம் முடித்தபின் க்ளீன் பண்ணி வைக்க மட்டும் என்னைக் கூப்பிட்டு விடுவார்!" என்றார்.

தன்னை விடவும் நன்றாகத் தம் கணவர் சமைப்பதாக கார்கி சொன்னது வியப்பாக இருந்தது. சமையல் மட்டுமின்றி, பிற வீட்டு வேலைகளிலும் சிவகுமார் உதவுவது வழக்கம் என்றார்.

நாம் விசாரித்த பல குடும்பங்களில் இவ்வாறு இனிய ஆச்சரியமூட்டும் தகவல்கள் கிடைத்தனவென்றாலும் வேறு பல பெண்கள் "ஏங்க இந்த விவாதமெல்லாம்...." என்று பூசி மெழுகி விட்டார்கள்.

"கணவர் வீட்டு வேலைக்கெல்லாம் உதவி செய்ய மாட்டார். அதை நாங்க எதிர்பார்க்கறதுமில்லை.... அதுக்காக அவங்களை விட்டுக் கொடுத்துப் பேச முடியுமா...? என்றார்கள்.

"சுயமாக டீ கூட போட்டுக் குடிக்கத் தெரியாது! என் இரண்டு குழந்தைங்களோட அவர் மூணாவது குழந்தை!" என்று சிரித்துக் கொண்டார் ஒரு பெண்மணி.

"நம்ம பாடு தேவலாம். ஏதோ ஆபீஸ் வேலைன்னு ஓரளவு சௌகரியமா செய்துட்டு வந்துடறோம். கூலி வேலைக்கும் விவசாயத்துக்கும் போய் வருகிற பெண்களை நினைச்சுப் பாருங்க... அவங்க வட்டத்துலயெல்லாம் ஆண்கள் வீட்டு வேலை செய்யறதை நினைச்சுக்கூட பார்க்க முடியாது... சேத்துல வேலை பார்த்துட்டு வீட்டுல வந்து அடுப்புப் புகை யோடவும் மன்றாடணும்..." என்று சுட்டிக்காட்டினார்கள்.

'எல்லா வேலைகளையும் பெண்களே செய்வது என்பது நடைமுறை சாத்தியமில்லை' என்பதால் ஒரு கட்டாயத்தின் பேரில் வீட்டுப் பணிகளில் வேண்டா வெறுப்புடன் உதவும் ஆண்கள்;

வீட்டுப் பணி என்பது பகிர்ந்து செய்யப்பட வேண்டிய விஷயம் என்று உள்ளத்தளவில் உணர்ந்து செயல்படும் ஆண்கள்;

கட்டாயத்தின் பேரில் ஆரம்பித்து, அதுவே பழகிப் போய் இயந்திர கதியில் செயல்படும் ஆண்கள் என்று மூன்று ரகத்தினர் இருப்பதை உணர முடிந்தது.

உலகளாவிய கணிப்புகளின்படி பெண்கள்தான் வீட்டுப் பொறுப்புகளை அதிகம் சுமக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஆணைக் காட்டிலும் பெண் ஒரு மாத காலம் கூடுதலாக உழைக்கிறாள். இதையே கொஞ்சம மாற்றிச் சொன்னால், ஒவ்வொரு ஆண்டும் ஆண்களுக்குப் பெண்களைக் காட்டிலும் ஒருமாத கால அவகாசத்துக்குக் கூடுதல் ஓய்வு கிடைக்கிறது!

இந்நிலையில், விரும்பி வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொள்ளும் ஆண்கள் மிகத் தொலைவில் தெரிகிற சிறிய விடிவெள்ளி போல என்று சொல்லலாம். அது வெளிச்சமாவதற்கு இரு தரப்பிலும் உழைப்பு நிறைய தேவை.

**— நிர்மலா சக்ரவர்த்தி**

அட்டை வண்ணப்படம் : **யோகா**



# பிச்சை கேட்டால் பத்து ரூபாய்!

**பிச்சைக்காரனுக்குப் பத்து ரூபாய் தர்மமா? இந்தக் கேள்வியை ஒரு நடிகரின் மனைவி ஒரு முறை ஜானகி அம்மாளிடமே கேட்டார்.**

ஜானகி அம்மாள் நடிகையாக இருந்தவர்; எம்.ஜி.ஆரின் மனைவி என்றுதான் பலருக்குத் தெரியும். அவருக்குப் பாடத் தெரியும்; பரத நாட்டியம் தெரியும். பரத நாட்டிய ஆசிரியையாகவும் இருந்திருக்கிறார் என்பது பலருக்குத் தெரியவே தெரியாது. பாபநாசம் சிவன் ஜானகி அம்மாளுக்குச் சித்தப்பா முறை. கலை என்பது அவருக்கு இயற்கையாகவே அமைந்த ஒரு விஷயமாகப் போய் விட்டது. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி ஆகிய ஐந்து மொழிகள் தெரியும் அவருக்கு.

எம்.ஜி.ஆரை மணந்து கொண்ட பிறகு, தமது தனித்திறமைகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு, முழுமையான குடும்பத் தலைவியாகவே மாறி, எம்.ஜி.ஆரின் ஒவ்வொரு செயலுக்கும் பக்கபலமாக நின்று தோள் கொடுப்பவராகி விட்டார்.

எம்.ஜி.ஆரின் வள்ளல்தன்மை அனைவருக்கும் தெரிந்த ஒரு விஷயம். அவரைப் போலவே ஜானகி அம்மாளும் கொடுக்கச் சளைக்காதவர். எம்.ஜி.ஆரிடம் உதவி கேட்டு வந்தவர்கள், அவர் தோட்டத்தில் இல்லையே என்று எப்போதும் திரும்பிப் போனதே இல்லை. அவர் இருந்தால் என்ன கொடுப்பாரோ, அதைவிட அதிகமாக இவர் கொடுத்து அனுப்புவார்.


உதாரணமாக, யாராவது தம் மகளுக்குக் கல்யாணம் உத்தேசித்திருப்பதாகச் சொன்னாலே போதும், உடனே கல்யாண ஏற்பாடுகளுக்கென்று பணம் கொடுப்பார். பிறகு பத்திரிகை வைக்கும்போது, கல்யாணச் செலவுக்கென்று பணம் கொடுப்பார். கல்யாணம் முடிந்த பிறகு, பெண்ணையும் மாப்பிள்ளையையும் தோட்டத்துக்கு அழைத்துச் சாப்பிடச் சொல்லி, கைவசம் நகைகள் ஏதும் இல்லாமல் போனாலும் தமது கழுத்திலிருக்கும் சங்கிலியைக் கழற்றிப் பெண்ணின் கழுத்தில் போட்டு அனுப்புவார். அநேகமாக மாதத்தில் இருபது நாட்களாவது இதுபோன்ற புதுமணத் தம்பதிகள் வந்து போவதைப் பார்க்கலாம்.

திருமணமான புதிதில் வாயிட்ஸ் ரோடில்தான் குடியிருந்தார்கள். அப்போது கறிகாய் வாங்குவதற்காக பைகல் பார்க் மார்க்கெட்டுக்குத் தினசரி வருவார், ஜானகி அம்மாள். (அப்போதே இருநூறு முந்நூறு ரூபாய்க்குக் காய்கறி வாங்குவார். அத்தனை பேர் தினசரி அவர்கள் வீட்டில் சாப்பிடுவார்கள்!) அந்தச் சமயத்தில் பிச்சைக்காரர்கள் யாராவது வந்து விட்டால் பத்து ரூபாயை எடுத்துக் கொடுப்பார். எத்தனை பேர் கேட்டாலும் பத்துப் பத்து ரூபாயாகக் கொடுக்கிறார் என்று கேள்விப்பட்டதும் அவர் மார்க்கெட்டுக்கு வரும் நேரத்தில் ஏராளமான பிச்சைக்காரர்கள் வந்து குவிய ஆரம்பித்து விட்டார்கள். போலீஸ் வந்து பிச்சைக்காரர்களின் கூட்டத்தைச் சமாளிக்க வேண்டியதாகி விட்டது. இதே நிலை தொடரவே, போலீஸ்காரர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, காய்கறி வாங்குமிடத்தை மாற்றிக்கொண்டு விட்டார்!

பிச்சைக்காரனுக்குப் பத்து ரூபாய் தர்மமா? இந்தக் கேள்வியை ஒரு நடிகரின் மனைவி ஒரு முறை ஜானகி அம்மாளிடமே கேட்டார். அதற்கு, "ஒரு மனிதன் பிச்சையெடுக்கிறானென்றால், அவனுக்கு வாழ்க்கையின் எல்லா வழிகளுமே மூடிவிட்டதாகத்தான் அர்த்தம். அப்படியொரு மோசமான நிலையிலிருக்கும் அவனிடம் போய் நாம் கணக்குப் பார்க்கலாமா? அப்படிப் பார்த்தால் நாம் அவனைவிட மோசமான நிலையில் இருப்பதாகவல்லவா ஆகிவிடும்!" என்றார், ஜானகி அம்மாள்.

எம்.ஜி.ஆர். விரும்பியிருந்தால், ஜானகி அம்மாளை விடவும் கவர்ச்சியான ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டிருக்க முடியும். ஆனால் ஜானகி அம்மாளைப் போன்ற ஒரு மனைவியை அவரால் பெற்றிருக்கவும் முடியாது; புகழின் உச்சிக்கே அவரால் சென்றிருந்திருக்க முடியுமா என்பதும் சந்தேகம்தான்!

*(எம்.ஜி.ஆர். குடும்பத்தோடு ஐம்பதாண்டுகளுக்கு மேலாகத் தொடர்பு கொண்ட எழுத்தாளர் பரந்தாமன் கூறக் கேட்டவர்: ப்ரின்ஸ்)*



வெற்றியை பிரதிபலிக்கும் நிலையான நிறங்கள்
பாம்பே டையிங்
பள்ளிச் சீருடைத்
துணி வகைகள்
வெற்றி வாகை சூட
என்றும் முன்னணியில் உள்ள
இத்துணிகள் கீழ்கண்ட
சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன...
பாலியெஸ்டர் இணைந்த பள்ளிச்
சீருடைத் துணிகள்
துவைக்க மற்றும் உடுக்க எளிதானது
நிறங்கள் மங்காது
ஒவ்வொரு சலவைக்குப் பின்னும் புத்தம் புதியது போல் தோன்றும்
சுருக்கங்கள் ஏற்படாது
உங்களுக்குத் தேவையான நிறங்களில் கிடைக்கிறது
பள்ளிப் பைகள்
காட்டனால் மற்றும் நைலான் பள்ளிப் பைகள் மிடுக்கான நர்சரி மற்றும் ஜூனியர்லெவல் மாடல்களில் கிடைக்கிறது
சாக்ஸ்
தூய பருத்தி மற்றும் நைலான் சாக்ஸ்கள் பல்வேறு வண்ணங்களில் கிடைக்கிறது. வலைபோல் பின்னப்பட்ட மற்றும் ரிப் டிசைன் கொண்ட சாக்ஸ்கள்.
அனைத்தும் உங்கள் அருகாமையிலுள்ள பாம்பே டையிங் ஷோரூமில் கிடைக்கின்றன.
SEASONS/BD/389 TAM
பள்ளிச் சீருடைத் துணிகள், ஸாக்ஸ்கள் மற்றும் பள்ளிப் பைகள்
பாம்பே டையிங்

# தலைவலி போனால் என்ன?



இருபத்தேழு வருடகாலம் அவரது பெயரை அநேகமாக யாரும் உச்சரித்ததில்லை. வெறுமனே, 'கைதி எண் 466' என்றால் போதும். அவரைத்தான் குறிக்கும்.

உலகிலேயே அதிக காலம் அரசியல் கைதியாகத் தொடர்ந்து சிறைவாசம் மேற்கொண்டவர் என்ற சாதனையோடு 1990 பிப்ரவரி பதினோராம் தேதி வெளியே வந்த நெல்சன் மண்டேலாவுக்கு தென் ஆப்பிரிக்கா சிவப்புக் கம்பளம் விரித்தது. அமோக ஆதரவுடன் அதிபரானார்.

தென் ஆப்பிரிக்காவில் நிறைய விநோதங்கள். கிட்டத்தட்ட மூனே கால் கோடி மக்கள். அதில் எழுபது சதவீதம் கறுப்பர்கள். ஆனால் நினைவு தெரிந்த நாளிலிருந்து நாட்டு நிர்வாகத்தில் எந்த ஒரு பங்கும் மறுக்கப்பட்டவர்கள். பதினாறு சதவீதமே இருந்த வெள்ளை மக்கள்தாம், நிர்வாக லகானைக் கையில் வைத்திருந்தார்கள். மண்டேலாவின் விடுதலை வரை இருந்த இந்த நிலை 1994 ஏப்ரல் 27-ம் தேதி நடைபெற்ற தேர்தலில் மாற்றப்பட்டது.

எதிர்பார்த்தபடியே மண்டேலாவின் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் அமோக வெற்றி. ஆனால் அவரால் தனியாக ஆட்சி அமைக்க முடியவில்லை. காரணம், தேர்தலுக்கு முன்பாக ஏற்பட்ட ஓர் ஒப்பந்தம்.

தென் ஆப்பிக்காவை ஒன்பது மாநிலங்களாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் பெரும்பான்மை ஆதரவைப் பெறுபவர்கள், மற்ற கட்சிகளோடு இணைந்துதான் ஆட்சி நடத்த வேண்டும். அதே போல் மத்தியிலும் இது இடைக்கால அரசியல் சட்டம் இட்ட நிபந்தனை.

1999-ம் ஆண்டு வரை இது நீடிக்கும். அதற்குள் புதிய அரசியல் சட்டம் ஒன்றை வடிவமைத்து, அரசியல் சட்ட நீதிமன்றத்திடம் ஒப்புதல் பெற்று, மக்கள் முன் வைத்து, விவாதங்கள் நடத்தி, இடைக்கால அரசியல் சட்டம் முடிவுக்கு வந்ததும் புதியதை ஏற்றுக் கொள்வது என்பது ஒப்பந்தம்.

அங்கே குறிப்பிடும்படியாக மூன்று கட்சிகள். காலம் காலமாய் ஆண்டு வந்த பெரும்பான்மை வெள்ளை இன மக்களின் தேசிய கட்சி. (நேஷனல் பார்ட்டி). முன்னாள் அதிபர் எஃப். டபிள்யூ.டிகிளர்க் இதன் தலைவர். டிகிளர்க் இப்போது மண்டேலாவுக்கு கீழ் உதவி ஜனாதிபதியாக இருக்கிறார். அடுத்தது, ஆப்ரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் மண்டேலா. மிகப் பெரும்பான்மையான கறுப்பு இன மக்களின் உயிர்மூச்சே இந்தக் கட்சிதான். மூன்றாவது 'இன்கதா விடுதலை கட்சி'. தலைவர் பெயர் மாங்கஸுது புத்லெஸி. கறுப்பர்களில், ஜுலு (ZULU) இனத்தைச் சேர்ந்த பழங்குடி மக்களின் பெரும்பாலும் ஆயுதங்களை நேசிக்கும் தீவிரவாதிகளின் இயக்கம் இது.

ஒன்பது மாநிலங்களுள் ஏழில் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் தலைமையில் மற்ற இரண்டு கட்சிகளோடும் கூட்டணி ஆட்சி. க்வாஸுலு மாநிலத்தில் இன்கதா கட்சி தலைமையில் மற்ற இரண்டும் பங்குதாரர்கள்.

மேற்குப் பகுதி மாநிலம் ஒன்றில் தேசிய கட்சி தலைமை தாங்க, மற்ற இரண்டும் அதன் கீழ். மத்தியில் மண்டேலாவின் தேசிய ஆப்பிரிக்க காங்கிரஸ் பெரும்பான்மை. அடுத்து தேசியக் கட்சி. அதை அடுத்து இன்கதா. மூன்றின் கூட்டணி ஆட்சி. இப்படி ஓடிக் கொண்டிருக்கிறது தென் ஆப்பிரிக்காவில் இன்றைய நிர்வாகம்.

இதில் இப்போது விரிசல் கண்டிருக்கிறது. புதிய அரசியல் சட்டம் வடிவமைக்கப்பட்டு விட்டது. அதில் எதிர்காலத்தில் (1999க்குப்பின்) 'இந்தக் கூட்டணி சமாசாரமெல்லாம் சரிப்பட்டு வராது... எந்தக் கட்சிக்கு மக்கள் பெரும்பான்மையாக வாக்களிக்கிறார்களோ அதுதான் ஆளும் கட்சி' என்று ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டுள்ளது.

பார்த்தார் டி கிளர்க். இது நியாயம்தான் என்று உள்ளுணர்வு சொன்னாலும், எதிர் காலத்தில் தம் கட்சிக்கு ஆட்சியில் பங்கு இல்லாமல் செய்ய மண்டேலாவின் சூழ்ச்சி இது என்றும் பயப்படுகிறார். இந்தப் புதிய அரசியல் சட்டத்துக்கு இதயபூர்வமாக இல்லாமல் ஏதோ ஒப்புக்கு தம் சம்மதத்தைத் தெரிவித்திருக்கிறார். கூடவே 'நான் இப்போதே கூட்டணியிலிருந்து விலகிக் கொள்கிறேன்' (நான் என்றால் தேசியக் கட்சி) என்றும் அறிவித்து விட்டார். ஜூன் மாதம் 30ம் தேதியிலிருந்து கூட்டணியில் தேசிய கட்சி இருக்காது.

'நாமும் வெளியேறி விட வேண்டும்' என்று இப்போது இன்கதா விடுதலைக் கட்சியும் நினைக்க ஆரம்பித்திருக்கிறது. வெளியேற்றத்தை அது விரைவில் உறுதி செய்யக் கூடும்.

மண்டேலாவுக்கு நிம்மதிதான். ஆனால் வெளியேறியவை சும்மா இருக்குமா? அதிபரை நிம்மதியாக இருக்க விட்டு வைக்குமா?

— ராணிமைந்தன்

ஸ்ரீராம்

கனவு போலத்தான் இருந்தது கிருஷ்ணனுக்கு. வர்ணங்கள் அள்ளித் தெளித்த வெட்டவெளியில், தரையில் கால் பாவாமல் மிதந்து நகர்கிறது போல. சிலீர் சிலீரென்று நினைவு மீட்டல். வருடும் ஞாபகங்கள். புயல் மாதிரி வந்து எப்படியெல்லாம் மனசைப் புரட்டிப் போட்டுப் போய் விட்டாள்? அழகுப் பிசாசு.

ஆனால் அழகு தானா அவள்? கறுப்பா? சிவப்பா? உயரமா? உருண்டை முகமா? நேர் வகிடா? பார்வை எப்படி? எரிக்கும் விதமா? உரசும் வகையா? புன்னகையில் பூ உதிருமா? புடைவையா, தாவணியா, சுடிதாரா?

"நான் யார், எப்படி இருந்தால் என்ன? இந்த நிமிஷம் டெலிபோனில் பேசிட்டு இருக்கறது பிடிச்சிருக்கு இல்லையா? அதுக்கு மேல் என்ன வேணும்?" சிலீரென்று கல்லடித்துக் கண்ணாடி உடைக்கிறது போலப் பேச்சு. நடு நடுவே களுக்கென்று மின்னல் வெட்டு.

கிருஷ்ணனுக்கு அவள் ஒரு கிராஸ்டாக்கில் மாட்டினாள். ஓர் அரைமணி நேர உணர்ச்சி மயமான உரையாடலின் உச்சத்தில் இருந்தான் அவன்.

"மிஸ்டர் பிகாரி... உங்கள் டிமாண்ட் டிராஃப்ட் வந்து சேர்ந்த மூன்றாவது நாள், நீங்கள் கேட்ட ஸாஃப்ட்வேர்களை பினாப்பியில் ஏற்றி அனுப்பியாகி விட்டது. ஏர் போர்ட் குளறுபடிகளுக்கு நாங்கள் பொறுப்பல்ல. தவிர, ஒவ்வொரு பொட்டல பார்ஸலுக்கும் எங்கள் கம்பெனி ஆள் பாதுகாப்பாக, தார் பாலைவன வளாகம் வரை வரவேண்டும் என்று நீங்கள் நினைத்தால் அது சாத்தியமில்லை. நாங்கள் ஒன்றும் சேவை நிறுவனம் நடத்தவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள் என்று நம்புகிறேன்...."

இந்தச் சமயத்தில்தான் இடையில் புகுந்து வெடித்தான் அவன்.

"மிஸ்டர் கிருஷ்ணன்... அ, அது தானே உங்கள் பெயர்? அரை மணியாக டெலிபோனை எடுத்தால் டயல் டோனுக்குப் பதிலாக உங்கள் சம்பாஷணைதான் உச்சத்தில் கேட்கிறது. வில் யூ பினீஸ் கட் இட் அண்ட் டயல் ஆஃப்டர் ஸம் டைம்? உங்கள் நண்பரை, விமான நிலைய கார்கோ வளாகத்து சாக்கு மூட்டைகளில் போய்த் தேடச் சொல்லுங்கள்...."

பிகாரி மிரண்டிருக்கக் கூடும். பட்டென்று போனை வைத்து விட்டான்.

கிருஷ்ணன் வைக்கவில்லை. வியப்பான வியப்பும் குறுகுறுப்பும் மேலும் சீண்டும் ஆவலும் உந்த, "எக்ஸ்கியூஸ் மி. நீங்கள் யாரென்று தெரியவில்லை. உங்கள் குரல் வெகு இனிமை. இன்னும் கோபப்பட்டால் இன்னும் இனிமை கூடும் என்று நினைக்கிறேன்" என்றான்.

நியாயமாக, வேறு யாரேனுமாக இருந்தால் கத்தித் தீர்த்திருக்க வேண்டும். மாறாக அவள் சிரித்துப் பூத்தாள்.

"உங்கள் உரையாடலை உடைத்ததற்காக மன்னித்து விடுங்கள்" என்றாள்.

"அது பரவாயில்லை. நியாயப்படிக்கு நான் தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். அந்த ஆளுக்கு ஒட்டகப் பால் குடித்துக் குடித்து மூளை மரத்து விட்டது என்று நினைக்கிறேன். எத்தனை சொல்லியும் புரிந்து கொள்ளாத பிரகிருதி."

மறுபடியும் அவளது பூப் புன்சிரிப்பு.

வைத்து விட்டான்.

அவனுக்கு ஆயாசமாக இருந்தது. ஆபீஸ் விட்டு வெளியே வந்தால், வெயிலும் வெயில் சார்ந்த வியாபாரங்களும். பக்கத்து எக்ஸ்போர்ட் கம்பெனியிலிருந்து சட்சட்டென்று வெளியே தலை நீட்டிப் போகும் பெண் புஷ்பங்கள். சாயம் வெளுத்த தாவணி உடுத்திய இந்தப் பெண்களுக்கு அவள் அத்தனை துணிச்சல் இருக்குமோ? 'மிஸ்டர் பிகாரி... விமான நிலைய கார்கோ சாக்கு மூட்டைகளில் போய்த் தேடிப் பாருங்கள்....'

'டெலிபோனை எடுத்தால் டயல் டோனுக்குப் பதிலாக உங்கள் சம்பாஷணை தான் கேட்கிறது.'

'வில் யூ பினீஸ் கட் இட்?'

யாரவள்?

மறுநாள் சொல்லிவைத்தாற் போல மறுபடி கிராஸ்டாக். காட்! மறுபடி அவள்!

"மிஸ்டர் கிருஷ்ணன், கிரகாம்பெல் மட்டும் என் கையில் கிடைத்தால் என்ன பண்ணுவேன் தெரியுமா?"

"ஐயோ பாவம், அந்த ஆள். டெலிபோனைக் கண்டு பிடிச்சதோட அவர் சோலி முடிஞ்சாச்சு. கிராஸ்டாக்கெல்லாம் எக்ஸ்

# அரைமுகம்



சேஞ்ச் உபயம். அஃப்கோர்ஸ், நான் அவங்க ளுக்குக் கட்டயாம் நன்றி சொல்லணும்."

"எதுக்காம்?"

"உங்கள் வாய்ஸ் தூளுங்க!" என்றான் கிருஷ்ணன்.

ஒரு கணம் தாமதித்தாள். "விட்டால் போதுமே? உயிரே, நிலவே, மலரே, மஞ்ச மேன்னு பாட்டு எழுதிடுவீங்களே?"

"சேச்சே. நமக்கு அதெல்லாம் வராது. அதிக பட்சம் தூங்கப் போறதுக்கு முன்னால் ரெண்டு நிமிஷம் கண்ணை மூடிட்டு சுய நினைவோட கனவு காணறதோட சரி."

"சரிதான். இன்னும் கல்யாணம் ஆகலை போல் இருக்கு."

"அட, ஜோசியம் தெரியும் போல் இருக்கு?"

"இதுக்கு எதுக்கு ஜோசியம்? கோடி ஜோலி காத்துக்கிடக்க, இப்படி வேலைமெனக்கெட்டு வேற யாரும் கிராஸ்டாக்கோட பேசிட்டு இருப் பாங்களாக்கும்?"

அவனுக்கு என்ன சொல்வதென்று தெரிய வில்லை. யாரிவள்? 'என்னவெல்லாம் பேசு கிறாள்? எப்படியெல்லாம் பேசுகிறாள்? பேச்சில் என்னவொரு தீர்மானம்! அழுத்தம்! தயக்கமின்மை!

"ஹலோ, உங்க பெயர்?"

"ரொம்ப முக்கியமாக்கும்."

"அப்படி ஒண்ணுமில்லை. சொல்ல வேணாம்னு நினைச்சால் வேண்டாம்."

"அப்படி ஒண்ணும் இல்லை. ரஞ்சனி. போதுமா?"

"எந்த இடம்?"

"இதானே வேணாம் என்பது? ஆசையைப் பார்! நான் வெச்சுடறேன்."

சட்டென்று போனை அவன் இதயத்தில் வைத்தாள்.

அடுத்தடுத்த நாட்களில் அவன் கிராஸ் டாக்குக்காகக் காத்திருக்கத் தொடங்கினான்.

சே! என்ன ஆயிற்று தொலைபேசி நிலை யத்தாருக்கு? இத்தனை ஒழுங்கான சேவையை யார் கேட்டார்கள்? தவிர, மறுபடி கிராஸ் டாக்கே வந்தாலும் அவளே வருவாள் என்று எப்படி எதிர்பார்க்கிறேன்? ஏன் மனசு கிடந்து அடித்துக் கொள்கிறது. இரண்டும் இரண்டுமாக நாலு நிமிஷப் பேச்சில் இதென்ன புது மயக் கம்? எதிர்பார்ப்பு? படபடப்பு? என்ன ஆகிக் கொண்டிருக்கிறது எனக்கு?

இவ்வாறெல்லாம் யோசித்துக் கொண் டிருந்த போது, "எடோ கிருஷ்ணா போன் உனக்கு. யாரோ பெண்குட்டி விளிக்கு" என்று கன்னம் வரை இழுத்துச் சிரித்து நீட்டினான் மாதவன் நாயர்.

'இப்பவும் சௌ. சுமதிக்கு சீமந்தம் பண்ண வேண்டியிருப்பதால் இந்த மாசம் ரூபா ஐந்நூறு கூடுதலாக அனுப்பு. ஆசீர்வாதம்' என்று போஸ்ட் கார்டில் எழுதி எழுதி அலுத்துப் போய் அம்மா போன் பண்ணி விட்டாளா?

யோசனையுடன் எழுந்து போய், போனை வாங்கி, "ஹலோ?"

"கடவுளே! ரஞ்... ரஞ்சனி, நீயா!"


"எதிர்பார்க்கலை இல்லை?"

"சத்தியமா!"

"விஷயம் ஒண்ணுமில்லை. ஏன் பண் ணேன்னு எனக்கே தெரியலை."

"சரிதான். என் நம்பர் எப்படி கிடைச்சது?"

"அது பெரிய விஷயமாக்கும்? உங்க ஒட்டகப் பால் ஃபிரெண்டுதான் ஏழெட்டு



* ஏற்றப்படும் ஜோதி (பழைய படம்)

# ஜோதிக்கு(ம்) நேர்ந்த கதி!

பெரும் வர்த்தக நிறுவனங்களின் விளம்பர யுக்திகளுக்கு எல்லையே இல்லை என்பதை நிரூபித்திருக்கிறது 'கோககோலா' நிறுவனம்.

வருகிற ஜூலை 19-ஆம் தேதி அட்லாண்டாவில் தொடங்கவிருக்கிற அடுத்த ஒலிம்பிக் போட்டிக்கான 'ஒலிம்பிக் ஜோதி' கடந்த மார்ச் 30-ஆம் தேதி கிரீஸில் ஏற்றப்பட்டுத் தன் பயணத்தைத் தொடங்கிவிட்டது.

எப்போதும் பல ஆயிரக்கணக்கான முன்னாள்-இந்நாள் ஒலிம்பிக் வீரர்களால் மட்டுமே தூக்கிச் செல்லப்படும் இந்தப் பயணத்தில் இந்த வருடம் இரண்டாயிரம் முன்னாள் வீரர்கள் மட்டுமே கலந்து கொள்கிறார்கள்.

மிச்சம்?

அங்கேதான் நுழைந்தது 'கோககோலா'வின் வியாபார யுக்தி.

இந்த ஜோதி சுமக்கும் பயணத்துக்கான செலவில் (20 மில்லியன் டாலர்கள்!) பெரும் பகுதியைத் தான் ஏற்றுக்கொண்டு, பணியில் எட்டாயிரம் பேர்களை-தம் நிறுவன அதிகாரிகள் உட்பட - தானே நியமித்துவிட்டது கோககோலா!

சாம்பியன், வானெஸ் போன்ற ஆடை நிறுவனங்கள், இந்த 'ரிலே'வில் கலந்து கொள்வோருக்கு ஆடைகளைத் தாம் ஸ்பான்ஸர் செய்ய, NBC நிறுவனம் இதன் நேரடி ஒளிபரப்புக்கான உரிமையை கோரிப் பெற்றுவிட....

ஒலிம்பிக் வீரர்களும் ஓட்டத்துக்கு இடையே இனி விளம்பர இடைவேளை கேட்கப் போகிறார்கள்!

— குல்லூ

---

தடவை உங்க கம்பெனி பேர் சொல்லி, பாரம்பரியம் மிக்க நிறுவனம் இப்படியா பொறுப்பில்லாம பதில் சொல்றதுன்னு புலம்பினாரே!"

"அம்மாடியோவ்! பெரிய ஆள் நீ!"

"சரி. வெச்சிடவா?"

"ஐயோ, இரு. இரு. எதுக்குப் பண்ணினே? பட்டுனு வெச்சிட்டா என்ன அர்த்தம்? மூணு நாளா கிராஸ்டாக் எதும் காணமேன்னு தவிச்சுட்டு இருந்தேன்."

"சரிதான்."

"உன் நம்பர் குடேன்? எங்க இருக்கே நீ? என்ன பண்றே?"

"ஏதோ ஓர் இடத்தில். என்னவோ பண்றேன். அதெல்லாம் முக்யமா?"

"இதென்ன சீண்டல்?"

"சீண்டல் தான். சுவாரஸ்யமே சீண்டலில் தானே?"

"சரி. நான் ஒண்ணு சொல்லட்டுமா?"

"லவ்யூ தானே? சொல்லிக்கோங்களேன்!"

"என்ன நீ? இப்படி போல்டு லெட்டர்ல பேசறே?"

"சொன்னது சரியா, தப்பா?"

"சரிதான். முதல் பார்வையில் வராத காதல் எப்பவும் வராதுன்னு கலீல் ஜிப்ரான் சொல்லியிருக்கார்."

"அது சரி. இன்னும் பார்க்கவே இல்லை."

"அதானே? சொல். நீ எப்படி இருப்பே?"

"ஐயோ, நான் வெச்சடறேன்."

"நான் சொன்னதுக்கு பதில்...?"

"தெரியலை. அப்படி ஒண்ணும் எனக்கு ஐடியா இல்லை. ஆனா உங்களோட பேசணும்னு மட்டும் ஒரு இது...."

"அதான்! அதேதான் எனக்கும்!"

அவள் பேசாமலிருந்தாள்.

"ஹலோ, என்ன சவுண்டே காணோம்?"

"ம்? ஒண்ணுமில்லை. நான் வெச்சடறேன்."

"மறுபடி பண்ணுவியா?"

"பார்க்கலாம்!"

மறு நாளிலிருந்து அவன் தினமும் ஷேவ் செய்து, கால் நகம் வரை தேய்த்துக் குளிக்க ஆரம்பித்தான். காரேபூரே சட்டைகளை விடுத்து, கண்ணியமான நிறங்களுக்கு மாறினான். தினம் அவன் போனுக்காகக் காத்திருக்கத் தொடங்கினான். சாப்பாட்டுத் தட்டில் ஊறும் ரசத்துக்கு நடுவே தன் பெயரை எழுதிப் பார்ப்பதை விடுத்து அவளை மானசீகமாக வரைந்து பார்க்க ஆரம்பித்தான்.

எப்படி இருப்பாள்? "அழகு இல்லைன்னு சொல்ல முடியாது." ஒரு தரம் அவன் சொன்னதை எப்படி எடுத்துக் கொள்வது?

"நீ சொல்றதே புரியலை ரஞ்சனி."

"அழகுன்னா என்ன? அவங்கவங்க மனசு தானே?"

"உன் முகத்தை நான் விதவிதமா வரைஞ்சு பார்ப்பேன் தெரியுமா?"

"ம்ஹூம்?"

"ஒரு தரம் கண் பெரிசா. ஒரு தரம் மூக்கு நீளமா. ஒரு தரம் நூர்ஜஹான் மாதிரி. ஒரு தரம் ராட்சஸி மாதிரி."

"கடைசியா சொன்னதுதான் சரியா இருக்கும்னு நினைக்கறேன்!"

# பார்க் டவுன்
## பெனிபிட் பண்ட் லிமிடெட்



மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No: 2806

★ 223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன்,
சென்னை-3 போன்: 5352676, 5354354

**கிளை அலுவலகங்கள்:**

★ திருவான்மியூர், 2, கிழக்கு மாடவீதி, சென்னை-41 போன் 413582, 416417

★ அண்ணாநகர், P-995, இரண்டாவது அவென்யு, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், சென்னை-40 போன் 6262656, 6280750

★ தி.நகர், 73, ரங்கநாதன் தெரு, சென்னை-600 017. போன் : 4344319

★ அம்பத்தூர், 215 ,M.T.H. Road, பஸ் நிலையம்,சென்னை-53. போன்:6357725

★ கோடம்பாக்கம், 73 & 74. ஆற்காடு ரோடு,சென்னை-600 024. போன்:4846528

**திருச்சி:** CRYSTL PLAZA 22, நந்தி கோயில் தெரு, தெப்பக்குளம். திருச்சி-620 010

### பிக்சட் டிபாசிட்

| 46 நாள் | 90 நாள் | 6 மாதம் | 1 ஆண்டு | 2 ஆண்டு | 3 ஆண்டு | 4 ஆண்டு | 5 ஆண்டு ★ |
|---|---|---|---|---|---|---|---|
| 13% | 14% | 15% | 17% | 18% | 18.5% | 19% | 20% |

### கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/-
முதலீடு செய்வீர்
10ஆம் ஆண்டு முடிவில்
ரூ.50,000/- பெறுவீர்
அடுத்த 20ஆம் ஆண்டு
முடிவில்
ரூ.1 கோடி பெறுவீர்

**21%** 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

### PB பாண்டு

| முதலீடு | காலம் | திரும்பப் பெறும்தொகை |
|---|---|---|
| ரூ.25,000 | 60 மாதம் | ரூ.70,000 |

### காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

| டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள் | 5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை | 10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை | 15ம் ஆண்டு பெறும் தொகை |
|---|---|---|---|
| Rs.6,320 | Rs.6,000 | Rs.6,000 | Rs.56,320 |

### வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர்.
252 மாதங்கள் நிறைவில்
ரூ.2 லட்சம் பெறுவீர்.

### செல்வக்களஞ்சியம்

| டிபாசிட் | காலம் | வருவாய் |
|---|---|---|
| Rs.7,500 | 15 Yrs | Rs.1,25,000 |
| Rs.9,000 | | Rs.1,50,000 |

### பொற்குவியல் திட்டம்

| டிபாசிட் | காலம் | வருவாய் |
|---|---|---|
| மாதா மாதம் ரூ.100/- | 25 Yrs | Rs.3,00,000 |

**சேமிப்பு திட்டம் 10% P.a.**

### மறு முதலீட்டுத் திட்டம் !

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

| டிபாசிட் | 12 மாதம் | 24 மாதம் | 45 மாதம் | 60 மாதம் |
|---|---|---|---|---|
| Rs.1,000 | Rs.1,184 | Rs.1,430 | Rs.2,000 | Rs.2,535 |



**பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.**
ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும்
அறக்கட்டளை பயன் பெறலாம்.

**தங்க நகை கடன்**
Rs. 3,000 PER 10 GRAM
வீடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

நிர்வாக இயக்குனர்:
**Dr.P.பாலசுப்ரமணியம், B.Sc.**
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

இயக்குனர் குழுத் தலைவர்:
**Dr.R. விவேகானந்தன், B.Com., M.B.A.**

❒ ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ❒ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ❒ வெள்ளி விடுமுறை

> ஒருவன் எவ்வளவு உயரமாக இருந்தாலும், அவன் நிமிர்ந்து நின்றால், அடுத்த ஊர் தெரியாது. அவன் பெயர்தான் அங்கு செல்ல முடியும்.
>
> **— ஆப்பிரிக்க பழமொழி**
>
> **தகவல் : எஸ்.எஸ். பூங்கதிர்**

"உதைப்பேன் உன்னை!"

என்னமாய் சிரிக்கிறான்!

"நான் கேட்டதுக்குப் பதிலே இல்லை?"

"என்னது?"

"என்னைப் பிடிச்சிருக்கா? சே - எப்படிக் கேட்கிறதுன்னே தெரியலை. இன்னும் ஒரு தரம் கூடப் பார்க்கலை!"

"........."

"பதில் காணோம்?"

'யோசிக்கறேன்.'

"எதுக்கு?"

"அடுத்த வாரம் பெங்களூர் போயிடறேன். டிரான்ஸ்ஃபர்!"

"ஐயோ!"

"என்ன ஐயோ? தாங்க முடியலையாக்கும்?"

"பின்னே? எங்க வேலை பார்க்கறே நீ?"

"அதெல்லாம் எதுக்கு?"

"பார்! மறுபடி என்னைப் படுத்துகிறாய். இப்பவாச்சும் சொல்லலாமில்லையா?"

"ப்ச்! சஸ்பென்ஸ் போயிடுமே?"

என்ன பெண் இவள்!

"சரி, என்னதான் உன் உத்தேசம், என்னை அலைக்கழிப்பதைத் தவிர?"

"ஸாரி."

"எனக்கு பதில் சொல்லமாட்டாய்?"

"ஞாயிறு காலை சென்ட்ரல் வாங்களேன். பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் எஸ்-8. வாசலில் காத்திருக்கேன்."

"எப்படித் தெரியும்!"

"தெரிஞ்சுரும்!"

"அதான் எப்படிங்கறேன்!"

"நான் உங்களைக் கண்டுபிடிச்சுடுவேன்."

"எப்படி?"

"பார்க்கத்தானே போறீங்க?"

சட்டென்று போனை வைத்தாள்.

**கி**ருஷ்ணன் பரபரத்தான். பிருந்தாவன் எத்தனை மணிக்கு என்று கோடிதரம் விசாரித்துக் கொண்டான். முதல் நாள் இரவே குளித்து, தலை சீவி, கலைத்து, மறுபடி அலங்கரித்து... கடவுளே! ஏன் இப்படிப் பறக்கிறேன்? என்ன ஆயிற்று எனக்கு?

அவள் வருவாளா? நிஜமாக? விளையாடுகிறாளா? எல்லாம் போகட்டும். யாரவள்? பெயர் ரஞ்சனி என்பது தவிர, வேறு விவரம் தெரியாமல் என்னமாய் மனசில் வந்தது காதல்?

அவளோடு பேச ஆரம்பித்த பிறகுதான் எத்தனை மாற்றம்? மனசில் எப்போதும் சலிப்பு என்பதே இல்லாமல் நிரம்பித் ததும்பி ஓடும் நதி போல் ஒரு பிரவாகம்? எப்படி இருப்பாள் அவள்? எப்படி இருப்பாள்? அதுநாள் வரை மானசீகமாக வரைந்து பார்த்த உருவங்களில் அவள் ஒரு தேவதையாக இருந்தாள். அவன் கனவுகளில் வாசனை பரப்பிப் போகும் வெண்ணுடை தேவதை.

சட்டென்று அவன் துடிப்பு ஒரு கணம் நின்றது. கற்பனைதான் என்றாலும் அந்த மானசீக பிம்பம் தருகிற சிலிர்ப்பும் துடிப்பும் நேரில் பொடிப் பொடியாகிப் போனால்?

**அ**ன்புள்ள ரஞ்சனி, நீ சொன்ன அதே சஸ் பென்ஸ், அதே சுவாரஸ்யம், அதே சீண்டல் தொடர்வதில்தான் காதல் - ஒரு வேளை அப்படி ஒன்றாக உனக்கும் இருந்தால் தொடரும் என்று தோன்றுகிறது. ஸ்டேஷனில் எனக்காகக் காத்திருந்து சோர்ந்து போயிருப்பாய்... ஸாரி. உன்னை நேரில் பார்த்துத்தான் உன்னை உணர வேண்டும் என்று தோன்றவில்லை... மீண்டும் உன் சீண்டலுக்காக டெலிபோனிடமே காத்திருக்கிறேன்....

கடிதம் எழுதி, பலமுறை படித்துப் பார்த்தான். பின் நீண்ட பெருமூச்சுடன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான் அவன்.

---




"அந்த சினிமா நடிகை தன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஒரே நேரத்தில் இரண்டு கோடீசுவரர்கள் முன் வந்ததும் ரொம்பக் குழம்பிப் போயிட்டாங்க."

"யாரைக் கல்யாணம் பண்ணிக்கறதுன்னா?"

"இல்லை. யாரை முதலில் கல்யாணம் பண்ணிக்கறதுன்னு!"

— வெ. ராஜாராமன்













# குறையொன்றுமில்

**ச**ஹஸ்ரநாமம் என்றால் ஆயிரம் நாமங்கள் - திருப்பெயர்கள். பகவானுக்கு வெறும் ஆயிரம் பெயர்கள்தானா...?

ஆயிரம் நாமங்கள் என்று வெறும் எண்ணிக்கையிலே மட்டும் சொல்லவந்ததன்று. சஹஸ்ரம் என்பதற்கு 'பலபல' என்றும் பொருள் உண்டு.

'பலபலவே ஆபரணம்; பேரும் பலபலவே' என்று ஆழ்வார் சொல்கிறார்.

எல்லோரும் புரிந்து கொண்டு சொல்வதற்கு ஏற்ப அங்கங்கே உள்ள ரத்தினங்களைச் சேகரித்து, மாலை தொடுத்தது போலே தொடுக்கப்பட்டது விஷ்ணு சஹஸ்ரநாமம்.

'சஹஸ்ரநாமம்' என்று சொன்னாலே அது விஷ்ணு சஹஸ்ர நாமத்தைத்தான் குறிக்கும் என்கிற அளவுக்குப் பெருமையுடையது.

ஆதிசங்கர பகவத்பாதான், காஷ்மீரில் யாத்திரை பண்ணிக்கொண்டிருந்த போது, தம் சிஷ்யரை அழைத்து, புஸ்தக பாண்டாகாரத்திலிருந்து லலிதா சஹஸ்ரநாமத்தை எடுத்து வரும்படி ஆக்ஞாபித்தார். அதற்கு பாஷ்யம் பண்ண வேண்டும் என்று அவருக்குத் திருவுள்ளம்.

அங்கேயிருந்து போனார் சிஷ்யர். அவர் எடுத்து வந்து கொடுத்ததைப் பார்த்தால்.... அது விஷ்ணு சஹஸ்ரநாமம். ''நான் இதைக் கேட்கலையே... நான் கேட்டது லலிதா சஹஸ்ரநாமம் அல்லவா.... நீ விஷ்ணு சஹஸ்ர நாமத்தைக் கொண்டு வந்திருக்கியே...'' என்று சிஷ்யரைத் திரும்பவும் அனுப்பினார். திரும்பவும் சிஷ்யர் எடுத்து வந்தது விஷ்ணு சஹஸ்ரநாமமாகவே இருந்தது! அப்போது ஆதிசங்கரர் சிஷ்யரைக் கேட்கிறார்.

''நான் சொல்வது என்ன? நீ செய்வது என்ன...?''

''சுவாமி! நான் என்ன செய்வேன். அங்கே போய் லலிதா சஹஸ்ரநாமத்தை எடுக்கணும்னு கையை



வைச்சா, ஒரு சின்ன கன்யா
வந்து நின்னுண்டு, அதை வை
இதை எடுத்துண்டுபோ'ன்னு
கிறாள். நான் என்ன செய்வேன்....'
றார் சிஷ்யர்.

அப்போது ஆதிசங்கரர் தம்
வுள்ளத்திலே நினைக்கிறார்: '
அம்பிகையே இங்கு பாலையாய்
அந்த எம்பெருமான் நாராயணனு
திருநாமத்துக்கு பாஷ்யம் பண்ணு
யாய் நம்மை நியமிக்கிறாள்...'

அதன் பிறகு விஷ்ணு சஹஸ்
பாஷ்யம் பண்ணினார் பகவத்பா

இப்படி லலிதையே போற்று
யான, லலிதையான சஹஸ்ரந
எல்லோரும் கொண்டாடும் படி
ஏற்றம் உடையது. எல்லா சஹஸ்ர
களுக்கும் ஆதியான சஹஸ்ரந
இதுதான். ஆகையினாலே; ச
நாமம் என்று சொன்னாலே
விஷ்ணு சஹஸ்ரநாமத்தைத்தான்
கும்.

**ஆ**யிரம் திருநாமங்க
என்ன ஏற்றம்...? அந்த சஹஸ்ர
சொல்லப்பட்டது யாரா
ஞானிகளுள் அக்ரகண்ய
பீஷ்மரால்.... பீஷ்மர்
றாலே பயப்படத்த
என்று அர்த்த
அம்புப்
கையிலே

3

## முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

கிறார் பீஷ்மர். அந்தக் காட்சியைப் பார்த்து, தர்மபுத்திரரை அழைத்துச் சொல்கிறார் பகவான் கிருஷ்ணர்: "அணையும் நெருப்பைப் போலே இருக்கிறார் பீஷ்மர். அவர் போனால், தர்மத்தைச் சொல்ல யார் இருக்கிறார்கள்....? போ! அவர் சொல்வதைப் போய்க் கேள் என்று தர்மபுத்திரரை அனுப்புகிறார்.

'ஏன், பீஷ்மர் போய்விட்டால் பகவானே இருக்கிறாரே - தர்மத்தைச் சொல்ல...?' என்று நமக்குக் கேட்கத் தோன்றும்.

பகவான் இருந்து பிரயோஜனமில்லை; அவரை விளங்கச் செய்யக் கூடிய மகான்கள் இருக்கணும்! இந்த உண்மைக்கு சாட்சியாகத்தான் பகவானே பீஷ்மர் அம்புப் படுக்கையிலே இருந்தபடி சொன்ன அந்த விஷ்ணு சஹஸ்ரநாமத்தைக் கேட்டார். பல பேர் கேட்டார்கள். அவர்களுடன் அந்த வாசுதேவனே கேட்டான். அவன் சொன்னது கீதை; கேட்பது சஹஸ்ரநாமம். இப்படி அவன் ஆனந்தமாய் கேட்டதே அதன் பெருமை, உயர்வு.

பராசர பட்டர், விஷ்ணு சஹஸ்ரநாமத்துக்கு பாஷ்யம் பண்ணியிருக்கிறார். பகவத் குண தர்ப்பணம் என்று அதற்குப் பெயர். 'பகவானுடைய திருக்கல்யாண குணங்களைக் காட்டக் கூடிய கண்ணாடி' என்று பொருள். விஷ்ணு சஹஸ்ரநாமம் என்னும் போது பகவானுடைய நாமாக்களைச் சொல்கிறோமா? அவன் குணங்களைச் சொல்கிறோமா என்று சந்தேகம் வேண்டாம்... அவன் குணங்களையே தெரிவிக்கும்படியான நாமாக்கள் அவை. அத்தனையும் சுகுணங்கள்!

சிறிய கண்ணாடியானது மிகப் பெரிய யானையின் உருவத்தைக்கூடக் காட்டவல்லது இல்லையா... அதைப் போலே சர்வ வியாபகனானவனை அந்த சின்ன திருநாமங்கள் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இந்த பகவத் குண தர்ப்பணம் என்கிற பாஷ்யத்திலே, பராசர பட்டர், விஷ்ணு சஹஸ்ரநாமத்துக்கு உரிய ஏற்றங்களைச் சொல்கிறார். ஆறு வித உயர்வுகளைச் சொல்கிறார்.



### மகாபாரத சாரம் :

ரஸாலு என்று ஆந்திர தேசத்திலே ஒருவகை மாம்பழம் வருவதுண்டு. வெயில் காலத்திலே வரும். அதைப் பிழிந்தால் மொத்தமும் ரஸமே கொட்டும்! அதைப் போலவே மகா பாரதம் ஒரு பெரிய ரஸாலு என்று வைத்துக் கொண்டால், அதைப் பிழிந்தால் வரக்கூடிய சாறு சஹஸ்ரநாமம்! மகாபாரதக் கதை முழுதும் அதில் இருக்கிறது.

மகாபாரதத்துக்கு அப்படி என்ன சிறப்பு...? 'சாப்பிட்டால் வடையே சாப்பிடணும்; கேட்டால் மகாபாரதக் கதையே கேட்கணும்!' என்கிற அர்த்தத்திலே ஒரு தெலுங்கு பழமொழி உண்டு.

தர்மத்தைச் சொல்வது மகாபாரதம். 'மகா'பாரதம் என்று ஏன் அதற்குப் பெயர் உண்டாயிற்று...? பெரிதாக, பளுவுடையதாக இருப்பதாலே அந்தப் பெயர்... அளவிலும் பளு; புத்திக்கும் பளு.... சாமான்யனின் புத்திக்கு வடிவமாகச் சொல்லியிருக்கிறது. தர்ம, அர்த்த, காம மோக்ஷம் என்ற சதுர்வித புருஷார்த்தத்திலேயும் தெளிவான ஞானம் பிறக்க வழி, மகாபாரதம். வேத சாகரத்தை (சமுத்திரத்தை), வியாஸரின் புத்தியாகிற மத்தி

## நிலைக்கக் கூடாதது?

புகழப்படாத காதல்
போற்றப்படாதகவிதை
தோண்டப்படாத பூமி
தேடப்படாத மூவரி
புரியப்படாத நட்பு
பாடப்படாத பாட்டு
படிக்கப்படாத நூல்
காணப்படாத திறமை
கேட்கப்படாத அறிவு
செய்யப்படாத செயல்
சொல்லப்படாத சொல்
நிலவும் நாட்டில்...
நிலைக்க கூடாதது அரசு!

— கே.ஜி.எஸ். கோவிந்தன்

ளாலே கடைந்து பெற்ற உயர்ந்த வெண்ணெய் போன்றது மகாபாரதம். இப்படி வேத ஸாரமான மகாபாரதத்தின் ஸாரம் விஷ்ணு சஹஸ்ரநாமம்!

### மகரிஷிகளாலே நன்கு, பலமுறை கானம் பண்ணப்பட்டது:

ரிஷிகளுக்கும் நம்மைப் போன்ற நித்ய சம்ஸாரிகளுக்கும் வித்தியாசமில்லையா....? நம் பார்வை ஒரு வரையறைக்குப்பட்டது. மகரிஷிகளின் பார்வையோ உயர்ந்த ரீதியிலே வஸ்துவாகப் பார்க்காமல் அதன் உள்ளே இருக்கிற சக்தியைக் காணக்கூடியது.

உடல்மிசை உயிரென கலந்து எங்கும் பரந்துளன் - உடலுக்குள் உயிர் மறைந்துள்ளது போல் எல்லாவற்றிலும் கலந்திருக்கிறான் பரமாத்மா. இதுக்கு ஒரு கதை....

சுக பிரும்ம மகரிஷி ஒரு தடாகக் கரை வழியே வேகமாக நடந்து போனார். அவர் அவதூதர். திருமேனியில் வஸ்திரம் கூட இல்லை. தடாகத்தில் சில அப்ஸர ஸ்த்ரீகள் நீராடிக் கொண்டிருந்தனர். அத்தனை ஸ்த்ரீகளும் சுக பிரும்மரைப் பார்த்தனர்; அவரும் அவர்களைப் பார்க்கிறார் - அவர் மனசில் எந்த விகாரமும் ஏற்படவில்லை. அந்த ஸ்த்ரீகளும் மான சம்ரக்ஷணம் பண்ணிக் கொள்ளவில்லை.

சுகபிரும்மரைத் தொடர்ந்து வந்தார் அவர் தந்தையான வியாஸர். 'ஹே புத்ரா!' என்று அழைத்தபடி வந்தார். அவர் குரலைக் கேட்டதுமே ஸம்ரக்ஷணம் செய்து கொண்டார்களாம்.

வியாஸர் அந்த ஸ்த்ரீகளிடம் வந்தார்... "நான் வயோதிகன்; அவனோ சின்னப் பையன்... அப்படியும் என்னைக் கண்டதும் மான சம்ரக்ஷணம் பண்ணிக் கொண்டதேன்...? இது என்ன விபரீத ஆசாரம்?" என்று கேட்டார்.

"இந்தக் கேள்வியை உங்கள் பிள்ளை கேட்டாரா? எங்களைத் திரும்பிப் பார்த்தாரா? அவர் தன்மை எங்களுக்குத் தெரியும்; நிற்கின்றதெல்லாம் நெடுமால் என்று நினைப்பவர்; சர்வ பதார்த்தங்களிலும் பகவானைப் பார்க்கிறார். நீர் இன்னும் கீழ்ப்படியில் இருக்கிறீர்... ஆகையினாலே உங்களைக் கண்டால் பயப்பட வேண்டியிருக்கிறது..." என்றார்களாம் அப்ஸர ஸ்த்ரீகள்.

(இதனால் வியாஸரைக் குறைத்துச் சொன்னதாக அர்த்தம் ஆகாது... ஒருத் தரைக் குறைச்சு சொல்றமாதிரி சொல்லி அடுத்தவரை உயர்த்திச் சொல்றது.)

சுகபிரும்மரைப் போல் எதிலும் பகவானைப் பார்க்கும் ரிஷிகள், பகவான் நாமத்தைத் தனியே சொல்ல வேண்டியதில்லை.. ஆனால் அப்படிப்பட்ட ரிஷிகளே விஷ்ணு சஹஸ்ரநாமத்தை கானம் பண்ணுகிறார்கள். அனைத்து ரிஷிகளும் அபிப்ராய பேதமின்றி பண்ணுகிறார்கள்.

### பகவானாலே அடையாளம் காட்டப்பட்டது :

வியாஸரை வேத வியாஸர் என்று சொல்கிறோம். வேதத்தை விவதிக்கிறவர் என்று பொருள். விவதிக்கிறவர்...?

கலியுகத்திலேதான் நால் வேதங்களை நான்கு பிரிவினர் தனித்தனியே சொல்கிறார்கள். கிருத யுகத்திலே அப்படியில்லை. எல்லா வேதங்களையும் பூர்ணமாகக் கற்றுணர்ந்திருப்பார்கள். ரிக் வேதம் சொல்லும் என்றால் சொல்வார்கள்; சாம கானம் பண்ணும் என்றால் பண்ணுவார்கள்... எல்லாவற்றையும் சேர்த்து தரித்தார்கள். இப்போது கலியுகமானதினாலே மந்த புத்தியும் மந்த பாக்யமும் உடையவர்களாயிருக்கிறோம்.

ஒவ்வொரு துவாபர யுகத்தின் முடிவிலேயும் அடுத்து வரப் போகிற கலியுகத்து மனிதர்களுக்கு உதவும்படியாகப் பரமாத்மாவே வியாஸாவதாரம் பண்ணுகிறார். வேத சாரத்தை விவாதித்துக் காட்டுகிறார். பிரித்து, நான்கு சிஷ்யர்களுக்கு விவதித்துத் தருகிறார். இப்படி வசிஷ்டர் ஒரு முறை வியாஸாவதாரம் பண்ணியிருக்கிறார். பகவானே கருணை கொண்டு வேத வியாஸராய் அவதரித்து வழங்கியது மகாபாரதம். ஸாரம் பகவத் கீதை; அதன் ஸாரம் விஷ்ணு சஹஸ்ரநாமம். ரிஷிகள் கானம் பண்ணிய விஷ்ணு சஹஸ்ரநாமத்தை பகவானே அடையாளம் காட்டியிருக்கிறார்.

### பீஷ்மரால் உயர்ந்ததாகக் கொண்டாடப்பட்டது :

ஆங்கிலத்திலே 'superlative degree' என்

# "AN F.D. THAT'S ALSO FIRST AID IN AN EMERGENCY ?"

### HIGHLIGHTS

- 15% concession on all treatment and diagnostic tests at Apollo Hospitals, subject to a maximum of 10% of the value of the Deposit. Certain exclusions apply.
- This discount coupon is transferable to anyone by the deposit holder.
- Personal Accident Insurance for the first named deposit holder equal to the value of the Deposit.
- Post dated interest warrants, encashable at par, will be sent alongwith the Fixed Deposit Receipt.
- A Choice of monthly or quarterly interest warrants.
- Interest commences from the date of receipt of cheque/draft, subject to realisation.
- Deposits from Non-resident Indians accepted with repatriation rights.
- Minimum amount of Deposit accepted is Rs. 3,000 and thereafter, in multiples of Rs. 1,000. Outstation payments must be made through bank drafts.

**15% OFF on treatment at Apollo!**

"When I put my savings in a Fixed Deposit with Apollo Hospitals, little did I know more than just my money would come to our rescue in an emergency! Last week, my colleague crashed his scooter. He was badly hurt and we wanted him to be in the best hands, so we called Apollo Hospitals. Little did I realise that the Fixed Deposit I had made a year ago would turn out to be such a blessings in disguise! We received special attention, expert care, and 15% discount on the hospital bill!"

"My friend is recovering fast, we're all happy that things went so smoothly, and my money worked harder than I imagined!"

"Are your savings as safe, hardworking and supportive?"

**Scheme A – Fixed Deposit**

| Period of Deposit | Rate of Interest per annum | Interest Payment |
|---|---|---|
| One Year | 15.19% | Quarterly |
| Two Years | 15.19% | Quarterly |
| Three Years | 15.19% | Quarterly |
| 1,2,3 Years | 15.00% | Monthly |

**Scheme B – Cumulative Deposit**

| Period of Deposit | Amount payable on maturity of deposit on Rs. 3,000/- | Effective Annual Yield |
|---|---|---|
| One Year | Rs. 3,482 | 16.08% |
| Two Years | Rs. 4,042 | 17.37% |
| Three Years | Rs. 4,692 | 18.80% |

**APOLLO HOSPITALS Enterprise Limited**

**Regd. Office:** 19, Bishop Garden, Raja Annamalaipuram, Madras – 600 028.
**Hospital Complex:** 21, Greams Lane, Greams Road, Madras – 600 006.
**Administrative Office:** Ali Towers, 22 Greams Road, Madras – 600 006. Phone: 8266956, 8272026, 8256753

Adgraph/AP/596

# யார் அவர்?

"முதல் முதலில் அவர் சேலத்தில் உதவி கலெக்டராகப் பணியாற்ற வந்தபோது என்னிடம்தான் பயிற்சி பெற்றார். அப்போது நான் அங்கு கலெக்டராக இருந்தேன். சாவதானமான மனிதர் அவர். ரொம்பப் பேசக்கூட மாட்டார்! பதற்றமில்லாமல் செயலாற்றுவார். அண்ணாமலை பல்கலைக் கழகம் கலைஞருக்கு டாக்டர் பட்டம் வழங்கிய பிறகு ஒரு சாரார் நடத்திய கலவரத்தை, அப்போது தென்னார்க்காடு மாவட்டக் கலெக்டராக இருந்த அவர்தான் சாமர்த்தியமாகச் சமாளித்து சகஜநிலையைக் கொண்டு வந்தார்!"

— கே.வி. ராமநாதன்

"அவரது திறமைக்கு, அவர் ஓய்வு பெற்றதும் கூட அரசு அவரை ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற இடங்களில் உயர் பதவியில் அமர்த்தலாம். தற்சமயம் ப ாதுகாப்புத் துறைச் செயலராக இருப்பவர், இந்த வருட இறுதி வரை கூட அந்தப் பணியில் தொடரலாம்! அதையெல்லாம் விட்டுவிட்டு இங்கே வருகிறார் என்றால் அவரது ஆர்வமும் நேர்மையும் எத்தகையது என்று எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை!"

— வி. கார்த்திகேயன்

"மதுரையில் 1963 ம் வருடம் நான் எஸ்.பி. ஆக இருந்தபோது (காமராஜர் முதல்வராக இருந்த சமயம்) அவர் மதுரை மாநகர முனிசிபல் கமிஷனராக இருந்தார். அப்போது அவரை நான் அறிவேன். மிக நேர்மையானவர். சின்ஸியரான ஆபீஸர். எந்த உயர் பதவிக்கும் தகுதியான நபர் அவர்!"

— சி.வி. நரசிம்மன்

— இந்த முன்னாள் அரசு அதிகாரிகள் யாருக்கு இப்படிப் புகழாரம் சூட்டுகிறார்கள்? தமிழகத்தின் புதிய தலைமைச் செயலாளரான கே.ஏ. நம்பியாருக்குத்தான்!

— சித்தார்த்



• நம்பியார்

றொரு வார்த்தை சொல்வதுண்டு. அதற்கு மேலாக ஒன்று கிடையாது. ஒப்பு உயர்வு சொல்ல முடியாமல் பெருமையுடையது என்று பீஷ்மரே ஏற்று விஷ்ணு சஹஸ்ரநாமத்தை எடுத்து ஆண்டிருக்கிறார். 'மகரிஷிகளால் கானம் பண்ணப்பட்ட பரம தர்மம்' என்று போற்றி உகந்திருக்கிறார்.

## நோய் தீர்க்க வல்லது :

வைத்ய சாஸ்திரமான சரக சம்ஹிதையிலே சொல்லியிருக்கிறது. விஷ்ணு சஹஸ்ரநாமம் சொல்லக் கேட்டால் வியாதிகள் போகும்!

முக்கூர் ஸ்ரீமத் அழகிய சிங்கர் வேடிக்கையாய்ச் சொல்வார் - "எல்லாரும் உபநிஷத்படி நடக்கிறார்கள் - மாத்ரா பலத்தை நம்புகிறார்கள்" என்று. உபநிஷத் சொல்லும் மாத்ரா பலம் - வேத கோஷங்களின் ஒலி மாத்திரைகளுக்கு உள்ள சக்தியை. நாம் நம்புவதோ மாத்திரை (tablet) பலத்தை! அந்த நரசிம்ஹனே பலம் என்று நம்பி சஹஸ்ரநாமத்தைப் பூரணமாய்ச் சொல்லி மூன்று தடவை தீர்த்தம் கொடுத்தால் தலைவலி போய்விடும். அந்திம காலத்தைத் தடுக்கக் கூடிய சக்தி கூட சஹஸ்ரநாமத்துக்கு இருக்கிறது.

நித்யம் பகவத் சந்நிதியில் விளக்கேற்றி சஹஸ்ரநாமம் பாராயணம் பண்ற வழக்கம் வைத்துக் கொண்டால் அந்தக் குடும்பத்திலே சண்டை, கலகம் கிடையாது, சர்வ சம்பத்தும் வந்து சேரும். அந்நியோன்யம் வளரும்; துர் தேவதைகள் பிரவேசிக்காது... நம் சித்தத்திலும் நுழையாது!

## கீதைக்குத் துல்லியமாய் அர்த்தத்தை உடையதனாலே :

கீதைக்கும் சமானமா ஏதாவது உலகத்திலே உண்டா என்று கேட்டால் அது விஷ்ணு சஹஸ்ரநாமம்தான். இன்னும் கேட்டால், கீதையைவிட உயர்வானது. கீதையைச் சொன்னது பகவான். அந்த பகவத்சரணாரவிந்தத்திலே அசஞ்சலமான பக்தி உடைய ஞானி (பீஷ்மர்) சொன்ன வார்த்தை விஷ்ணு சஹஸ்ரநாமம். பகவானைக் காட்டிலும் ஞானி உயர்ந்தவரானதாலே அவர் வார்த்தைக்கு மதிப்பு அதிகம்.

துளிகூட மிச்சமின்றி அந்த ஆகாயம் முழுவதையும் காகிதமாக்கி, ஏழு சமுத்திர ஜலத்தையும் மையாக்கி எழுதினாலும் விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் பெருமையை விளக்க முடியாது.

(தொடரும்)

# ஸ்ரீ கந்தசுவாமி
## பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990
பதிவு அலுவலகம்: 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. ph: 848917
கிளை அலுவலகம்: 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. போன்: 459569




### பிக்சட் டிபாசிட்

| 46நாள் | 3மாதம் | 6மாதம் | ஆண்டு | 2ஆண்டு | 3ஆண்டு | 4ஆண்டு | 5ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| 13% | 14% | 15% | 17% | 18% | 18.5% | 19% | 20% |

**21%** 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

**PB பாண்டு**

| முதலீடு | காலம் | திரும்பப் பெறும் தொகை |
|---|---|---|
| ரூ. 25,000 | 60 மாதம் | ரூ. 70,000 |


### சொத்துக்கள் மீது கடன்

- வீடு / ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும்.
- மாத வட்டி ரூ.1.85 மட்டுமே
- விரைந்த சேவை.
- சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இருக்க வேண்டும்.



### நகைக்கடன்

- குறைந்த வட்டிக்கு கிடைக்கும்
- 10 கிராமுக்கு ரூ.3000 வழங்கப்படும்.
- R.D. கட்டத் தேவையில்லை
- எந்த சார்ஜும் வசூலிப்பதில்லை



**பாதுகாப்புப் பெட்டக வசதியும் உண்டு.**

## பென்ஷனர் நலத்திட்டம்

**20% P.a** ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

சேர்மன்:
**P. பாலசுப்பிரமணியம்,** B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
கந்தகோட்டம்,
சென்னை-600 003.
நிர்வாக இயக்குனர் :
பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிட்.



இயக்குநர்கள் குழு
R.விவேகானந்தன் B.Com.,
(Chairman : Park Town Benefit Fund Ltd.)
A.சுப்பிரமணியன்
V.சண்முகவடிவு B.A.,
V.விஜயகோபால் B.Com., D.C.P.
M.ராஜேந்திரன்
P.ஏகாம்பரம்

பங்குதாரர்களுக்கு மட்டும்

H.O. Friday Holiday (It is a P.B. Group Concern) B.O. Tuesday Holiday

# சசிகலாவுக்கு சம்மன்...?

● வி. சத்தியப்ரியன், சென்னை - 15.

*? பெரும்பாலான கட்சிகள் பாரதிய ஜனதாவை ஆதரிக்க மறுப்பது ஏன்?*

! பா.ஜ.கவின் ஹிந்துத்வ கொள்கைதான் காரணம் என்று அவர்கள் சொல்வது ஏற்கும் படியோ, நம்பும்படியோ இல்லை. இந்தியாவில் இன்று ஜாதிமத அரசியல் நடத்தாத கட்சியே கிடையாது. எனவே பா.ஜ.கவுக்கு ஆதரவு மறுப்பது தாங்கள் ஆட்சியில் அமர வேண்டும் என்ற ஆசை காரணமாகத்தான்.

● என்.சி. ராஜேந்திரன், சின்னசேலம்.

*? சந்தனக் கடத்தல் வீரப்பனுக்குப் பொது மன்னிப்பு வழங்கவேண்டும் என பா.ம.க. கோரியுள்ளது சரியா?*

! சரியல்ல... குற்றங்களுக்கு ஒப்புதல் வாக்குமூலமே டீ.வி. பேட்டி மூலம் கிடைத்திருக்கிறது. பிடிபட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். உடந்தையாய் இருந்தவர்களும் தண்டிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் சட்டம், நீதி எல்லாம் கேலிக்கூத்தாகிவிடும்.



• குடும்ப நோய்...?

● ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர் - 1.

*? ஜெ ஜெ போக்குவரத்துக் கழகம் ராஜீவ் போக்குவரத்துக் கழகமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பது குறித்து...?*

! மாவட்டங்கள், போக்குவரத்துக் கழகங்கள் போன்றவற்றுக்குப் பொதுப்படையான பெயர்கள் இருப்பதே நல்லது. 'ராஜீவ் போக்குவரத்து பஸ் கவிழ்ந்தது' என்றோ 'காமராஜர் மாவட்டத்தில் கடும் பஞ்சம்' என்றோ செய்தி படிக்க நேர்வது நன்றாகவா இருக்கிறது...?

● என்.ஆர். ரவி, திருவெண்காடு.

*? காவிரி நீர் தர மறுத்த தேவேகௌடாவுக்கு தமிழக முதல்வரும் மூப்பனாரும் ஆதரவு தருவதை ஜீரணிக்க முடிகிறதா?*

! ஆதரவளிப்பதன் மூலமாவது காவிரி நீருக்கு வழி பிறக்காதா என்கிற ஆசையாக இருக்கலாம். அல்லது 'ஆதரவு வாபஸ்' என்ற ஆயுதம் காட்டி மிரட்டியாவது மேட்டூரை நிரப்பிக் கொள்ளலாம் என்கிற எண்ணமோ என்னவோ...? வல்லவன் யார்? புல் எது என்பது போகப் போகத்தான் தெரியும்!



• ஒப்புதல் வாக்குமூலம்!

● இ. மனோகரன், நெற்குப்பை

*? சேஷனை ஜெயலலிதா திட்டுகிறாரே, காரணம் என்ன...?*

! தொண்டர்களைச் சந்திக்கும்போது தோல்விக்கு ஒரு சால்ஜாப்பு சொல்ல வேண்டாமா?!

● என். சம்பத், மதுரை - 10.

*? சட்டத்தின் ஓட்டைகளைச் சாதகமாக்கிக் கொண்டு, குற்றவாளிகளை விடுதலை செய்வதைத் தனது லட்சியமாகக் கொண்டுள்ள ராம் ஜெத்மலானி,*

• பாம்பின் கால்...?






• தொடரும் முதல்வர்



• திருத்திக் கொண்டார்!

சட்ட அமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பது குறித்து...?

! 'பாம்பறியும் பாம்பின் கால்' என்று வாஜ்பாய் வேண்டுமானால் வாதாடலாம்... ஆனால் அது சரியான தேர்வு அல்ல.



• சரி...

● **புளியரை கணேசன், சென்னை – 30.**

***? கிருஷ்ணா நதிநீர், வரும் டிசம்பர் மாதத்திற்குள் திறந்து விடப்படும் என்று சந்திரபாபு நாயுடு கூறியுள்ளாரே?***

! மூன்றாவது அணி என்று கை கோத்துக் கொண்டு உயர்த்திக் காட்டும்போது இப்படித்தான் பேசுவார்கள். போகப் போக, கிருஷ்ணா நதிநீருக்கும் ஒரு டிரிப்யூனல் அமைக்க நேர்ந்தால் வியப்பில்லை.



• ....தவறு

● **க.க.வே. சித்திரவேலு, கருப்பம்புலம்.**

***? ராஜ்மோகனாவது வீரப்பனைப் பிடிப்பாரா?***

! பிடிக்கிறாரோ இல்லையோ... மார்தட்டி வீரம் பேசாமல் இருந்தாலே பெரிய காரியம்.



• கிருஷ்ணா! கிருஷ்ணா!

● **எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.**

***? மே. வங்க மாநிலத்தில் மக்கள், ஆட்சி மாற்றத்தை விரும்பவில்லையே...? ஏன்...?***

! ஜோதிபாசு வழங்கும் நல்லாட்சிதான் காரணம். இருபதாண்டுகளாகத் தொடர்ந்து அவர் முதல்வராக இருந்து வருகிறார் என்றாலும் அங்கே யாரும் 'நிரந்தர முதல்வர்' என அவரை அழைக்கவில்லை என்பதும் கவனத்துக்குரியது...!

● **வே. முருகேசன், சென்னை – 4.**

***? வாஜ்பாயை மத்தியில் ஆட்சி அமைக்குமாறு ஜனாதிபதி அழைத்தது சரியா...?***

! ஜனாதிபதி அழைத்தது சரிதான். ஆனால், அதற்கு முன்னதாகத் தம்மை ஆட்சி அமைக்க அழைக்குமாறு வாஜ்பாய் கோரியதுதான் தவறு!

● **சி.கொ.தி. முருகேசன், கோபி.**

***? சசிகலாவுக்கு 'சம்மன்'...?***

! 'ஜெ'வுடன் தேர்தல் பிரசாரத்துக்காக ஊர் ஊராகச் சுற்றியவருக்கு மூன்றாவது 'சம்மன்' என்றதுமே உடல்நிலை சரியின்றிப் போய் விட்டது! இந்த 'சம்மனோபோபியா' அவர்களது குடும்ப நோய் போலிருக்கிறது...!

● **கலை. அரசு, கோவை – 42.**

***? தேவாரம்...?***

! காவல் துறை பயிற்சிப் பள்ளிக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அடுத்தடுத்து வரும் முதல்வர்கள் அப்பதவியை ஒரு 'punishment post' ஆகக் கருதி வருவதனால், அங்கு பயிற்சி பெற்று வரும் காவல் துறை ஊழியர்களின் உற்சாகம் குன்றிப் போக வாய்ப்பு இருக்கிறது.

● **ஜெ. ஜெயக்குமார், பொள்ளாச்சி.**

***? முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, சசிகலாவைத் தம்மிடமிருந்து பிரிக்க முடியாது; அவ்வாறு பிரிய வேண்டும் என்று சொல்ல யாருக்கும் உரிமை கிடையாது என்கிறாரே...?***

! பிரிக்க முடியாது என்பது உண்மையாயிருக்கலாம். ஆனால், அது பற்றிச் சொல்ல பிறருக்கு உரிமை கிடையாது என்பது ஏற்க முடியாதது.

● **ஜெயா சீனிவாசன், கும்பகோணம் – 2.**

***? பா.ஜ.க.வுக்கு நிரந்தர ஆட்சி அமைக்க வாய்ப்பு இருக்குமா?***

! அவர்களால் நல்லாட்சி தர முடியும்; சில கொள்கைகளை மாற்றிக் கொண்டால்... ஆனால் அவர்களுடைய ஆட்சி நிலைக்கப் போவதில்லை. காங்கிரஸ் ஏதோ ஜகஜ்ஜாலம் பண்ணி நிலைக்கக்கூடும். ஆனால் நல்லாட்சி...? ஹரே, ஹவாலா!

● **கே.ஏ. காளிமுத்து, இராணிப்பேட்டை.**

***? 'சிறு தவறு நடந்தாலும், தலைவர் பதவியிலிருந்து விலகி விடுவேன்' என்று கலைஞர் கூறியிருக்கிறாரே?***

! அதற்குப் பயந்துதான் அமைச்சர் துரைமுருகன் வீட்டையொட்டி நகராட்சி நிலத்தில் போடப்பட்ட 'ஷெட்' நீக்கப்பட்டிருக்கிறது போலும்... இவ்விஷயத்தில், பத்திரிகைகள் தவறைச் சுட்டிக்காட்டியதும் திருத்திக் கொண்டதே நல்ல ஆரம்பம்தான்... ஆனால் தவறைச் சுட்டிக்காட்ட இடமே தராமல் இருப்பது அதைவிடச் சிறந்தது.

● **வா. க. பாலமுருகன், விழுப்புரம். ❐**

***? கருணாநிதி ஊழல் புரிந்தால் ரஜினியின் நிலைமை...?***

! தனிக்கட்சி ஆரம்பிக்க நல்ல காரணம் கிடைத்து விடும்.

❐ ரூ 25 பரிசு பெறுபவர் :
வா. க. பாலமுருகன்,
7, செஞ்சி மெயின் ரோடு,
பாப்பாங்குளம், விழுப்புரம் – 605 602.


பதிவு எண்: 26383

# கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)
பதிவு அலுவலகம்: 134, ராசப்ப செட்டி தெரு, ☎ 5353241
(ஸ்ரீ கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-600 003.

**பிக்சட் டிபாசிட் திட்டம் மாத வட்டிக்கான காசோலைகள் முன் கூட்டியே வழங்கப்படும்**

| காலம் | 46 நாள் | 90 நாள் | 6 மாதம் | 1 ஆண்டு | 2 ஆண்டு | 3 ஆண்டு | 4 ஆண்டு | 5 ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருட வட்டி வீதம் | 14% | 15% | 16% | 17.5% | 18.5% | 19% | 19.5% | 20% * |



## குபேரன் வைப்பு திட்டம்

வட்டி 21% குறைந்த அளவு டிபாசிட் ரூ. 50,000/- காலம் : 5 வருடம்.
மாத வட்டிக்கான செக்குகள் முன்னதாகவே வழங்கப்படும்



## அமுத சுரபி டிபாசிட் திட்டம்

| டிபாசிட் தொகை | காலம் | கிடைக்கும் தொகை |
|---|---|---|
| ரூ. 5,600 | 15 வருடம் | ரூ. 1,00,000 |
| ரூ. 7,000 | | ரூ. 1,25,000 |



## கல்பதரு மணிபேக் திட்டம்

அ) பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்த வேண்டும்.
முதல் 5ம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6000/-ஐ பெறுவீர் !
2வது 5ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/-ஐ பெறுவீர் !
3வது 5ம் ஆண்டு முடிவில் ரூ.51,000/-ஐ பெறுவீர் !



## முதியவர் நலத்திட்டம்: வயோதிகர் விதவைகள் கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

| தொகை | காலம் | வட்டிவீதம் |
|---|---|---|
| ரூ. 10,000 | 12 மாதங்கள் | 20% |
| ரூ. 10,000 கீழ் | | 19% |

**சேமிப்பு டிபாசிட் திட்டம் - 10% வரை வட்டி வழங்கப்படும்**



| கடன் | நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும் சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும் | வட்டி விகிதம் ரூ.1.95 |
|---|---|---|

அலுவலக நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை மாலை 2.00 முதல் 6.00 வரை ஞாயிறு காலை 8.30 முதல் 12.30 வரை

பயன் பெற ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். (செவ்வாய் விடுமுறை) பாதுகாப்பு • சேவை • சுபிட்சம்

**1% ஊக்கத் தொகை 1.5.96 முதல் 31.5.96 வரை**

# நடராஜ் எஸ்டேட்ஸ்



வழங்கும், ஈடு இணையற்ற லாபகர திட்டம்

(சென்னை நகருக்கு மட்டும்)


## வாரம் தோறும் காய்கறிகள்

**உங்கள் இல்லம் தேடி வருகிறது**









**காய்கறி விபரம்**

தக்காளி, வெண்டைக்காய், கத்தரிக்காய், வாழைக்காய், புடலங்காய், அவரைக்காய், பாகற்காய், பீர்க்கங்காய், கண்டைக்காய், சுரைக்காய், பூசணிக்காய், பரங்கிக்காய், கொத்தவரங்காய், முருங்கைக்காய், முள்ளங்கி, இஞ்சி, கொத்துமல்லி, கறிவேப்பிலை, மற்றும் கீரை வகைகளும் மாற்றி மாற்றி சப்ளை செய்யப்படும். அத்துடன் கேரட், பீட்ரூட், கோஸ், உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்றவைகளும் சப்ளை செய்யப்படும்.

- வாரம் ஒருமுறை சப்ளை வேண்டுவோர் ரூ.5000/= செலுத்தி 3 வருடங்களுக்கு மெம்பர் ஆக வேண்டும்.
- வாரம் இருமுறை சப்ளை வேண்டுவோர் ரூ.10,000/-செலுத்தி 3 வருடங்களுக்கு மெம்பர் ஆக வேண்டும்.
- 3 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் ரினிவல் செய்து கொள்ளலாம். அல்லது திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.
- உங்கள் மெம்பர்ஷிப் கட்டணத்திற்கு 12% வட்டியும் உண்டு.
- சப்ளை செய்யப்படும் காய்கறிகளுக்காக நீங்கள் தனியே பணம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை.
- ஒவ்வொரு முறையும் சப்ளை செய்யப்படும் காய்கறிகளின் மதிப்பு ரூ.50/- (சராசரி).
- இலவசம் - காய்கறி நறுக்கும் S.S.கட்டர் மற்றும் நடராஜ் பதிப்பகத்தின் வெளியீடு ஒன்று.



## NATARAJ ESTATES

"Shanthi Complex", 3rd Floor, 26. Ranganathan Street, T. Nagar, Madras - 600 017.

*Branches : Tiruvarur, Thanjavur, Kancheepuram, Pudukottai, Bangalore.*

**Phone : 4342098, 4840150**

NATARAJ GROUP OF COMPANIES

Nataraj Finance & Investments

Nataraj Chits (Tamilnadu) Pvt. Ltd.,

Nataraj Exports overseas, Nataraj Publications,

Nataraj Oil Mills, T.K. Geetha Agro Products.

**24% P.A.**




"இந்த விவாதத்தை உடனே நிறுத் தலைனா நம்ம கட்சி பிளவுபட்டுடும்...."
"என்ன விவாதம்...?"
"ஏற்கெனவே பிளவுபட்டப்போ பிரிஞ்சுபோன அணியோட இணையறதா, வேண்டாமான்ற விவாதம்..."




"ஆகையால், இரு கடிதங்களையும் அனுப்புவதென்று நாம் முடிவு செய்வோம்..."

இந்தியன் எக்ஸ்பிரஸ் ஸிண்டிகேட்




...றா! என் தந்திரம் பலிச்சுடுத்து..."

## ஆஹ்..ஹாஹ்ஹா...




"எங்க கொள்கையில சின்ன மாற்றம்.... மாநில அளவுல நாங்க காங்கிரஸுக்கு எதிரிகள்; தேசிய அளவுல அதே கட்சிக்கு நண்பர்கள்...."

## 'சோ'வா இப்படி!

♦ "சோ" பேட்டி என்றதும் அரசியல் பற்றியதாக இருக்கும் என நினைத்து படிக்கத் தொடங்கினால், ஒரு வித்தியாசமான முறையில் அரசியலைத் தொடாமலே பேட்டி அமைந்து இருந்தது. கல்கியின் சாமர்த்தியம் பாராட்டுக்குரியது.

திருத்தங்கல், ஈ. சிதம்பரம்.

♦ தெளிவான சிந்தனை, அறிவு, தர்க்கரீதியான வாதத் திறமை முதலிய குணங்கள் உடைய 'சோ' கல்கி பேட்டி மூலம் தாம் ஒரு eccentric என்பதையும் நிரூபித்துள்ளார். பெண்கள் பற்றிய பிடிவாதமான கருத்து, புத்தக அறிவே போதும் அனுபவ அறிவு தேவையில்லை என்ற அபத்தமான வாதம், எதிலும் முனைந்து ஈடுபடாத அரைகுறைச் செயல் உடையவர்தாம் என்ற ஒப்புதல் வாக்கு, இவை அவரைப் பற்றி நான் கொண்டிருந்த மரியாதையை வெகுவாகச் சரித்து விட்டன. ஆனாலென்ன, Devil may care 'சோ' இதைப் பற்றியா கவலைப்படப் போகிறார்?

சென்னை - 33, ஆர். ஆர். தமன்.

### ரூ. 20 பரிசு பெறும் கடிதம்

♦ தலையங்கம் படித்தேன். இப்பொழுது கருணாநிதி பெற்றுள்ள வெற்றி, பலருடைய கூட்டு முயற்சியால் கிடைத்த வெற்றி. அதாவது 'டீம் ஒர்க்' என்று கூறுவார்களே அதைப் போன்றது. ரஜினியால், மூப்பனாரால்... ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான காரணங்களைக் கூறுவார்கள். என்னைக் கேட்டால் இந்த வெற்றி, ஜனநாயகத் தூண் என வர்ணிக்கப்படும் பத்திரிகைகளின் வெற்றி. அ.இ.மு.க. அரசின் அவலங்களைப் பத்திரிகைகள் வரிந்து கட்டிக் கொண்டு எழுதின. எப்படியாவது ஜெயலலிதாவைப் பதவியிலிருந்து இறக்கியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு எழுதின. மக்களும் புரிந்து கொண்டார்கள். பத்திரிகைகளின் பண்பான செயலால் ஒருவழியாய் ஜெயைப் பதவியிலிருந்து இறக்கியாயிற்று. இனி கருணாநிதி, தமக்குக் கிடைத்திருக்கும் இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தி மக்களுக்கு மகத்தான சேவை புரிய வேண்டும்.

திருச்சுழி, சுந்தர் அழகேசன்.

♦ வெற்றி தோல்விகளை ஆராய்ந்து எழுதப்பட்ட "மக்களின் வெற்றி, தர்மத்தின் வெற்றி" தலையங்கமும் கண்ணாடிக் கோப்பை கருத்துப் படமும் ஆளும் தி.மு.க.வுக்கு எச்சரிக்கை மட்டுமல்ல; கைவிளக்கும் கூட.

கோவை - 30,
பலராம் செந்தில்நாதன்.

♦ 'அட்மிஷனா! ரொம்ப ஈஸி!' என்ற தலைப்பைப் பார்த்ததும் 'எங்கே? எப்படி?' என்று துடித்து உள்ளே போனால்... ஏற்கெனவே அக்கினி நட்சத்திர வெயிலில் மண்டை காய்ந்து போய்க் கிடக்கிறது. நீர் வேறு பழைய கதைகளைப் போட்டு சூடு ஏத்தி விட்டீரே!

திருநெல்வேலி - 11,
எஸ். ஆர். ஸ்வாமி.

♦ மூக்கூர் அவர்களின் கட்டுரைத் தொடர், முதல் வாரமே தெய்வீக மணம் பரப்பத் தொடங்கி விட்டது. பத்மவாசனின் ஓவியமும் சிறப்பாக உள்ளது.

சென்னை - 39, மஞ்சுளா பாய்.

♦ 'சொர்க்கத்தில் நரசிம்மராவ்' கற்பனைத் துணுக்கு என்றாலும், இன்றைய காங்கிரசின் அவல நிலைக்கு வெகு பொருத்தமாகவே இருந்தது. சபாஷ்!

கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

♦ கலைஞர் புதிதாகப் பதவியேற்றிருக்கும் தருணத்தில், வள்ளுவரின் 'இறைமாட்சி' அதிகாரத்தை வலியுறுத்தி, 'சுஜாதா' அவர்கள் எளிய முறையில் விளக்கியது மனதிற்கு இதமாகவும் காலத்திற்கேற்ற அறிவுறுத்தலாகவும் அமைந்திருக்கிறது.

பழனி, எம். கே. மணி.

♦ 'Dunston Checks In' போன்ற குழந்தைகளுக்கான படங்கள் எப்போதாவது வருவது ஒருபுறம் இருக்கட்டும். கோடை விடுமுறையில் இருக்கும் குழந்தைகளை அழைத்துச் செல்வதற்கு ஏற்றவாறு, தக்க சமயத்தில் கட்டிக்காட்டுகிறீர்களே, வெல்டன்!

திருநெல்வேலி-6, வி. முத்து.

♦ ராஜஸ்தான் இளைஞர் குழுமம் சென்னையில் "முத்திபார் அனாஜ்" என்ற திட்டத்தின் மூலம் தானியங்களை சேமித்து ஏழைகளுக்கு விநியோகித்து வருவது அனைவரும் பாராட்ட வேண்டிய திட்டமாகும். காஞ்சி மகாபெரியவர்கள், திருமூலரின் திருமந்திர வாக்கை ஒட்டி (யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி) செயல்படுத்திய பிடி அரிசித் திட்டம் இன்னமும் சென்னையில் பல பகுதிகளில் நடைபெற்று வருகிறது. கடந்த 15 வருடங்களாகச் 'சங்கர சேவைக் குழு' என்ற அமைப்பின் மூலம் பல பகுதிகளில் அரிசி சேகரித்து வறியோருக்கு விநியோகித்து வருகின்றோம். இந்தத் திட்டம் ஒவ்வொரு பேட்டையிலும் செயல்படுத்த வேண்டிய புனித சேவையாகும்.

சென்னை - 33,
வி. எஸ். வாசன்.

**தேனாம்பேட்டையில் உள்ள அன்பகம். இங்கு தான் தி.மு.க.வின் இளைஞரணி அலுவலகம் உள்ளது. ஆங்காங்கே தொண்டர்கள். ஸ்டாலினை 'தளபதி' என்றே எல்லோரும் குறிப்பிடுகிறார்கள். மாடியில் உள்ள அறையில் பார்வையாளர்களைச் சந்திக்கிறார் ஸ்டாலின். சங்கடமான எந்த கேள்வியையும் புன்னகையுடன் சமாளிக்கும் சாதுர்யம் ஸ்டாலினுக்கு வந்து விட்டது. அவரைச் சந்தித்துப் பேசியபோது...**

**"தி.மு.க. இந்த அளவுக்குப் பெரிய வெற்றி பெறும் என்று எதிர்பார்த்தீர்களா?"**

*"கடந்த ஐந்தாண்டுகளாக, தமிழகம் முழுக்க ஆயிரக்கணக்கான கிராமங்களில் கொடியேற்று விழா நிகழ்ச்சிகளிலும், பொதுக் கூட்டங்களிலும் கலந்து கொண்டவன் நான். ஜெயலலிதா அரசு மீது மக்களுக்கு ஒரு வெறுப்பு உருவாவதை என்னால் உணர முடிந்தது. ஜெயலலிதா அரசு தொடர்ந்து கையாண்ட ஆணவ, அராஜக, அலட்சியப் போக்கால் மக்களின் வெறுப்பு உச்சகட்டத்தை அடைந்தது. மேலும் 91-ல், கழக ஆட்சி, ஊழல் காரணம் காட்டி கலைக்கப்படவில்லை. வேறு என்ன காரணத்துக்காகக் கலைத்தார்களோ. அப்படிக் கலைத்தது தவறு என்பதையும் இந்தத் தேர்தல் வெற்றி மூலம் மக்கள் சொல்லியிருக்கிறார்கள்."*

**"தேர்தல் வெற்றியில் இளைஞரணியினரின் பங்கு எப்படியிருந்தது?"**

*"இளைஞரணித் தொண்டர்கள் தீவிரமாகப் பணியாற்றினார்கள். இன்னமும் சொல்லப் போனால், மாநில சட்டமன்றத்துக்கும் மக்களவைக்கும் போட்டியிட்டவர்களில் 30லிருந்து 40 சதவீதம் வரை இளைஞரணியினர் தான்."*

**"அப்படித் தீவிரமாக பணியாற்றிய இளைஞர் அணியினருக்குத் தகுந்த அளவு அமைச்சரவையில் பங்கு கொக்கப்பட்டதா?"**

*"நிச்சயமாக! இப்போது அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்களில், பிச்சாண்டி, எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் ஆகியோர் இளைஞரணியில் பொறுப்பில் இருந்தவர்கள் தான். சுரேஷ் ராஜன் இன்றும் கூட மாவட்ட இளைஞரணித் தலைவராக இருக்கிறார். மேலும் தலைவரே சொன்னது போல் சமுதாயத்தில் பல்வேறு வகுப்பு மக்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டியிருப்பதால், தகுதியுள்ள சிலர் கூட விடுபட்டிருக்கக் கூடும்."*

**"நீங்கள் குறிப்பிட்டவர்கள் அமைச்சர்கள் ஆனதற்குக் காரணம் உங்கள் சிபாரிசா?"**

*"யாருக்கும் மந்திரி பதவி கொடுக்கச்*



*சொல்லி தலைவரிடம் நான் சிபாரிசு செய்தது இடையாது."*

**"உங்களுக்கே கூட அமைச்சர் பதவி கொடுக்கவில்லை என்பதால் இளைஞரணி கொதித்துப் போயிருப்பதாகச் செய்திகள் வந்தனவே?"**

*"இதெல்லாம் பத்திரிகைகள் எழுதுவது. தலைவர் எனக்கு அமைச்சர் பதவி தருவதாகச் சொன்னார். நான்தான் மறுத்து விட்டேன்."*

**"காரணம்?"**

*"முக்கியமாக தொகுதி வேலையை கவனிக்க வேண்டுமென்றுதான்! தவிர, அமைச்சர்பதவி ஏற்றால் தமிழகமெங்கும் சுற்றி கழகப் பணி ஆற்ற முடியாது. அரசுப் பொறுப்பில் முடங்க வேண்டியிருக்கும்."*

**"நீங்கள் பெருந்தன்மையாக அமைச்சர்**

# அமைச்சராகாவிட்டாலும் அதிகாரம் செய்வாரா?

பதவி வேண்டாமென்றாலும் உங்கள் மனைவி, குடும்பத்தினர் நீங்கள் அமைச்சராவதை விரும்பியிருப்பார்களே!"

"என் மனைவி, குடும்பத்தினர் அரசியலில் நான் எடுக்கும் முடிவுகளில் தலையிடுவது கிடையாது."

**"மகன் என்ற முறையில் நீங்கள் தந்தைக்குப் பெருமை சேர்த்து விட்டதாகவும், தந்தை என்ற முறையில், தாம் தான் மகனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து தவறி விட்டதாகவும் கலைஞர் சொல்லியிருக்கிறாரே!"**

"இதுதான் எனக்குப் பெரிய பாராட்டு. சர்டிபிகேட்! அமைச்சர் பதவி கொடுக்கும் மகிழ்ச்சியை விட, இந்தப் பாராட்டைக் கேட்க எனக்குப் பெருமையாக இருக்கிறது!"

**"கலைஞரின் மகன் என்பதால் உங்கள் வளர்ச்சி தடைபடுவதாக நினைக்கிறீர்களா?"**

"துவக்கத்திலிருந்தே தலைவர் எந்த விதத்திலும் என்னை push செய்ததில்லை. வட்டப் பிரதிநிதி, மாவட்டப் பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர் என்று கட்சியில் உள்ள பொறுப்புகளுக்கு நான் உட்கட்சித் தேர்தல் மூலம் தான் வந்தேன். கழகத்தில் விவசாய அணி, மாணவர் அணிக்குச் செயலாளர்களை நியமிப்பது போல, என் உழைப்பையும், ஆர்வத்தையும் பார்த்து இளைஞரணிச் செயலாளராக நியமித்தார்கள். அந்தப் பணியில் என்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வருகிறேன். 1984, 1989ல் ஆயிரம் விளக்கில் போட்டியிட, தொகுதித் தொண்டர்கள் தான் தலைவரிடம் போராடி சீட் பெற்றுத் தந்தார்கள். தலைவருக்கு என்னால் எந்த விதத்திலும் சங்கடம் வராமல் பார்த்துக் கொள்வதையே ஒரு பெரிய பொறுப்பாகக் கருதுகிறேன்."

**"நீங்கள் அமைச்சராகாவிட்டாலும் உங்களைச் சுற்றி அதிகார மையம் ஒன்று உருவாகும் என்று சொல்லப்படுகிறதே!"**

"தமிழகம் முழுக்க உள்ள கழகத் தொண்டர்கள், இளைஞரணியினர் பல்வேறு சிபாரிசுகளுக்கு என்னிடம் வரலாம். ஆனால், என் தொகுதி மக்கள் பிரச்னை தவிர வேறு எந்தப் பிரச்னைக்கும் அமைச்சர்களையும், அதிகாரிகளையும் நான் நேரில் சந்திக்க மாட்டேன். சம்பந்தப்பட்டவர்கள் அந்தந்தத் தொகுதி எம்.எல்.ஏ.வுடன் சென்று அமைச்சரைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விடுவேன். கழகச் செயல்பாடுகளில் கூட மற்ற அணிச் செயலாளர்களைப் போல நான் தனித்து அறிக்கை விடுவது கிடையாது. பொதுச் செயலாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்ற பின்னரே இளைஞரணி அறிக்கைகள் வெளிவரும்."

**"உங்கள் தொகுதியின் முக்கிய பிரச்னை?"**

"குடிதண்ணீர் பிரச்னைதான் பெரிய பிரச்னையாக இருக்கிறது. பல இடங்களில் தண்ணீர் வருவதில்லை. வந்தாலும் சாக்கடை நீர் கலந்து விடுகிறது."

**"எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.வை விட ஆளும் கட்சி எம்.எல்.ஏ.வாகச் செயல்படுவது சிரமம் இல்லையா?"**

"ஆமாம்! ஆளும் கட்சி என்ற பொறுப்பு இருக்கிறது அல்லவா! மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வேகம் எனக்கு இருந்தாலும், அந்த வேகத்துக்கு அரசு இயந்திரம் இயங்க வேண்டும். நடைமுறையில் பல்வேறு காரணங்களால் அது சாத்தியப்படாது. அப்போது தொகுதி மக்களின் அதிருப்தியைச் சம்பாதிக்க வேண்டிய சூழ்நிலையும் வரலாம் என்கிற இக்கட்டான நிலைதான் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.வான எனக்கு."

சந்திப்பு : **ப்ரியன்**
படம் : **'பேஜர்' கே. மூர்த்தி.**

• காயத்ரி - ரஞ்சனி



# வாயடைத்துப் போன குயில்கள்!

'சென்னை மாநகரம் வெறும் கான்கிரீட் காடாக மாறி வருகிறது' என்று ஒரு பெருங்குறை பலருக்கு இருந்து வருகிறது. 'சில வருடங்களுக்கு முன் பார்த்த பசுமையான மரஞ்செடிகொடிகளும் கேட்ட பறவைகளின் இனிய கானமும் இப்போதெல்லாம் அனுபவிக்கக் கிடைப்பதில்லை...' என்று இவர்கள் வருத்தப்படுகிறார்கள்.

இந்த மனிதர்களெல்லாம் ஒரு நடை அடையாறு, இந்திரா நகரிலுள்ள யூத் ஹாஸ்டலுக்குப் போய் வருவது நல்லது. இளம் பயணிகளுக்கென நடத்தப்படும் அந்தத் தங்கும் விடுதி வளாகத்தில், பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் செடிகொடிகளும் மரங்களும் இருக்கின்றன; அந்த மரங்களின் மறைவில் ஏராளமான குயில்களும் இருக்கின்றன; அவை உல்லாசமாகப் பாடிக் கொண்டும் இருக்கின்றன!

அதுவும் அந்த யூத் ஹாஸ்டல் வளாகத்தின் திறந்தவெளியில் 'ஹம்சத்வனி' சபாவின் இசைக் கச்சேரிகள் நடக்கும்போது, அந்தக் குயில்களுக்குத் தலைகால் புரியாது! வித்வான்கள் வந்து மேடையில் அமர்ந்து சுருதி சேர்க்க ஆரம்பிக்க வேண்டியதுதான்... உடனே அவை ரகளையாகப் போட்டி போட்டுக் கொண்டு பாட ஆரம்பித்து விடும்!

ஏட்டிக்குப் போட்டியில் சளைக்காத இந்தக் குயில்கள் கூட சமீபத்தில் ஒருநாள் ஸ்தம்பித்து, வாயடைத்துப் போயின.

'ஏரானாபை' என்று தோடி வர்ணம் ஆரம்பித்தபோது 'அக்கூ!' என்று ஒரே ஒரு ஆச்சரியக் கூவல் கூவிவிட்டு நிறுத்திக் கொண்டன.

அந்தக் குயில்களைக் கட்டிப் போட்டவர்கள், வயலின் வாசித்த இரண்டு சகோதரிகள் - உடன் பிறந்த சகோதரிகள்தான்! ரஞ்சனி, காயத்ரி.

இவ்விருவரும் ஸ்ரீராம் நிறுவனத்தின் Music Appreciation Circle அமைப்பினால் சிறந்த இளம் கலைஞர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவ்வமைப்பின் ஆதரவில் அன்று ஹம்சத்வனியில் வாசிக்கும் வாய்ப்புப் பெற்றிருந்தார்கள். இந்தத் தேர்வின் மூலம் ரஞ்சனி - காயத்ரிக்கு இவ்வாண்டு பத்து கச்சேரிகளுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று சொன்னார்கள். அன்று ரஞ்சனி வாசித்த ஹரிகாம்போதிக்கும் காயத்ரி வாசித்த பேகடை ராகத்துக்கும் பத்து என்ன... 10X10 வாய்ப்புகள் கூடத் தரலாம் என்று தோன்றிவிட்டது.

வயலினில் இதுவரை பெரிய பெரிய வித்வான்களெல்லாம் கடைப்பிடித்து வரும் பாணிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட பாணி இந்த அபூர்வ சகோதரிகளுடையது. ஏராளமான கற்பனை வளத்துடனும் உற்சாகத்துடனும் வாசிக்கிறார்கள். இவ்வளவு சரக்கு கையில் இருக்கும் போது, 'கொஞ்சம் வரம்பு மீறி விளையாடிப் பார்த்தால் என்ன...?' என்று இளம் வித்வான்களுக்கு ஒரு நப்பாசை வரும். ஆனால், சகோதரிகள் அதற்குத் துளியும் இடங்கொடுக்கவில்லை. கர்நாடக சுத்தமான எல்லைக்குள்ளேயே புதுப்புது அழகுகளை வெளிப்படுத்தினார்கள்.

மிருதங்கம் வாசித்த நெய்வேலி நாராயணனும் கடம் வாசித்த கார்த்திக்கும் சகோதரிகளுடன் சேர்ந்து கொள்ள, நம்மை இனிமையும் உற்சாகமும், உருக்கமும் அமைதியும் மாறிமாறிப் பளிச்சிடும் இசையுலகுக்கு அழைத்துப் போய்விட்டார்கள்.

கச்சேரியெல்லாம் முடிந்து, தரையில் கால் பாவுகிற நேரத்தில் ஒரு புதிய கவலை வந்து நம்மைப் பற்றிக் கொண்டது.

இந்த ரஞ்சனி-காயத்ரி சகோதரிகள் அனேகமாக எல்லா முன்னணி வித்வான்களின் கச்சேரிகளுக்கும் தங்கள் வயலின் வாசிப்பு மூலம் மெருகு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி தனிக் கச்சேரி வாய்ப்புகள் பெருகப் பெருக, பக்கவாத்யம் வாசிப்பதை சகோதரிகள் நிறுத்திக் கொண்டு விட்டால்...? நஷ்டம் அந்த முன்னணி வித்வான்களுக்கு மட்டும் அல்ல, ரசிகர்களுக்கும்தான்! எனவே, பக்கவாத்ய பணியையும் அவர்கள் தொடர வேண்டும் என்று ரசிகர்கள் சார்பில் அன்புக் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது!

- சிஷ்யா

படம் : யோகா

KANMANI
AGRO
GOLD
FARM

ஸ்ரீ அன்னையே துணை

# KANMANI AGRO GOLD FARM

9,10 TH AVENUE, ASHOK NAGAR, MADRAS - 600 083. TEL: 482 43 79

**[A KANMANI GROUP OF COMPANY]**

CATERING CASH CROP CULTIVATION
LIKE VEGETABLES, FRUITS & FLOWERS

## ACCEPTS FIXED DEPOSITS

*STRICTLY UNDER 45 S. CHAPTER III C OF RBI ACT OF 1934*

| PERIOD | 1 YEAR | 2 YEARS | 3 YEARS |
|---|---|---|---|
| INTEREST PAID QUARTERLY | @ 24% P.A. | 24% P.A. | 24% P.A. |
| INCENTIVE PAID INITIALLY | 3% | 6% | 9% |
| SPL. INCENTIVE FOR DEPOSITORS OF RS. 10,000/- AND ABOVE | - | - | 3% |

*Plus Attractive Gifts for all Depositors.*

Mediamate/KA/MS/96

# பூஜா என்றொரு பூனைக்குட்டி



ஓரே ஒரு செகண்ட். கொஞ்சம் கவனிக்காமல் விட்டிருந்தால் ஜனா அதை மிதித்திருப்பான். கதவைத் திறந்து அவசரமாய் வெளியே எட்டு வைக்கப் போக அது - பூஜா - மியாவ் என்று காலுக்கடியில் நின்றிருக்கிறது. சின்ன பூனைக்குட்டி. விடிகாலை அரை யிருட்டு வேறு. தூக்கக் கலக்கம். சரியாய்த் தெரியவில்லை. சட்டென்று தடுமாறி நிதானித்ததில் கையில் பால் வாங்க வைத்திருந்த பாத்திரம் படிகளில் உருண்டது.

"சனியன்..." என்றான். பாத்திரம் கீழே விழுந்த சப்தத்தில் அதுவும் பயந்து கதவு நிலையோரம் ஒடுங்கி நின்றது.

ஜனாவுக்கு ஒரு நிமிடம் ஸ்தம்பித்த மாதிரி இருந்து. பின்னர் கீழே விழுந்த பாத்திரத்தை எடுத்துக் கொண்டு இறங்கினான்.

சைக்கிளுக்குத் தன்னுடம்பை முட்டுக் கொடுத்துக் கொண்டு ராமசாமி நின்றான். ஜனாவின் முகம் தெரிந்ததுமே குவளையில் அரை லிட்டர் பால் பிடித்து வைத்துக் கொண்டிருந்தான். அதை ஜனாவுக்கு ஊற்றிவிட்டுக் கேட்டான்:

"சம்சாரம் ஊருக்குப் போயிருக்கு போல...?"

"ஆமா..." சொல்லிவிட்டு திரும்பி வாசல் படிகளில் தேடினான் ஜனா. அதைக் காணோம். உள்ளே போனதோ, வெளியே ஓடியதோ, எங்கேயும் சத்தத்தைக்கூடக் காணோம்.

பாத்திரம் சின்னதாய் இருந்ததால் அடுக்களைவரை பாலை சிந்தாமல் கொண்டுபோவதில் கவனம் தேவையாயிருந்தது. அலமாரியில் பத்திரமாய் அதை மூடிவைக்கும்போது பூனைக்கு எட்டுமோ என்று சந்தேகம் வந்தது. ராமசாமியின் சைக்கிள் பெல் பக்கத்து வீட்டில் கேட்டுவிட்டு அப்புறம் தேய்ந்து போனது. மணி ஆறேகால் ஆகியிருந்தது. அவனுக்குப் பத்தரைக்கு ஆஃபீஸ் போனால் போதும். பத்தேகாலுக்கு ஜீப் வரும்.

எல்லா அறை ஜன்னல்களும் சாத்தப்பட்டு இருந்தது. வீடு முழுக்க பரவலாய் ஒரு தனிமை உணர்வை கொண்டு சேர்த்திருந்தது. சித்ராவை அவள் வீட்டில் விட்டு வந்து ஐந்து தினங்களாயிற்று. கல்யாணம் ஆனதற்குப்பின் முதல் பிரிவு. அவளது அடிவயிற்றில் புதிய உயிரின் தொடக்க நிலை. தொடர்ந்து வாந்தியும், டாக்டரின் பரிசோதனையும் அதை உறுதி செய்துவிட்டன. அவளுக்குத்தான் எத்தனை சந்தோஷம் அதில்? கழுத்தில் பாசிமணி மாலைகளும், உடம்பில் கலர் சாயத்தில் முக்கின மாதிரி துண்டும் அணிந்த மபத்லால் ஃபேப்ரிக்ஸ் காலண்டர் குழந்தைக்குத்தான் அதற்கப்புறம் எத்தனை மவுசு! சித்ரா அதையே கொட்டக் கொட்டப் பார்த்துக் கொண்டு இருந்தாள். "இது மாதிரியே ஒண்ணு வேணும் நமக்கு..."

எல்லாம் சரிதான். ஏதாவது டெஸ்ட்

அது இது என்று எடுக்கப்போக ஒரு நல்ல ஆஸ்பத்திரி இல்லாத பிரதேசத்தில் அவர்கள் வசிக்கிற க்வாட்டர்ஸ். ஒரு ரெண்டு மூன்று நாட்களுக்கு காய்ச்சல் என்று கூடப் படுத்து விட்டாள். இடையிடையே வாந்தி. பக்கத்து வீட்டுக் கல்யாணி மாமிக்கு அவளின் தீராத வேலைக்கு நடுவே இவளையும் அவ்வப்போது வந்து பார்த்துக் கொள்கிற சிரமம் தேவையா என்ன?

சித்ராவை அவள் வீட்டில் கொண்டுபோய் விட்டான் ஜனா. பக்கத்தில் 'நந்தா க்ளினிக்' சகல வசதிகளுடன் இருக்கிறது. நல்ல லேடி டாக்டர் இருக்கிறார். கொஞ்ச நாட்கள் அவள் அங்கிருப்பதே நலம்.

ஜனாவும் நாலைந்து நாள் லீவு போட்டுவிட்டு அவள் கூடவே இருந்தான். பிரிகிறபோது ஒரு மாதிரியாய் ஆகி விட்டது.

"சீக்கிரம் வந்துடுவேன். நீங்களும் லீவு கெடைக்கும் போதெல்லாம் இங்க வந்துட்டுப் போங்க..."

"சரி..."

"ஒழுங்கா நேரத்துக்கு சாப்பிடுங்க..."

"ஆகட்டும்..."

"அப்புறம் பூஜாவை பார்த்துக்குவீங்க இல்ல?"

"ம்..."

யாரும் பார்க்காத சந்தர்ப்பத்தில், கிடைத்த இடைவெளியில் கிடைத்த இறுக்கத்தில், அணைப்பில், அழுத்தமான முத்தத்தில்...

இன்றோடு ஐந்து நாளாகிவிட்டது. வீடு முழுக்க ஒரே வெறுமை.

ராமசாமி வந்து கலைத்த தூக்கம் கொஞ்சூண்டு மிச்சமிருந்தது. புறவாசல் மண்தரையில் தண்ணீர் தெளிக்கிற மாதிரி ஜில்லென்று அவளின் நினைப்பில், தலையணையை கட்டி இறுக்கிக் கொண்டு 'சித்ரா ஆஆ...' என்றான் லேசாக. பேசாமல் லீவு போட்டுவிட்டு அவளைப் பார்த்துவிட்டு வந்தால் என்ன? என்று அத்தனை காலையில் தோன்றியது அவனுக்கு. 'பொண்டாட்டிய பிரிஞ்சு ஒரு நிமிஷம் கூட இருக்க முடியலை பார்!' என்கிற வாசகம் மாமனார், மாமியார் பார்வையில் இருக்கும்.



**சித்ரன்**

வேண்டாம்.

அப்படியே எத்தனை நேரந்தான் படுத்திருப்பது? இன்றைக்கு ப்ராஜக்ட் மெய்ன்டனன்ஸ் இருக்கிறது. காலைக் கடன்கள் மற்றும் சமையலை முடித்துக் கொண்டு கிளம்புவதற்குச் சரியாயிருக்கும்.

போர்வையை மடித்து வைத்துவிட்டு, எழுந்தான்.

'மியாவ்' என்று குரல் அவன் கவனத்தைக் கவர்ந்தது.

ஐயோ! அது இன்னும் உள்ளேயா இருக்கிறது? முன்னறைக்கு ஓடினான். சத்தம் அங்கேயிருந்து வந்தது போலத்தான் இருந்தது. 'எங்கே அது?'

அவனைப் பொறுத்தவரை அது ஒரு பூனைக்குட்டி. அவ்வளவே.

'பூஜா' என்று சித்ராதான் பேர் வைத்தாள். டீ.வி.யில் இந்தி ட்ராமாவில் கூப்பிடுகிற மாதிரி நீட்டமாய் 'ஹரே... பூஜாஆ! ஜாஆஆ...' என்று கூப்பிடத் தொடங்கினாள். அவளுக்கு எப்படி இப்படியெல்லாம் தோன்றுகிறதென்று தெரியவில்லை. ஜனாவுக்கு அந்தப் பூனையை அப்படியொன்றும் பிடிக்கவில்லை. ஏதோ அவள் ஆசைக்கு வளர்க்கட்டுமே என்று விட்டதோடு சரி.

அதைத் திரும்பிப் பார்ப்பதற்கான அவசியம் அவனுக்கெதுவும் ஏற்படவில்லை. வீட்டுக்குள் வளைய வரும் போது எந்த மூலையிலிருந்தாவது அதன் குரல் கேட்கும். அது பொட்டைக் குட்டி என்பதே அவனுக்கு ரொம்ப நாள் கழித்துத்தான் தெரிந்தது. அத்தனை ஆர்வம்.

சித்ரா இல்லாத இந்தக் காலைப் பொழுதில் எங்கிருந்தோ வரும் மியாவ் என்ற குரல் அவனை ஈர்ப்பதாயிருக்கிறது. அவசரமாய் அங்கே

யும் இங்கேயும் பார்த்தான். ஷோ-கேஸ் பொருட்களுடன் இருக்கிற ஒரு அலமாரியின் இரண்டாவது நிலையில் வாலைச் சுழற்றிக் கொண்டு அது நின்றிருந்தது. பக்கத்தில் கன்றுடன் புல்லாங்குழல் வாசித்த படி கண்ணன் பொம்மையொன்று. அது கொஞ்சம் அசங்கினாலும் விழுந்துவிடக் கூடிய நிலையில்.

'சூ' என்றான். பார்த்ததுமே கோபம் கோபமாய் வந்தது.

குட்டியாய் இருந்தபோது இதற்கு இத்தனை உயரம் ஏறத்தெரியாது. மிகக் குறுகிய காலகட்டத்தில் அதன் உயரம், வளர்ச்சி எல்லாமே அதிகமாகிவிட்டது. 'பூனைக்குட்டி' என்று கூட இப்போது சொல்லிவிட முடியாதுதான். சித்ராவின் கவனிப்பு அப்படி.

கண்ணிமைக்கும் நேரத்தில் கண்ணன் சிலை 'டம்' என்று விழுந்து ப்ளாஸ்டர் ஆஃப் பாரிஸ் துண்டுகளாய் சிதறின. ஒரு தாவல், ஒரு ஓட்டத்தில் பூனை கதவுக்கு வெளியே பாய்ந்திருந்தது. ஒரு நிமிடம் எதுவும் செய்யத் தோன்றாமல் சிதறின துண்டுகளைப் பார்த்துக் கொண்டு நின்றான். ஆத்திரம் பீறிட்டு எழுந்தது.

இந்த லட்சணத்தில் 'பூஜாவைப் பாத்துக்கங்க' என்று சித்ராவின் கோரிக்கை வேறு. எங்கே போய் பார்த்துக் கொள்வது? எத்தனை தொந்தரவு! சதா அதன் மீது ஒரு கண் வைத்து அலைய முடியுமா? இது மாதிரி மூன்று நான்கைத் தள்ளிவிட்டு உடைத்தாயிற்று. அப்புறம் வேறு இடமே இல்லை போல் மேல் தொட்டிக்கு தண்ணீர் ஏற்றுகிற மோட்டார் மேல் ஏறிப் படுத்துக் கொள்கிறது. வேலியோரம் பிடித்த ஓணானை வாயில் கவ்விக் கொண்டு முன் கதவுக்கும் பின் கதவுக்கும் வீட்டுக்குள் ஓடுகிறது. தினம் பால் வாங்கக் கதவு திறக்கும் போது காலுக்கடியில் அதை மிதிக்காமல் தடுமாற வேண்டியிருக்கிறது. சித்ரா எப்படி அதனுடன் அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்கிறாள் என்று விளங்கவில்லை. ஜனாவுக்கு அது முடியவில்லை. இன்று அது கண்ணில் படட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்றிருந்தான்.

**ப**த்தேகாலுக்கு ஜீப் வந்ததும் வீட்டைப் பூட்டிவிட்டு ஏறப் போனான். கல்வாழை செடியோரம் ஏதோ பூச்சியைப் பிடிக்கிற மும்முர முயற்சியில் அது இருந்தது. பூஜா! அதன் வால் சுழற்சி மட்டும் நிற்பதாய் இல்லை. படியில் உருண்ட பால் பாத்திரமும் உடைந்து நொறுங்கின கண்ணன் சிலையும் நினைவுக்கு வந்தன. அதை எரிச்சலுடன் பார்த்தான்.

“கொஞ்சம் இருப்பா...” என்று ட்ரைவரிடம் சொல்லிவிட்டு அதை பின்புறமாய் அணுகி லபக்கென்று எடுத்துக் கொண்டான். மியாவ் என்று ஒரு தடவை கத்திவிட்டு பிறகு கம்மென்று இருந்தது அது. ஜீப்பில் ஏறிக் கொண்டான்.

“பூனையும் ஆஃபீஸ் வருதுங்களா?”

“ஆமாமா...” என்றான். “இனிமே இது எங்கேயும் வரக் கூடாது!”

ஜீப்பை ரொம்ப தொலைவு விடச் சொல்லி பாதையிலிருந்து விலகி ஒரு மண் ரோட்டில் ஒரு புதர் சூழ்ந்த வேப்ப மரத்தடியில் நிறுத்தச் சொல்லி அதை அங்கே விட்டான். எல்லாம் கொஞ்ச நேரத்துக்குள் நடந்து முடிந்த விஷயங்களாயிருந்தன.

**ம**றுபடி ஆஃபீஸ் வந்து உட்கார்ந்தபோது நிம்மதியாய் உணர்ந்தான். வேப்ப மரத்தடியில் என்ன நடந்ததென்று புரியாமல் அது நின்றிருக்கிற கோலம் மனசில் நிழல் போல கொஞ்சம் நேரம் இருந்தது. சித்ரா வந்து “பூஜா எங்க?” என்று கேட்டால் என்ன பதில் சொல்வதென்று யோசனை. ட்ரைவர் எதுவும் உளறாமல் இருந்தால் அது எங்கேயோ காணாமல் போய்விட்டதாகப் பொய் சொல்லலாம். ஓரிரண்டு நாள் அது தொலைந்த துக்கம் இருக்கும். மேலும் அவள் வரும்போதுதானே? அப்போது பார்த்துக் கொள்ளலாம். அவளைக் கொண்டு போய் விடப்போய் ஜனாவும் நாலைந்து நாட்கள் அவள் ஊரிலேயே இருந்தபோது அந்தப் பூனை என்ன பண்ணியிருக்கும் என்று புரியவில்லை. அதற்குப் பாலும் சாப்பாடும் எங்கே கிடைத்தது?

**வீ**ட்டுக்கு வந்து கதவைத் திறந்தபோது உள்ளே சித்ராவின் கடிதம் கிடந்தது. அவசரமாய் பிரித்துப் படித்தான். அவள் நலம் தானாம். அவ்வப்போது வாந்தி இருந்தாலும் அதெல்லாம் ஒரு பொருட்டாய்த் தெரியவில்லையாம். சந்தோஷமாகவே இருக்கிறாளாம். ஒழுங்காய் சாப்பிடுகிறீர்களா? உடம்பை கவனித்துக் கொள்ளவும் என்று அக்கறைப்பட்டிருந்தாள். பின்புற வாழைமரம் காய்த்திருப்பதாகவும், லேசாய் நேற்று மழை பெய்தது என்

## ஞாபகப்படுத்துகிறோம்!



**அ**மரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டிக்கான கதைகள் அனுப்பக் கடைசித் தேதி ஜூன் 15. முழு விவரங்களுக்குச் சென்ற வாரக் கல்கி பாருங்கள். அல்லது அடுத்த வாரம் வரை காத்திருக்கவும்.

— ஆசிரியர்

# ஆன்லைன் இருக்க கவலை எதற்கு?

"ஹலோ". குரல் கேட்டு திரும்பிய கணேஷின் முன் அவனது கல்லூரி நண்பன் வசந்த் நின்று கொண்டிருந்தான்.

"டேய் வசந்த் நீயா? போபால்லதானே வேலை செஞ்சுக்கிட்டிருந்தே?" என்று வியப்புடன் கேட்டான் கணேஷ்.

"ஆமா மாப்ளே. போபால்ல தான் வேலை செஞ்சுக்கிட்டிருந்தேன். திடீர்னு எங்க மாமா தன் பெண்ணை எனக்கு கட்டிக் கொடுத்ததோட மெட்ராஸ்ல ஒரு வேலையையும் வாங்கிக் கொடுத்திட்டார். சரின்னு, வேலையை ராஜினாமா பண்ணிட்டு மெட்ராஸ்லேயே செட்டிலாயிட்டேன்" என்றான் வசந்த்.

"சரிடா, மெட்ராஸ் வந்தியே ஒரு லெட்டர் போடக் கூடாது? சரி. என்ன விஷயமா இந்தப் பக்கம் வந்தே?" என்றான் கணேஷ்.

"நான் ராஜினாமா பண்ண கம்பெனியிலிருந்து என்னோட பழைய பாக்கியை செட்டில் பண்ணாங்க. கணிசமா ஒரு தொகை கிடைச்சது. அதை கையில வைச்சுக்கிட்டிருக்க பயமாயிருக்கு. ஒண்ணு திருட்டு பயம். அடுத்தது நானே செலவு பண்ணிடுவேனோன்னு..."

"அப்ப ஒரு நல்ல ஃபைனான்ஸ் கம்பெனியிலே முதலீடு பண்ணிடு. நான் Online Finance-ல முதலீடு பண்ணியிருக்கிற மாதிரி!" என்று தீர்வு தந்தான் கணேஷ்.

"ஆன்லைன்? அப்படி என்ன அவங்க பண்றாங்க?"

"அவங்களோட தனிப்பட்ட முறையில் செய்யும் சேவை. மற்றும் அவங்களோட நேர்த்தியான தொழில்முறை டெபாசிட்தாரர் களுக்கு நிச்சயம் பிடிக்கும். ஆன்லைனின் 'CARE A(FD) RATING' உன்னோட பணத்துக்கு முழுப்பாதுகாப்பளிக்குது! ஆன்லைனோட வட்டி விகிதம் RBI-யோட சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதாலே நியாயமான வட்டி 'டாண்'னு வந்துடும். என்னோட சகலை அமெரிக்காவுல வேலை செய்யறார். அவர் ஒரு NRI. அவரும் அவரோட கூட வேலை செய்யற சில NRIs-ம் ஆன்லைன்ல டெபாசிட் பண்ணியிருக்காங்க. என்னோட சிங்கப்பூர் சித்தப்பா கூட ஒரு NRI-தான். அவரும் ஆன்லைன்லதான் டெபாசிட் பண்ணியிருக்கார். NRIs எல்லாம் ஆன்லைன் மேலே எவ்வளவு நம்பிக்கை வெச்சிருக்காங்கன்னு இதிலிருந்தே உனக்குத் தெரியும்."


"சரி கணேஷ், எனக்கு அந்தக் கம்பெனிப் பத்தின விவரங்கள் வேணுமே. எப்படி கிடைக்கும்?"

கணேஷ் தனது பர்ஸை பிரித்து ஆன்லைனின் கார்டை எடுத்து "வசந்த், நீ 8276768/8265301/8234072-ங்கற டெலிபோன் நம்பர்ல இல்லேன்னா 8267006-ங்கற ஃபேக்ஸ் நம்பர்ல ஆன்லைன் தொடர்பு கொண்டா உனக்குத் தேவையான விவரங்கள் உன் வீட்டிற்கே வந்து சேரும். ஆனா ஒண்ணு மட்டும் சொல்றேன். ஆன்லைனோட தனிப்பட்ட சேவையை உணர்ந்துட்டேன்னா, நீயே மத்தவங்களுக்கு ரெகமண்ட் பண்ணுவே. சரி, சரி. வண்டியில ஏறு. என் வீட்டில உன்னை அறிமுகப் படுத்தறேன்."

"உன் வீட்டிற்குப் போறதுக்கு முன்னாடி ஒரு போன் பண்ணணும். எங்கேயாவது ஒரு டெலிபோன் பூத்துல வண்டிய கொஞ்சம் நிறுத்து" என்றான் வசந்த்.

"வீட்டிற்கு ஏதாவது அவசரமா பேசணுமா?" என்று கேட்டான் கணேஷ்.

"போன் வீட்டுக்கில்லை. ஆன்லைனுக்கு!" என்றபடி விளிலடித்தான் வசந்த்.



**CARE 'A' RATING**

**ஆன்லைன் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்**

248, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
சென்னை-600 014.
தொ.பே.: 8276768/8265301/8234072
ஃபேக்ஸ்: 8267006

இந்த விளம்பரம் இந்து நாளிதழில் 29.1.96 அன்று வெளிவந்த சட்டபூர்வமான விளம்பரத்தின் தொடர்ச்சியே. இந்த விளம்பர வாசகம் டெபாசிட் விண்ணப்பப்படிவத்திலும் அச்சிடப்பட்டுள்ளது. டெபாசிட் செய்வதற்கு முன் இதை கவனத்தில் கொள்ளவும்.



''பையனுக்கு அட்மிஷன் வாங்கணும்னு ஹெட்மாஸ்டர் வீட்டுக்கே போனியே... என்ன ஆச்சு?''

''அது ஸ்கூல் ஹெட்மாஸ்டர் இல்லையாம். சலூன்காரன்தான் அப்படி போர்டு மாட்டி வைச்சிருக்காராம்!''

– வெ. ராஜாராமன்

நும் தகவல் தெரிவித்திருந்தாள். வரும்போது கல்யாண வீடியோ கேசட் எடுத்து வரவும் என்றெழுதியிருந்தாள். அப்புறம் அன்பு முத்தங்கள். 'பூஜாக்குட்டி' நலந்தானே? உங்கள் சித்ரா.

கடைசி கேள்வி உறுத்துவதாயிருந்தது. ரொம்ப விசாரிப்பாய் ஞாபகமாய் அதைக் கேட்டு எழுதத் தோன்றியிருக்கிறது அவளுக்கு.

இதற்கு என்ன பதில் எழுத முடியும்? அவள் கொஞ்சநாள் கழித்து வீட்டுக்கு வந்தால் கூட முதல் விஷயமாய் 'பூஜா எங்க?' என்றுதான் கேட்பாள் போல.

'அது இந்நேரம் எங்கே அலைகிறதோ?' என்று முதன் முதலாய் ஒரு குற்ற உணர்வும் கவலையும் எழுந்தது.

அவள் ப்ரியமாய் வளர்த்த ஜீவனல்லவா அது? அவளுக்கிருந்த பொறுமையும் பரிவும் நமக்கேன் இல்லாமல் போனதென்று ஜனாவுக்கு இப்போது தோன்றியது.

ஜீப்பில் போகும்போது அவன் மடியில் அழுத்தமாய் இறுகின அவன் பிடிக்குள் என்னமாய் பாடுபட்டது அது? அந்த இடத்தில் கொண்டுபோய் விடுகிறவரை.

சரி. இதையெல்லாம் பெரிய விஷயமாய் எடுத்துக் கொள்வானேன் என்று கடிதத்தை மடித்து டேபிளில் போட்டான். படுக்கையில் வந்து விழுந்து கொண்டான்.

பேசாமல் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு அந்த வேப்பம் புதருக்குள் போய்த் தேடிப் பார்க்கலாமா என்று எண்ணம் வந்தது. அவனுக்குள் எழுந்த குற்ற உணர்வு இப்போது பூதாகாரமாகி விட்டது. தேடினாலும் அது அங்கேயேவா இருக்கப் போகிறது?

அந்த நினைப்பைத் தவிர்க்க விரும்பி பீரோவிலிருந்து ஆல்பத்தை எடுத்து கல்யாண ஃபோட்டோக்களையெல்லாம் மறுபடி பார்த்தான். சித்ராவை அவன் பெண் பார்க்கப் போகுமுன், அவனுக்குத் தரப்பட்ட அவளின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படமும் ஒரு ஓரமாய் இருந்தது. அதை மட்டும் தனியே எடுத்து உள்ளங்கையில் வெகுநேரம் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பார்த்துக் கொண்டேயிருக்கலாம் போலவும் இருந்தது.

ஆல்பத்தை மார்பில் சாய்த்துக் கொண்டு அப்படியே தூங்கியும் விட்டான். நிறைய குழந்தைகளைத் துரத்திக் கொண்டு ஒரு புல்வெளியில் சித்ரா ஓடுகிறமாதிரி கனவு வந்தது. இந்தப் பக்கம் மரங்களடர்ந்த பகுதிக்குள் ஜனா ஒரு பூனையைத் துரத்திக் கொண்டு தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தான். அதன் 'மியாவ்வ்' என்ற அலறல் அந்தப் பிரதேசம் முழுக்க எதிரொலித்தது. திடுக்கிட்டு விழித்துக் கொண்டபோது உடம்பு முழுக்க வியர்த்திருந்தது. 'மியாவ்' என்ற குரல் வெகு அருகாமையில் கேட்பது போலிருந்தது.

சுற்றுமுற்றும் பார்த்தபோது கட்டிலுக்கடியிலிருந்து அது வெளிவந்தது. ஜனா தூக்கம் கலைந்த கண்களுடன் அதை ஆச்சரியமாய் பார்த்தான். எப்படி, எப்போது அது திரும்பி வந்து சேர்ந்தது என்று யோசிக்கத் தெரியவில்லை. வந்து விட்டது என்பது மட்டும் புரிந்து அந்தக் கணம் லேசாய் நிம்மதி கலந்த சந்தோஷ உணர்வு ஜனாவுக்குள் எட்டிப் பார்த்தது.

அவன் மெல்ல எழுந்து நின்றான். அவனைக் கண்டதும் வழக்கம்போல் அது மிரண்டு ஓடப்பார்த்தது. ஆனால் அதற்கு சற்றும் இடமளிக்காத வகையில் சட்டென்று பாய்ந்து பிடித்துக் கொண்டான். பயக்குரல் ஒன்று அந்த அறை நிசப்தத்தில் வெளிவந்து தேய்ந்தது.

ஜனா அதை எடுத்து மடியில் வைத்துக் கொண்டான். முதலில் திமிற முயன்ற அது பிறகு சாதுவாய் அடங்கிப் போனது. கண்களை மூடிக் கொண்டது. இந்தச் சொகுசு அதற்கு சித்ராவின் மடியிலும் புடைவை மடிப்பிலும் நிச்சயம் கிடைத்திருக்க வேண்டும்.

இத்தனை வாஞ்சையுடன் அதை எடுத்துக் கொண்டிருப்பது இதுவே முதல்தடவை என்பது நினைவில் நெருடியது.

''ஹரே... பூஜா.ஆ.ஆ...' என்று செல்லமாய் கூப்பிட்டுப் பார்த்தான்.

கீழே விட்டவுடன் பூஜா வீட்டுக்குள் எங்கோ ஓடி மறைந்தது. ஜனா மறுபடி கட்டிலில் மல்லாக்கச் சாய்ந்து கொண்டான். பத்து நிமிடம் கழித்து சமையலறையில் 'டொம்' என்று எதுவோ விழுந்து நொறுங்குகிற சப்தம் கேட்டது. ஜனாவிடமிருந்து லேசான பெருமூச்சும் ஒரு மெல்லிய புன்னகையும் மட்டும் வந்தது. உடைந்தது ஏதோ ஒரு பீங்கான் ஜாடியாகத்தான் இருக்க வேண்டுமென்று யூகித்துக் கொண்டான். ஆனால் எழுந்துபோய் பார்க்கத் தோன்றவில்லை.

# இந்திர தனுசு

விஷ்வக்சேனன்

## 22. காகதீய ருத்ராம்பாள்

உரத்த குரலில், ஆனந்தமாக இசைத்துக் கொண்டிருந்தார் சைவத் துறவியார் :

*"மன்னியசீர் மறைநாவல் நின்றவூர்ப் பூசல்*
*வரிவளையாள் மானிக்கு நேசனுக்கும்*
*அடியேன்*
*தென்னவனாய் உலகாண்ட செங்கணாற்கு*
*அடியேன்*
*திருநீல கண்டத்துப் பாணனார்க்கும்*
*அடியேன்"*

செங்கண் சோழனுக்கும், திருநீலகண்டருக்கும் மட்டுமின்றி திரு ஆரூரில் பிறந்து சித்தத்தை சிவன்பால் வைத்திருக்கும் எல்லோர்க்கும் அடிமை நான் என்று சுந்தரமூர்த்தி நாயனார் எழுதிவைத்த அடிமை சாஸனத்தை கனத்த குரலில் பாடிக், கொண்டிருந்தார். அதைக் கேட்டதாலோ, அல்லது எதிர்பாராது போசளரிடமிருந்து கிடைத்துவிட்ட சுதந்தரத்தை எண்ணியதாலோ, தஞ்சை அரண்மனையின் உச்சியில் பறந்த பெரும்புலிக் கொடி, படபடவென்று அடித்து தனது மகிழ்ச்சியைக் காட்டிப் பறந்து கொண்டிருந்தது.

காடவ நாட்டிலிருந்து கிளம்பி, இருதினங்கள் கழித்தே தஞ்சைக்குத் திரும்பியிருந்த துறவியாரின் ஆனந்தம், வந்தது முதலே அதிகரித்திருந்தது. அந்த கனத்த குரல் மேலே பறந்த புலிக் கொடியை ஆனந்தப்பட வைத்தது மட்டுமின்றி அரண்மனைக்குள்ளிருந்து கொங்கு நாட்டு இளவரசியை அந்த மேன்மாடத்து அறைக்கு இழுத்து வரவும் செய்தது.

காரணம் புரியாவிட்டாலும் அந்த கனத்த குரலில் தொனித்த ஆனந்தம் அவள் முகத்தையும் மலர வைத்ததால் அறையின் வாசலில் நின்றபடியே துறவியாரை சற்று நேரம் முறுவலுடன் கவனித்தாள் இளவரசி. "துறவியாரே" என்று அழைத்தாள். கனத்த குரலில் உரத்துப் பாடலை இசைத்துக் கொண்டிருந்தாலும் துறவியாரின் பாம்புச் செவிகளில் இளவரசி மெல்லிய குரலில் விடுத்த அழைப்பு விழுந்து விட்டதால் விழிகளைத் திறந்து அவளை நோக்கியவர், "வா பூங்கோதை, இப்படி அமர்ந்து கொள். இந்தப் பாடலைக் கேள்" என்றார். மீண்டும் பாடலை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார்.

பூங்கோதையின் குரல் மீண்டும் குறுக்கிட்டது. "அதென்ன துறவியாரே? சுதந்தரம் கிடைத்ததென்று சோழநாடே மகிழ்கிறது... தாங்கள் மட்டும் அடிமை, அடிமையென்று பாடுகிறீர்கள்? அதில் இத்தனை ஆனந்தம் வேறு?" என்றாள் பூங்கோதை முறுவலுடன்.

துறவியாரின் பதில் திடமாக வந்தது. "பூங்கோதை, அடிமைப்படுவதில் உள்ள சுகம் சிந்தித்தால் மட்டுமே புரியும். மனித வாழ்வே உண்மையில் கடமைக்கும் காதலுக்கும் பொருளுக்கும் புகழுக்கும் அன்புக்கும் அறவழிக்கும் காலத்தின் வேகத்துக்கும் அடிமைப்பட்டே நடக்கிறது. அதில் ஒரு சுகமும் இருக்கிறது. என் போன்ற துறவிகளுக்கும் அடிமைப்படுவதில் தான் சுகம். ஆனால் அது மனிதருக்கா, இறைவனுக்கா என்பதைப் பொறுத்து இன்பமோ துன்பமோ அமைகிறது. சோழ மண்ணும் நானும் இதுவரை போசளருக்கு அடிமையாயிருந்தோம். இனி இறைவனுக்கும் அவன் அடியார்களுக்கும் மட்டும்தான் அடிமையென்று பாடினேன். இதில் தவறென்ன?" என்றார் துறவியார்.

அவர் கூறியதன் பொருள் பூங்கோதைக்கு மெள்ளப் புரிந்தது.

சற்றுக் கழித்து வினவினாள். "சரி, நான்கு தினங்களாகத் தங்களைக் காணவில்லையே, இந்த மழையில் எங்கு சென்று வந்தீர்கள்?" அவள் குரலில் உரிமையுடன் சற்றுக் கோபமும் கலந்து ஒலித்தது.

துறவியாரின் பதில் பூங்கோதையைத் திகைக்க வைத்தது. "பாண்டியருக்கு எதிராக் காடவ மன்னனையும் மற்ற சிற்றரசர்களையும்



ஒன்று சேர்க்கச் சென்றிருந்தேன் பூங்கோதை" என்றார் அவர் நிதானமாக.

"துறவியாரே என்ன கூறுகிறீர்கள்?" பூங்கோதையின் திகைப்பு அவள் முகத்திலும் குரலிலும் தெரிந்தது.

"ஆம் குழந்தாய்! காடவருடன் மலையமானையும் சம்புவரையனையும் ஒன்று சேர்த்து, பாண்டியருக்கெதிராகப் படைகளைத் திரட்ட ஏற்பாடுகள் செய்துவிட்டு வந்தேன்" என்றவர் இடி இடியென்று நகைத்தார்.

"அப்படியானால் எதிரிகளின் படைபலம் அதிகரித்து விடாதா?" பூங்கோதை திகைத்தது அவள் முகத்தில் தெரிந்தது.

துறவியாரின் பதில் மீண்டும் வெகு நிதானத்துடன் வந்தது. "படை பலம் அதிகரிக்கத்தான் செய்யும். போர் சற்றுக் கடுமையாகவும் இருக்கும்."

"பின் ஏன் அவர்களை இணைக்க வேண்டும்?" - இளவரசியின் குரலில் உஷ்ணம் தெறித்தது. அவள் முகம் சிவந்து விட்டதையும் கண்களில் தெறித்த கனலையும் கவனித்த துறவியார், மீண்டும் கடகடவென நகைத்தார்.

"ஏன் நகைக்கிறீர்கள்?" - மீண்டும் அதே உஷ்ணத்துடன் வந்தது அவள் கேள்வி.

நகைப்பதை நிறுத்திய துறவியார், "காரணங்கள் இரண்டு குழந்தாய்..." என்றார்.

"இரண்டு காரணங்களா?"

"ஆம். இந்த மூன்று சிற்றரசர்களும்தான் சோழ அரசின் வீழ்ச்சிக்கு வித்திட்டவர்கள். இதில் ஒருவர் மட்டும் முறியடிக்கப்பட்டால் மற்ற இருவரும் சரணடைந்து விடுவார்கள். பின்பு சமயம் பார்த்து மீண்டும் கலகம் செய்யவும் முற்படுவார்கள். அவர்கள் படைகளை ஒன்றாக இணைத்து அழித்து விட்டால் பின்னால் கலகமேதும் செய்ய வாய்ப்பிருக்காது. என் நோக்கம் அதுதான். இரண்டாவதாக இளைய பாண்டியரின் விருப்பமும் இதில் கலந்திருக்கிறது."

"யார்? ஜடாவர்ம வீரபாண்டியரா?" - பூங்கோதையின் குரலில் உஷ்ணம் மறைந்து சற்று



## அருள்வாக்கு

நாம் அநுபவிப்பதற்காகப் பிரபஞ்சம் முழுவதையும் ஈசுவரன் நமக்கென விட்டிருக்கிறார். பலவிதமான போக்கிய வஸ்துக்களை வெளியிலே உண்டாக்கி, அவற்றை அநுபவிக்கிற இந்திரியங்களை நம்மிடம் வைத்திருக்கிறார். எனவே, நாம் அநுபவிப்பதை எல்லாம் அவருக்குச் சமர்ப்பித்துவிட்டே உபயோகித்துக் கொள்ள வேண்டும். உண்மையில் அவருக்கே என்றா அன்னத்தைக் கொடுத்து விடுகிறோம்? வெறுமே அவரிடம் காட்டுகிறோம். பிறகு நாம்தான் புசிக்கிறோம். நைவேத்தியம் செய்தால் ஸ்வாமி எங்கே சாப்பிடுகிறார் என்று சிலர் கேலியாகக் கேட்கிறார்கள். நிவேதனம் என்றால் ஸ்வாமியைச் சாப்பிடச் செய்வது என்று அர்த்தமே இல்லை. அவருக்குச் சாப்பிட்டு ஒன்றும் ஆகவேண்டாம். நம் நினைவைச் சுத்தமாக்கிக் கொள்ளத்தான் பூஜை முழுவதுமே தவிர அவருக்கு இதனால் ஆவது எதுவுமில்லை. 'நிவேதயாமி' என்றால் 'அறிவிக்கிறேன்' என்றுதான் அர்த்தமே தவிர 'உண்பிக்கிறேன்' என்று அர்த்தமல்ல. 'அப்பனே, இந்த வேளைக்கு உன் கருணையில் நீ இந்த அன்னத்தைக் கொடுத்திருக்கிறாய்' என்று அவனுக்குத் தெரிவித்துவிட்டு அவனுடைய நினைவோடு உண்ண வேண்டும். அவன் அருள் இல்லாவிட்டால் இந்த அரிசி எப்படி விளையும்? ஸயன்ஸ் நிபுணர் அரிசி வகைகளை ஆராய்ந்து பெரிய பெரிய புஸ்தகங்கள் எழுதலாம்; ஆனால் அவரால் ஒரு மணி அரிசியைச் செய்ய முடியுமா? செயற்கை அரிசி (synthetic rice) என்று ஒன்றைச் செய்ய முடிந்தால் கூட இதற்கு மூலமான கெமிகல்ஸ் ஏற்கெனவே பகவத் சிருஷ்டியில் இருந்துதானே ஆகவேண்டும்? எனவே மனிதன் செய்ததாகத் தோன்றும் எல்லாமும் கூட முடிவிலே ஈசுவரன் சிருஷ்டித்தது தான். பரமேசுவரனால் கொடுக்கப்பட்டதை அவனுக்குக் காட்டாமலே நாம் அநுபவித்தால் திருடர்களாவோம்.

எங்கும் இருக்கும் அவன், நாம் இருக்கச் சொல்லும் இடத்தில் நாம் கிரகிக்கும்படி வந்து நிற்பான். கல், மண், செம்பு முதலிய எந்த பிம்பத்தில் வைத்துக் கூப்பிடாலும் வருவான். அப்படிப்பட்ட யோக்யதையும் கருணையும் அவனுக்கு நிச்சயமாக இருக்கிறது.

அவனைப் பூஜை என்று வைத்து ஒவ்வொரு குடும்பத்திலும் கூப்பிட்டு, அவனால் கொடுக்கப்பட்டதை உபயோகிக்கிறோம் என்று அன்றாடம் அறிவிக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் ஈசுவரனுக்கு நிவேதனமாக அர்ப்பிக்கத்தக்கதைத் தவிர வேறெதையுமே நாம் உபயோகிக்கக் கூடாது என்ற பக்குவம் நாளடைவில் உண்டாகும். நல்லவர்களாவோம்!

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.**

பணிவும் அச்சமும் கலந்து ஒலித்தன.

"ஆம் பூங்கோதை. சம்புவரையனும் மலையமானும் வயது முதிர்ந்தவர்கள். காடவராயன் வெறும் மூர்க்கன். தலைமை வகித்து நடத்த திறமையான தலைவனில்லாத எதிரிப் படையில் வீரர்களின் எண்ணிக்கையாவது அதிகமிருந்தால்தான் இளைய பாண்டியருக்குப் போரில் ஒரு சுவாரசியம் இருக்கும்" என்றார் துறவியார்.

பூங்கோதையின் முகத்தில் சிந்தனை படர்ந்தது. சற்றுக் கழித்து வினவினாள். "துறவியாரே, தொண்டை நாட்டில் காகதீயர்கள் இருப்பதாகக் கூறினீர்களே? அவர்களிடமிருந்து காஞ்சி மண்டலத்தை எப்படி மீட்கப் போகிறீர்கள்?"

"ஆம் பூங்கோதை, காஞ்சியையும் தொண்டை மண்டலத்தையும் மீட்க வேண்டும். காகதீய மன்னன் கணபதியும் அவன் சார்பாக காஞ்சியை ஆளும் விஜயகண்ட கோபாலனும் சாமான்யமானவர்கள் அல்ல. காகதீயர் படைபலம் பெரிதுதான். அதைத் திறமையுடன் நடத்த ஒரு தலைவியுமிருக்கிறாள் அங்கு" என்றார் துறவியார்.

"படைகளை நடத்த தலைவியிருக்கிறாளா?" பூங்கோதையின் குரலில் வியப்பு கொப்பளித்தது.

"ஆம். காகதீய மன்னனின் மகள். ருத்ராம்பாள். பெயருக்கேற்றபடி ரௌத்திரமானவள். அரசு நிர்வாகமும் ராஜதந்திரமும் பயின்றவள். பல முறை போசளருடனும் வடக்கே யாதவருடனும் போர்களை நடத்தியவள்" என்ற துறவியார் சற்று நிதானித்து பூங்கோதையை உற்று நோக்கினார். அவர் முகத்தில் இலேசாக விஷமம் படர்ந்தது. "ஆதித்யனை அவளிடம் தான் அனுப்ப எண்ணியிருக்கிறேன்" என்றார் விஷமம் குரலிலும் ஒலிக்க.

"ஆம் பூங்கோதை. ஆதித்யனை தஞ்சைக்கு வரும்படி நான் அழைத்திருப்பதே அதற்காகத்தான்" என்றார் துறவியார் அமைதியாக. அடுத்து அவர் முகத்தில் பெரும் சிந்தனை படர்ந்தது. பூங்கோதை தொடர்ந்து கேட்ட எந்தக் கேள்விக்கும் அவரிடமிருந்து சரிவர பதிலேதும் கிடைக்கவில்லை. அவள் தவிப்பைக் கவனித்தும் கவனிக்காதவராக சற்று நேரம் ரசித்த துறவியார், தாம் மீண்டும் காடவ மன்னனைக் காணச் செல்வதாகக் கூறிவிட்டுக் கிளம்பினார்.

அதே சமயத்தில், சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் ஏற்பட்டுக் கொண்டிருந்த மாறுதல்களை ருத்ராம்பாளிடம் தெரிவிக்க, காகதீய ஒற்றன் ஒருவன் பறந்து கொண்டிருந்தான்.

ஒருமுறை ஸ்நானம் செய்வதாலேயே சகல

பாவங்களையும் போக்கி விடும் என்று நம்பப்பட்டதால் பாவநாசினி என்று அழைக்கப்பட்டது அந்த நதி. மலையிலிருந்து அது இறங்கிய வேகத்தில் இருகரைகளிலும் வனங்களையும் சோலைகளையும் சிருஷ்டித்தபடி கீழ்த் திசையை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தது. கருடன் தவம் புரிந்து பெரிய திருவடியாகும் பாக்கியத்தைப் பெற்றதால் கருடாசலம் என்றும், "சென்று காண்பதற்கரிய சிங்கவேள் குன்றம்" என திருமங்கை மன்னனால் மங்களாசாசனம் செய்யப்பட்டதும், கோபில மகரிஷி தவம் புரிந்து பரமபதத்தை அடைந்ததால் அகோபிலம் என்றும் அழைக்கப்பட்ட இடத்துக்கு மக்கள் நடந்தும், மாட்டு வண்டிகளிலும் சென்று கொண்டிருந்தனர். அந்தக் கூட்டங்களில் தமிழரும் தெலுங்கரும் மட்டுமின்றி வடநாட்டவரும், சீனரும், கடாரத்தவரும் கூடத் தென்பட்டனர். அயல் நாட்டவரும் கூட அந்த சிங்கவேள் குன்றத்தை நாடி வரத் தகுந்த காரணமிருக்கவே செய்தது.

பல நாட்டுப் பொற்காசுகள் குவிந்ததால் கனகபுரியென்றும் பிற்காலத்தில் மோட்டுப் பள்ளியென்றும் அழைக்கப்பட்ட வணிகத்தலம் அகோபிலத்திற்குச் சில காதங்களே தள்ளியிருந்தது ஒரு காரணம். சிங்கவேள் குன்றத்துப் பெருமாளை வந்து வணங்கிவிட்டுத் தொடங்கும் வணிகம் இரு மடங்கு லாபத்தைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை இன்னொரு காரணம்.

மலையை நோக்கி நடந்து கொண்டிருந்த வணிகர் கூட்டமொன்றில் அவர்களுடன் சகஜமாக சிரித்து உரையாடியபடியே வந்து கொண்டிருந்தான் ஒரு வாலிபன். அவனது அகன்ற நெற்றியையும் கூர் விழிகளையும் முகத்தில் தெரிந்த ராஜகளையையும், இளம் மல்லனைப் போன்ற கம்பீரமான உருவத்தையும் கவனித்த வணிகர்கள், அவனிடம் தனியானதொரு மதிப்பையும் அன்பையும் காட்டிப் பேசியபடி வந்து கொண்டிருந்தனர். அவனது வேக நடைக்கு ஈடு கொடுத்து உடன் வந்து கொண்டிருந்தார் சீனத்து முதிய வணிகர் ஒருவர். வெண் மேகத்தைப் பிய்த்து ஒட்டவைத்தது போலிருந்த தலை முடியும் நீண்ட தாடியும் முதுமையைக் காட்டினாலும், உறுதியான உடலமைப்பும் அந்த முதியவரின் தீட்சண்யமான விழிகளும் அவர் முதுமைத் தோற்றத்திற்கு மாறாகவே இருந்தன. அந்த வாலிபனை நெருங்கிய முதியவர் அவனைப் பற்றி விசாரிக்கவும் தொடங்கினார்.

"தம்பி, இந்த மலைக்கு முதன்முறையாக வருகிறாயா?"

"இல்லை முதியவரே. பலமுறை வந்திருக்கிறேன். ஆனால் இம்முறை வந்திருப்பதில் கொஞ்சம் விசேஷமிருக்கிறது'' என்றான் வாலிபன்.

"என்ன விசேஷம்?"

"முதியவரே, கல்விக்காகவும், பயிற்சிக்காகவும் தமிழகம் சென்ற நான் நான்கு ஆண்டுகளுக்குப் பின் திரும்புகிறேன். எங்கள் குல வழக்கப்படி இங்கு வந்து சிங்கவேளை சேவித்த பின்னரே எனது நாட்டுக்குத் திரும்ப வேண்டும்."

"தமிழகத்தில் யாரிடம் பயிற்சி பெறச் சென்றாய்?"

"ஆரியச் சக்கரவர்த்தி கிருஷ்ணமல்லரிடம்" என்ற வாலிபனை ஒரு முறை ஏறிட்ட சீனத்து முதியவர், ஏதோ புரிந்ததற்கடையாளமாகத் தலையசைத்துக் கொண்டார். அடுத்து அந்த சீனத்து முதியவரிடமிருந்து வந்த கேள்வி அந்த வாலிபனின் வேக நடையை சட்டென்று நிறுத்தவும் செய்தது.

"தம்பி, நீ யாதவ நாட்டைச் சேர்ந்தவன் தானே?" என்று கேட்ட சீனத்து முதியவரை வியப்புடன் ஏறிட்ட வாலிபன் ஏதோ கேட்பதற்கு முயன்றான், ஆனால் அவனிடமிருந்து சொற்கள் ஏதும் வெளிவரும் முன் நெருங்கி விட்ட மலையடிவாரத்திலிருந்து எழுந்த கூச்சல் அவனது கவனத்தைத் திருப்பியது.

மலையின் உச்சியை நோக்கி ஏறிய படிகளில் நின்றிருந்த காகதீய வீரர்கள், வணிகர்



"நமக்கு இல்லாட்டாலும் போகட்டும், மாட்டுக்குத் தண்ணி காட்டுங்கன்னு சொன்னேனே, கேட்டீங்களா?"

"என்னாச்சு?"

"பால் பவுடரா கறக்குதுங்க!"

— ஆர். வசந்தகுமார்

களையும் மக்களையும் மேலே செல்லவிடாமல் தடுத்து நிறுத்தியிருக்க, பெரும் வாக்குவாத மொன்றும் நடந்து கொண்டிருந்தது அங்கே. அந்தக் காட்சியால் புருவங்களை சுருக்கிய வாலிபன், தன் அகன்ற தோள்களை ஒருமுறை குலுக்கியபடி வீரர்களை நோக்கி விரைந்தான். அதே வேகத்தில் வணிகர்களை விலக்கி முன்னால் வந்தது மட்டுமின்றி வீரர்களைக் கடந்து படிகளில் ஏறவும் முற்பட்டான்.

வீரர் தலைவனின் நீண்ட வாள் உறையிலிருந்து வெளிப்பட்டு வாலிபனைத் தடுத்தது. "இப்போது மேலே செல்லக் கூடாது" என்ற உத்தரவும் பிறந்தது வீரர் தலைவனிடமிருந்து.

வீரர் தலைவனையும் பின்னால் நின்ற இருபதுக்கும் குறையாத வீரர்களையும் நோக்கி அலட்சியப்பார்வையொன்றை வீசிய வாலிபன், "ஏன் செல்லக்கூடாது?" என்று ஒரு கேள்வியையும் எழுப்பினான்.

"உன்னிடம் காரணத்த விளக்க வேண்டிய அவசியமில்லை. யாரையும் மேலே செல்ல அனுமதிக்கக் கூடாதென்று உத்தரவு. அவ்வளவே!" என்றான் வீரர் தலைவன்.

வாலிபனின் கண்கள், வீரர் தலைவனைச் சுட்டுவிடுவது போல் பார்த்தன. "யார் உத்தரவு?" கேள்வியும் உஷ்ணத்துடன் வந்தது.

"சொல்ல உத்தரவில்லை" என்ற வீரர் தலைவனை இடித்துத் தள்ளாத குறையாக விலக்கிய வாலிபன், இரண்டு படிகளைக் கடந்து ஏறினான்.

அடுத்து வீரர் தலைவன் வாள் மட்டுமின்றி உடன் நின்ற வீரர் நால்வரது வாட்களும் ஏக காலத்தில் வாலிபனின் கழுத்தல் பதிந்தன.

வாட்கள் பதிந்த மறு கணம் வாலிபன் விழிகளிலிருந்த உஷ்ணம் மறைந்து பெரும் நிதானம் அவற்றில் படர்ந்தது. அதே நிலையில் வீரர் தலைவனை நோக்கித் திரும்பியவன், "வீரர் தலைவனே! தகுந்த காரணமின்றி, ஆண்டவனை சேவிக்கச் செல்லும் அடியார்களைத் தடுக்கும் உரிமையை உனக்கு யார் அளித்தது?" என்றான்.

வாலிபனின் முகத்தில் திடீரெனப் படர்ந்த நிதானமும் அவன் நின்ற தோரணையும் அவன் கேள்வியை வீசிய விதமும் வீரர் தலைவனைச் சற்று அசர அடித்ததால், சிறிது நிதானித்து விட்டுக் கூறினான்: "வாலிபனே, இளவரசியார் வந்து கொண்டிருக்கிறார். அவர் வந்த பின் நீங்கள் அனைவருமே செல்லலாம். சற்றுப் பொறு."

வாலிபனின் பதில் அலட்சியமாக வந்தது. "ஆண்டவன் சன்னிதியில் இளவரசியும் ஒன்று தான். இந்த ஏழையும் ஒன்றுதான். எங்களைத் தடுக்காதே" என்றான் வாலிபன். உடன் வந்த வணிகர் கூட்டமும் வாலிபனுக்கு ஆதரவாகக் கூச்சலிட ஆரம்பித்தது. வீரர் தலைவனை ஒரு முறை உற்றுப் பார்த்த வாலிபன், தொடர்ந்து படிகளில் ஏற ஆரம்பித்தான்.

அடுத்து நிகழ்ந்தது, பிரளயம்! கழுத்தில் பதிந்திருந்த வாட்களை வெகு அலட்சியமாகத் தட்டிவிட்ட வாலிபனின் கரம் நீண்டு வீரர் தலைவனின் தோளைப் பற்றியது. பற்றிய வேகத்தில் ஒரு சுழற்றலில் அவனைப் படிகளின் ஓரங்களை நோக்கிப் பறந்து சென்று விழ வைத்தது!

அருகில் நின்று வாளை உயர்த்திய மற்றொரு வீரனின் கரம், பலமாகப் பற்றப்பட்டு எதிர்ப்புறமாகத் திருப்பப்பட்டு, 'மளுக்'கென்ற ஓசையும் எழுந்தது. அடுத்த வீரனும் திடீரென்று ஆகாயத்தில் பறந்து வணிகர் கூட்டத்தை நோக்கி ஜிவ்வென்று இறங்கினான்.

மற்ற வீரர்கள் வாட்களை உருவிக் கொண்டு எச்சரிக்கையுடன் வாலிபனைச் சூழ முற்பட்டனர். வாலிபனும் தன்னைச் சூழ்ந்து கொள்ள முற்பட்ட வீரர்களை ஏதோ ஓடிவரும் ஆட்டுக்குட்டிகளை ஆசையுடன் எதிர் நோக்கும் வேங்கையைப் போல ஒரு பார்வை பார்த்து விட்டு, தனது கரங்களை உயர்த்தினான்.

அதே நிலை நீடித்திருந்தால் சிங்கவேள் குன்றத்தின் திருப்பங்களில் என்ன நிகழ்ந்திருக்குமோ தெரியாது!

ஆனால் "நிறுத்து!" என்று அதிகாரத்துடன் பலமாக ஒலித்த குரலொன்று அனைவரையும் உறைய வைத்தது. திரும்பிய வாலிபனின் எதிரில், மேலிருந்து வளைந்து திரும்பி இறங்கிய படிகளில், இடையில் பதித்த கரங்களுடனும் கனல் பறந்த விழிகளுடனும் வெகு உக்கிரத்துடன் நின்றிருந்தாள் காகதீய இளவரசி ருத்ராம்பாள்!

(தொடரும்)

# சுஜாதா பக்கம்



திரைப்படங்களுக்கு அனுமதிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரி (சென்சார் என்கிற வார்த்தை தற்போது வழக்கில் இல்லை) ஞான ராஜசேகரன் ஐ.ஏ.எஸ்., கட்டாயமாக வருஷத்துக்கு நூறு படம் பார்க்கிறார். 'மோகமுள்' போன்ற மென்மையான நாவலை சிரத்தையுடன் திரைப்படமெடுத்து சிறந்த முதல் படத்துக்கான விருது வாங்கியவருக்கு இது ஒரு விதமான தண்டனைதான்.

"அந்தப் பொண்ணு ரேப்பாயிடுச்சுங்களா அதுக்கப்புறம்? என்று கதை கேட்கும் அளவுக்கு மென்மை உணர்ச்சிகள் மரத்து விடுகின்றன" என்கிறார். ராஜசேகரன் கொடுக்கும் ஒரு புள்ளி விவரம் கவனிக்கத்தக்கது.

"இந்தியாவில் உள்ள அத்தனை தியேட்டர்களும் வருஷம் பூராவும் எல்லா காட்சிகளும் ஹவுஸ்ஃபுல்லா படம் காட்டறாங்கன்னே வெச்சுக்கங்க. அதில இருக்கிற டோட்டல் கலெக்ஷனும் இந்த இண்டஸ்ட்ரில அவங்க முதலீடு செய்யற பணமும் ஒண்ணுதாங்க. மொத்தமா பார்க்கப் போனா இது முதலீட்டினால லாபம் எதுவுமே இல்லாத இண்டஸ்ட்ரி. நூறு படத்தில சுமார் அஞ்சு படம் வெற்றி பெறுது. அது எந்த வகையான அஞ்சு படம்ங்கறதுதான் வருஷா வருஷம் வேறுபட்டு, இவங்களைப் பைத்தியமா அடிக்குது.

"நான் கேக்கறது, எதுக்கு நூறு படம்? வருஷத்துக்கு நல்லதா ஒரு பத்து, இருபது படம் எடுத்தாப் போதாதா? அதை வெற்றிகரமா செய்து ரிப்பீட் ஆடியன்ஸைக் கொண்டு வரலாமே.

"அஸ்ஸாமிய மொழில சில மிக நல்ல படங்கள் வந்திருக்கறதுக்குக் காரணம் அவங்க வருஷத்துக்கு அஞ்சு படம்தான் யோசிச்சு நல்லா ஸ்க்ரீன்ப்ளே எழுதி எடுக்கறாங்க."

ராஜசேகரனின் கணக்கை நம் வாசகர்கள் யாரேனும் சரிபார்க்கலாம். அவர் குறிப்பிட்ட மறைமுகமான செய்தி- சினிமாத் தொழிலில் பெரும்பான்மையினரின் நஷ்டம்தான் சிறுபான்மையினருக்கு லாபம் தருகிறது என்பதுடன் ஒத்துப் போகத் தோன்றுகிறது.

என்.எப்.டி.சி. போன்ற நிறுவனங்கள் ஆரம்ப காலத்தில் நல்ல சினிமாக்களை வெளிப்படுத்துவதில் வெற்றி பெற்றாலும் தற்போது கணக்குக் காட்டுவதிலும் சரியான வவுச்சர்கள் காட்டுவதிலும்தான் அவர்கள் கவனம் இருக்கிறதே தவிர க்ரியேட்டிவிட்டி பற்றி கவலைப்படுவதை நிறுத்தி விட்டார்கள். அவர்களும் பணம் பண்ணும் விளையாட்டில் கலந்து கொண்டுவிட்டதால் இந்த நிலை. அவர்கள் வழங்கும் பணமும் போதாது.

" 'மோக முள்' போன்ற படத்தை நான் கேரளாவில் பணிபுரியும் போதுதான் எடுத்திருக்க முடியும். கேரளாவில் பொதுவாகவே கலை வளர்ச்சியைப் பற்றி அக்கறை உள்ளவர்கள் அதிகம். மக்களிலும் சரி; சர்க்காரிலும் சரி. ஒரு மோசமான படத்தை ஒரு மலையாளி இரண்டரை மணி நேரம் உட்கார்ந்து பார்த்து விட்டுத்தான் கடைசியில் குப்பை என்பான். தமிழர்கள் அப்படியில்லை. பத்து நிமிஷத்துக்கு அவன் எதிர்பார்த்த பரபரப்பு கிடைக்கவில்லை என்றால் எழுந்துபோய்விடுகிறான்.

"அண்மையில் மிக பிரம்மாண்டமாகத் தயாரிக்கப்பட்ட, எதிர்பார்க்கப்பட்ட படம் முதல் நாளிலேயே தோல்வி தழுவியது. அது எப்படி என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. 'மோக முள்' நாவலைப் படித்தவர்கள் பலர் அதில் தத்தம் வாழ்வின் சம்பவங்களைப் பொருத்தி நினைவு கொண்டிருக்கிறார்கள். அதனுடன் படம் ஒத்துப்போகவில்லையென்றால் படம் சரியாக வரவில்லை என்று சொல்கிறார்கள். நாவலைப் படிக்காதவர்கள் படம் நன்றாக இருக்கிறது என்று சொன்னார்கள்."

பிரபலமான நாவலை படமாக எடுக்கும்போது இந்த அபாயம் எப்போதுமே இருக்கும். சத்யஜித் ராய் எடுத்த 'பதேர் பாஞ்சாலி'யை பிபூதி பூஷன் பட்டாசார்யா அங்கீகரிக்கவில்லையாம்.

ஹிட்ச்காக், பல நாவல்களைப் படமாக எடுத்தவர். இதைப் பற்றிச் சொல்லும்போது, "நான் நாவலைப் பலமுறை படித்துவிட்டு அதை கிரகித்து எனதாக்கிக் கொண்டபின் புத்தகத்தைத் தூக்கி எறிந்து விடுவேன்" என்றார்.

தினம் பத்து மணி நேரம் வீடியோ காஸட்டுகள் பார்த்து, கதை பண்ணும் நம் டைரக்டர்கள் முதலில் நாவல் படிக்க நேரம் ஒதுக்க வேண்டும்.

(மீண்டும் அடுத்த வாரம்)

# இந்தியன்





எலக்ட்ரானிக் மத்தாப்புகளும் அனிமேஷன் ஆச்சரியங்களும் இசைபோல் ஒலிக்கும் டிஜிட்டல் ஓசைகளுமாக எடுத்த எடுப்பிலேயே வேறு ஜாதிப்படம் என்று உணர்த்தி விடுகிறார்கள். கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ், ஒட்ட ஒட்ட பிழியப்பட்டு, படம் நெடுகத் தெளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ரீதியிலான மயக்கத்தை மட்டும் நம்பாமல் அதிமுக்கிய லஞ்சப் பிரச்னையை மைய நூலாக வைத்து கேளிக்கைப் பூக்களால் சரம் தொடுத்திருப்பது டைரக்டர் ஷங்கரின் சாமர்த்தியம்.

சுதந்தரப் போராட்டக் காலத்தில் சுபாஷ் சந்திரபோஸின் தீவிரப்படையில் இருந்தவன் ஹீரோ. சுதந்தரத்துக்குப் பின்னால் அரசாங்க ஆபீஸ்களின் லஞ்சக் கொள்ளையிலிருந்து இரண்டாவது சுதந்தரம் வாங்கித்தர, தனி ஆளாக அவன் போராடுவது கதை.

ஓர் எழுபத்தைந்து வயதுக் கிழவரை ஹீரோவாகக் காட்டத் துணிச்சல் வேண்டும். அடையாளம் கண்டுபிடிக்க முடியாத படிக்குக் கிழ கெட்-அப்பில் கமலஹாசன். மருந்துக்கும் சிரிக்காமல் உக்கிர பாவத்துடன் எப்போதும் உறுமினாலும் அந்தத் தலை கோதுகிற லாகவமும் விரல் சொடுக்குகிற வேகமும் கொஞ்ச நாளைக்கு இளவட்டங்களின் இரவல் மேனரிஸமாக இருக்கப் போகிறது!

மூன்று விஷயங்களுக்காக ஷங்கரைப் பாராட்ட வேண்டும். மனீஷா கொய்ராலா, ஊர்மிளா என்று இரு பெரிய வட கவர்ச்சிப் புயல்கள் படத்தில் இருந்தும் கண்ணியமாகக் கையாண்டதற்காக; அந்த அதிமுக்கிய ஃப்ளாஷ் பேக்கைத் துணிந்து அரைமணி கறுப்பு வெள்ளையில் சொன்ன தைரியத்துக்காக; திகட்டாமல் அழகுணர்ச்சியை ஆங்காங்கே பளிச்சென்று மொட்டுவிட வைத்திருப்பதற்காக.

இத்தனை இருந்தும் படத்தை சிறந்த ஒன்றாகச் சொல்ல முடியாததற்குக் காரணம், அது தருகிற மிகத் தவறான மெஸேஜ்.

தேச விடுதலைக்காக - ஒரு சாரார் ஆயுத மேந்தியதை, மிகச் சுலபமாக வியாபார அணுகுமுறைக்கு ஒரு துருப்புச்சீட்டாக்கியிருப்பது ஜீரணிக்க முடியாத விஷயம்.

லஞ்சம் வாங்குபவர்களெல்லாம் உயிரோடு இருக்கலாகாது என்று கமல் கத்தி தூக்குவதை மீண்டும் மீண்டும் நியாயப் படுத்தியிருக்கிறார்கள்.

இத்தனையும் செய்துவிட்டு, டீ.வி ஸ்கிரீனில் 'என்னை மாதிரி நீங்களும் கத்தி எடுக்க வேண்டாம்' என்று நல்லுபதேசம் செய்வது நகைப்புக்குரிய அபத்தம்.

— தரமணி

பாதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

# Plus 2 + SABHARI'S EXECUTIVE SECRETARY COURSE = GREAT CAREER



நீங்கள் +2 அல்லது டிகிரி முடித்தவுடன் நல்ல வேலைவாய்ப்பை பெற சபரியின் Executive Secretary Course மிகச் சிறந்தது. சபரி ஆறே மாதங்களில் உங்களை ஒரு நிறைவாய்ந்த Executive Secretary-யாக உருவாக்குகிறது. உயர்ந்த மதிப்புள்ள இந்த வேலைக்கு நாளுக்கு நாள் தேவை அதிகரித்துக்கொண்டு வருவதனால் மற்ற ஆஃபீஸ் வேலைகளை விட அதிகமான சம்பளமும் கொடுக்கப்படுகிறது.

சிறப்பு அம்சங்கள்

- சபரியின் வேலைவாய்ப்பு பிரிவின் உதவியுடன் கோர்ஸ் முடித்த உடனேயே வேலையில் சேருவது நிச்சயம்.
- ஆரம்ப சம்பளமே மாதம் ரூ.2500/- கிடைக்கும். ஒன்றிரண்டு வருடங்கள் அனுபவத்திற்கு பிறகு ரூ.4000 / 5000 வரை கிடைக்க வாய்ப்பு.
- ஒவ்வொரு வருடமும் இத்துறைக்கு கிட்டத்தட்ட 85,000 வேலைவாய்ப்புகள் அறிவிக்கப்படுகின்றன. ஆனால் மிகக் குறைவானவர்களே இதில் பயிற்சி பெறுகிறார்கள்.

இன்றே, இப்பொழுதே உங்கள் அருகாமையிலுள்ள சபரி மையத்தில் சென்று பெயரை பதிவு செய்யுங்கள். சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ளுங்கள்.

**NOW ALSO FOR MEN**

**எங்களிடம் பயிற்சிபெற்ற மாணவர்கள் பணிபுரியும் சில நிறுவனங்கள்**

**American Express Bank *Britannia *Hotel Chola *ANZ Grindlays Bank *ICIM *ICICI *ITC *Johnson & Johnson *Kotak Mahindra Finance *Park Sheraton Hotel *Quality Inn Aruna *SRF Ltd *Square-D Software *Synergy Finance *Taj Coromandel Hotel *Nestle India *BPL India *Singapore Airlines *Titan *Godrej & Boyce *Citi Bank *Pentafour*

"என்னுடைய ௨௨-ஆவது வயதில் நான் மாதத்திற்கு ரூ.12,000 சம்பாதிப்பேன் என்று கனவிலும் நினைத்ததில்லை."

-Ms. வீணா இராஜகோபால்,
*Working in a leading multinational bank as Senior Secretary*

FLEXI TIMINGS
Available for college students & working people

**COURSE COMMENCES ON 21-06-96**

# SABHARI
EDUCATION PRIVATE LTD

QUALITY EDUCATION for 20 YEARS

☐MADRAS: ●Adyar: 41, L.B. Road, Near Tel. Exchg., Ph-4917396 ●Ambattur OT: 216, M.T.H. Road, Next to SBI, Ph-6350179 ●Anna Nagar: 388, Poonamalee High Road, Opp. to Anna Arch, Ph-429643 ●Kodambakkam: 16, Puliyur 2nd Main Road, Trustpuram, Ph-4842647 ●Mount Road: 1, Velders Street, Mount Road, Near LIC, Ph-849069/840733/840920 ●Tambaram West: 20B, Ayyasamy Street, Ph-2366747. ☐COIMBATORE: Singapore Plaza, 5th Floor, 333, Cross Cut Road, Gandhipuram. Ph: 234450. ☐TIRUNELVELI: Nellai Plaza, 3rd Floor, 64, Madurai Road, Ph: 24833. **Soon at: Trichy**

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka